மீனாட்சி புத்தக நிலையம்

# பாசத்தீ

மேலாண்மை பொன்னுச்சாமி

Anand...

முதற் பதிப்பு : டிசம்பர் 1999
உரிமை பதிவு
மீனாட்சி 257

விலை : ரூ. 25-00

## நூலைப் பற்றி

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பாசத்தீ |
| ஆசிரியர் பெயர் | : | மேலாண்மை பொன்னுச்சாமி |
| நூலின் தன்மை | : | இரண்டு குறுநாவல்கள் |
| முதற் பதிப்பு | : | டிசம்பர் 1999 |
| தாளின் தன்மை | : | சேசாயி 10.5 kg வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 18×12.5 cms |
| அச்சு எழுத்து அளவு | : | 10 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : | 124 |
| நூலின் விலை | : | ரூ. 25-00 |
| நூலின் கட்டுமானம் | : | அட்டைக் கட்டு |
| அச்சிட்டோர் | : | கவிக்குயில் அச்சகம்<br>47, நல்லதம்பி தெரு,<br>திருவல்லிக்கேணி, சென்னை-5<br>தொ.பேசி : 8536107 |

---

MEENAKSHI PUTHAKA NILAYAM
Mayura Complex
48, Dhanappa Mudali Street
Madurai—625 001.

# பொருளடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| 1. பாசத்தீ | 1 |
| 2. செய்தது | 96 |

## ஆசிரியரின் பிற நூல்கள்

| | |
|---|---|
| காகிதம் | சிறுகதைகள் |
| சிபிகள் | ,, |
| பூக்காத மாலை | ,, |
| மானுடப் பிரவாகம் | ,, |
| பூச்சுமை | ,, |
| தாய்மதி | ,, |
| கணக்கு | ,, |
| விரல் | ,, |
| உயிர்க்காற்று | ,, |
| முற்றுகை | நாவல் |
| இனி | ,, |
| அச்சமே நரகம் | ,, |
| ஊர் மண் | ,, |
| முழு நிலா | ,, |
| ஆகாயச் சிறகுகள் | ,, |
| தழும்பு | ,, |
| கோடுகள் | ,, |
| ஈஸ்வர | ,, |
| சிறுகதைப் படைப்பின் உள்விவகாரம் | கட்டுரைகள் |

# பாசத்தீ

அந்தத் தீப்பெட்டி யாபீஸை விட்டு ராகவன் வெளியேறியபோது, மணி ஏழுக்கு மேலாகி விட்டது.

கணக்கு வழக்குகளை மேனேஜரிடம் ஒப்படைத்து விட்டு... கையெழுத்து வாங்கி முடித்து... பேரேடு நோட்டை உள்ளே வைத்தான். டிராயரை உள்ளே தள்ளிப் பூட்டினான். சாவியை உள்ளே போட்டுக் கொண்டான்.

வெளியே புறப்பட யத்தனித்தான்.

முன்னாளைய சினிமா தியேட்டர்தான் தீப்பெட்டி யாபீஸ். அகலமும் உயரமுமான வெளிக்கதவுகளை விரியத் திறந்து கொண்டு... ஒரு மஞ்சள்நிற லோடுவேன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தபோது... ராகவன் வெளியேறினான்.

வேன் வருகைக்காக உள்பக்கமாய் ஒதுங்கி நிற்கிறான். நுழைந்த வேன் வேகத்தை கட்டுப்படுத்தியது. வாசலையடைத்துக் கொண்டு நின்றுவிட்டது.

என்ஜின் மட்டும் உயிர்விடாமல் முணங்கியது.

வேன் டிரைவர் கேபினுக்குள்ளிருந்து தலையை நீட்டி, ராகவன் முகம் பார்த்துச் சிரித்தான். ராகவனே கேட்டான்.

''என்ன... ஒரு டிரிப் முடிஞ்சதா?''

''ஆமாப்பா...''

''அடுத்த டிரிப்?''

''போவணும்லே? புள்ளைக நிக்குதுக. புளிச்சிப் பம்மாதிரி கிட்டிச்சு... கொண்டுபோய்... ஊர் ஊருக்கு கொட்டிட்டு வரணும்லே?''

சலிப்பும் கசப்புமாய் டிரைவரின் குரல். யந்திர மயமாகிப் போன வேலைச்சுமை. சுமையின் அலுப்பு. 'ம்ள்ச்சூம்' என்ற சூள் கொட்டலில் மனசின் அலுப்பு முகம் காட்டியது.

''என்ன... ராகவா, ஒனக்கு வேலை முடிஞ்சதா?''

''ம்''

''மேனேஜர் இருக்காரா?''

''ம். இருக்காரு...''

பேச்சு இன்னும் தொடர்கிறது என்பதற்கு அடை யாளமாக, சோர்ந்த சிரிப்போடு தலையை மேலும் நீட்டி... இவனை நெருங்குகிற டிரைவரின் முகம்.

வேனின் என்ஜின் இரைச்சல். நாராசப்பெருஞ் சத்தமாக இரைந்து, தன் முதுமையின் மரண ஓலத்தை வெளிப்படையாகப் புலம்புகிறது. ''வுடுங்கப்பா... சாக மாட்டாம கெடக்குற என்னை ஒரு மூலையிலே முடங்கிக்கிடக்க வுடுங்கப்பா... இன்னும் போட்டு, என்னை இழுத்தடிச்சு உசுரை வாங்காதீகப்பா...''

என்று கிழட்டுக் குரலில் கெஞ்சிக் கூத்தாடுகிற மாதிரியிருந்தது, என்ஜினின் தகரடப்பாப் பேயிரைச்சல். 'தடதடா...' இரைச்சல்.

வேன் டிரைவர் தலைமுடியை இடது கையால் கோதிக் கொண்டே சிரித்தான். அவனது சிரிப்பில் தெரிகிற மஞ்சள் கறையான பற்கள். பான்பராக் பாக்குத்தூள் போட்டுப் போட்டு விழுந்த அசிங்கமான கறை. இடைவெளித் தூரத்தைக் கடந்தும், குப்பென்று வந்து தாக்குகிற பான்பராக்கின் நெடி. குமட்டலான நெடி.

''என்ன ராகவா, இம்புட்டுச் சீக்கிரமா கௌம்பிட்டயே...?''

''வேலை முடிஞ்சிருச்சு. பெறகென்ன வேலை?''

''இம்புட்டு அவசரமா... எங்க பொறப்புட்டுட்டே?''

''வீட்டுக்குத்தான். வேறெங்கே?''

''அதான் கேக்கேன்... வீட்லே போய் என்ன செய்யப் போறே? வீட்லே என்ன இருக்கு? இங்கே யாச்சும் ரெண்டு கலர் பார்க்கலாம்.''

சிரிப்போடு ஜாலியாகப் பேசி கண் சிமிட்டுகிற டிரைவர். ராகவனுக்குள் 'சுர்ர்' ரென்று ஏறுகிற கோபம். கண்ணில் கோப வெக்கை.

''அதுக்கு வேற ஆளைப் பாரு''

மனசின் உஷ்ணத்தை கங்குத்துண்டாகத் தெறிக்கிற சொற்கள்.

அசட்டுத் தனமாக சிரித்து மழுப்புகிற டிரைவர்.

''ஏங்... கலரு பாக்கக் கூடாதா?''

''கூடாதுன்னு யாரையும் தடுக்கலியே... நா''

''ஏய் ராகவா, நீ இருக்குற 'எடம்' எம்புட்டு வாய்ப்பான எடம் தெரியுமா? நாமட்டும் அந்த எடத்துலே இருந்தேன்னா... நெதம் வேட்டை நடத்துவேன். நல்ல

நல்ல உருப்படியா செலக்ட் பண்ணி, நெதம் நெதம் போட்டுத் தள்ளுவேன், தெரியுமா?''

ராகவன் டிரைவரை வெறுப்பாகப் பார்த்தான். அவனது மனசின் வக்கிரம் வழிகிற உதடுகள், கண்கள், அதுயைச் சுளிப்போடு ராகவன் பார்த்தான்.

அதற்கும் மேலே பேச்சை வளர்க்கிற டிரைவர்.

''ராகவா'' என்று கனிவும் குழைவுமாகக் கிசு கிசுக்கிற டிரைவர். இன்னும் ஏதோ ஒரு விஷமத்தை— விஷயத்தை— குறிவைத்து... பம்மிப் பதுங்குகிற தந்திர வார்த்தைகள்.

அவனது பம்மல் — பதுங்கல் — நோக்கத்தை யூகித்துக் கொண்ட ராகவன். அருவருப்பும் எரிச்சலு மாய் உதடுகள் இறுகின. உள்மன ரௌத்ரத்தை, உயர்த்தி நீட்டுகிற சுட்டுவிரலின் விறைப்பில் நிறுத்தினான்.

''இந்த மாதிரிப் பேசுற அசிங்கமான பேச்சை இன்னிக்கோட நிறுத்திக்க. ஏங்கிட்டே வைச்சுக்காதே. என்னை என்ன ஈனப்பயன்னு நெனைச்சீயா? உரல்லே சீலை சுத்தியிருந்தாலும், உத்துப்பாக்குற கெட்டசாதி மிருகம் நா இல்லே. புரிஞ்சதா? இதான்... ஒனக்கு கடைசி வார்னிங்''

ராகவன் நிற்காமல், மிச்சமிருந்த சின்ன இடை வெளிக்குள் நுழைந்து வெளியே போய்விட்டான். அவனது உருவம் போகப் போக சின்னதாகி... ஊசி யாக மாறுவதை மில்லர் கண்ணாடியில் பார்க்கிற டிரைவர்.

ஊசி ஊசியாகப் பாய்ந்த ராகவனின் சொற்கள். கனலும் கண்டிப்புமாகத் தெறித்த நெருப்புச் சிதறல்கள்.

இதெல்லாம் டிரைவரின் தோலைச் சுடவில்லை. அவமானமாய்த் தீண்டவில்லை. கனத்ததோல். சுரணைக் குறைவான எருமைத்தோல்.

ஏளனமும் இகழ்ச்சியுமாய் உதட்டைப் பிதுக்கிக் கொண்டான்.

"போடா... பேப்பயலே'' என்று ராகவனை இழிவாகத் திட்டிவிட்டு, வேனை உள்ளுக்குள் நகர்த்தினான். இரும்புக்கேட்டைப் பிடித்துக் கொண்டு நின்ற காக்கிச் சட்டை வாட்ச்மேன் டிரைவரை வாய்க்குள் திட்டினான்.

## 2

தீப்பெட்டியா பீஸ-க்கு முன்புறத்தில் ஒரு பெரிய வெட்டவெளி. அகலமான மைதானம். அதில் வரிசையாக வேப்ப மரங்கள். டியூப்லைட்டின் வெள்ளை வெளிச்சத்தில் வேப்பமரத்து இலைகளின் பச்சை, வினோதமான பசுமை நிறமாகத் தோன்றியது.

ராகவன் வெளியே வந்தான். மைதானத்தில் நோக்க மற்று தேங்கினான்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் நீளமுகட்டில் கன்றிச் சிவந்த கறுத்த மேகங்கள். நீறுபூத்த நெருப்புக் குதறலாக சிவப்பு மேகங்கள். அந்தி நேரக் கருமை. 'கரு, கரு'ன்னு மசங்குகிற நேரம்.

வேப்பமரத்தடியில் வந்து நின்றான், ராகவன். மற்ற மரங்களைப் பார்த்தான். நெளிவு சுளிவு இல்லாமல் நேரான மரங்கள். உருண்டைத்தடி, ஒரு கையால் சுற்றி வளைக்கலாம். அவ்வளவு பருமனான தடி. ஆடு அடைக்கிற கூடு மாதிரி, மரங்களின் தலைகள். ராட்சஸக் குடையை கவிழ்த்த மாதிரி. காற்றுக்குச் சலனமுற்று சலசலக்கிற இலைகள். ஒன்றிரண்டு பழுத்த இலைகள் உதிர்ந்தன. ஒரு வாழ்வு முடிந்து, மறுவாழ்வுக்

காக மண்ணின் மடியில் உடம்பைக் கிடத்துகிற பழுத்த இலைகள். மஞ்சள் இலைகள்.

டியூப்லைட்டைச் சுற்றிலும் மொய்க்கிற கொசுக்கள். சின்ன ஈக்கள். மெல்லிசான உப்பாங் காற்று. உடம்புக்குள் நுழைந்து, உள்ளத்தை வருடுகிற மயில் ரெக்கை வருடலின் சுகப்பரவல். இன்பப் புல்லரிப்பு.

அதை உணரும் மனநிலையிலில்லை, ராகவன்.

உணர்ந்தாலும்... மனசு லயித்து ரசிக்க முடியவில்லை. அவனுக்குள் ஓர் இனம் புரியாத கூச்சம். அதூயை தாளாமல் தவித்தான்.

டிரைவர் அவமானப்படவில்லை. ஆனால், ராகவன் அவமானமாக உணர்ந்தான்.

''ச்சேய்! என்ன கேள்வி கேட்டுட்டான்! நம்மளை எம்புட்டுச் சீப்பா எடைபோட்டுட்டான்! அப்படி எடை போடுற மாதிரி... நா எப்பவாச்சும் மட்டமா நடந்துருக்கேனா?''

அவனுக்குள் கொதி உணர்வுகள். நெஞ்சுக்குள் தகரத்தால் கீறியதைப் போல ஒரு காந்தல். அந்தப் புண்ணில் உப்பையள்ளிப் போட்ட மாதிரி ஒரு வலி. சுள்ளென்று உறைக்கிற வலி.

வேப்பமரத்து உச்சிக்குள் மைனாக்களின் சண்டைக் கூச்சல். உறங்க இடம் பிடிக்கிற போட்டி பொறாமைகளின் காட்டமான கூச்சல்.

ராகவனுக்குள் கோபம் கோபமாக ஜ்வாலை விடுகிற உணர்வுகள். நினைக்க நினைக்க எரிச்சல் வருகிறது.

டிரைவர் ஏளனமும் இகழ்ச்சியுமாகச் சொன்ன வார்த்தைகள். மாறி மாறி உள்ளுக்குள் வெக்கையலைகள். அதிலும் அந்த ஒற்றை வாக்கியம்.

"வீட்லே என்ன இருக்கு?"

இந்த வாக்கியம் ஒருமுள்ளைப் போல குத்திச் சொருகிக் கொண்டது, குத்திய முள்ளைச் சுற்றி ரத்தக் கசிவு. வேதனைப் பரவல்.

அந்த ஒரு வாக்கியமே, இவனது மொத்த வாழ்க்கையையும் அளந்து முடித்து... எள்ளி நகையாடு வதைப் போலிருந்தது.

மகா மட்ட ரகமான ஒரு மனிதன் கூட பல்லில் நாக்கைப் போட்டு இவனது வாழ்க்கையைப் பேசு கிறான்.

நினைக்கவே மனசு கிடந்து கொதிக்கிறது.

தனது வாழ்க்கையின் மொத்தமும் சிறுமைப்பட்டு வீழ்ந்து கிடக்கிற அவலம் 'பண்பான மனிதன்' என்று சம்பாதித்து வைத்திருக்கிற படிமச்சித்திரமே கிழிந்து கிடக்கிற கேவலம்.

மனக் கசப்போடு சிரித்துக் கொண்டான்.

டிரைவரை இவனுக்குத் தெரியும். கல்யாணமான ரெண்டாம் வருஷத்திலேயே... இவனுக்கு இன்னொரு பெண்ணுடன் தொடர்பு. அதனால் வந்த தகராறுகள். சண்டைசச்சரவுகள்.

மனைவியின் தம்பிமார்கள் தாக்கிய தாக்குதல்கள். தெருச் சண்டையாகக் கேவலப்பட்ட மல்லுக்கட்டுகள்.

வைப்பாட்டியின் உறவுக்காரர்களின் மிரட்டல்கள். அடிதடிகள். ரத்தக் காயம் வரைக்கும் போன சண்டைகள், போலீஸ் ஸ்டேஷன், வழக்கு, கட்டைப் பஞ்சாயத்துகள்... போதை வசவுகள்.

அவனது இரண்டாவது மனைவி இவன் மூஞ்சியில் காறித்துப்பிவிட்டு எவனுடனோ ஓடிப்போக...

எங்கிருந்தோ 'கூட்டி' வந்த மூன்றாவது மனைவியோடு சண்டையும் சச்சரவுமாய்—வாக்குவாதமும் சபித்தல் களுமாய் — தாம்பத்யம் நடத்துகிற அவனது லட்சணம்.

மான உணர்வுக்கு இடமேயில்லாமல்... அவமான மும் கேவலமுமே இயல்பாகிப் போய்விட்ட இழிவுத் தனமான ஒரு பன்றி வாழ்க்கை வாழ்கிற சாக்கடைப் பிராணி.

அந்தப் பிராணியும் வாயசைத்து, ''வீட்லே என்ன இருக்கு?'' என்று ஏளனமாய் கேட்கிறது என்றால்... அது எத்தனை கேவலம்? ராகவன் மனம் கொதித்தது.

## 3

தார்ரோட்டில் இறங்கினான், ராகவன். மனசின் காந்தலான நினைவுகளையெல்லாம் நெடுமூச்சாக விட்ட பெருமூச்சில் கசிய விட்டான். ஊரைநோக்கி நடந்தான்.

ஆனால்... ஊர் இங்கேயே துவங்கி விடுகிறது. ரோட்டின் இருபுறத்திலும் கட்டிடங்கள், வீடுகள், விதம் விதமான குடியிருப்புகள். குடிசை, தகரக்கூரை, கிடுகுக் கூரை... செங்கல் ஓடுகள், பங்களாக்கள் ஒன்றிரண்டு.

தார்ரோட்டின் இருபுறமும் மண் பாதைகள். மழைத் தண்ணீர் கிழித்துப் போன காயத்தழும்புகளாக— சிறுசிறு குறுக்கு வாய்க்கால்கள். அதற்கும் தள்ளி மண்வெட்டுக் கிடங்குகள். அதில் நிறைய்ய துளசிச் செடிகள். கொக்கரவாலிச் செடிகள். அள்ளியிறைத்த தங்கத் துண்டுகள் போல மஞ்சள் மஞ்சளாய்—பூக்கள். தரையெல்லாம் படர்ந்து கிடக்கிற நெருஞ்சிப் பூக்கள், மண்ணில் பூத்த நட்சத்திரங்களாக.

'கரு, கரு' வென்று மயங்கினாலும்... கன்றிச் சிவந்த மேகத்தின் வெளிச்சமாய் மங்கல் வெளிச்சம். மரணமுதுமைப் பகலின் கடைசி உயிர்த்துளி.

எதிரில் வருகிற வேன்கள், லாரிகள், ஒன்றிரண்டு பஸ்கள், எதிரும் புதிருமாய் சைக்கிள்கள், அறிமுகமான முகங்களின் நட்புப் புன்னகைகள். 'விஷ்' பண்ணுகிற கைகள்.

இவனும் 'விஷ்' பண்ணுகிறான். பதிலுக்குப் புன்னகைக்கிறான். யந்திரப் புன்னகை. சுவிட்சு போட்டால் எரிகிற விளக்கு மாதிரி, சுயமற்ற புன்னகை. வேர்த்துடிப்பு, உயிர்ச் சிலிர்ப்பு எதுவுமற்ற வெறும் புன்னகை.

தனது யந்திர மயமான செயல்பாட்டை ராகவனே உணர்கிறான். விலகி நின்று கவனிக்கிற இன்னொரு ராகவனாகக் கண்காணிக்கிறான்.

'இது சரியில்லே... பாசத்தோட... நட்போட 'விஷ்' பண்ணி சிரிக்கிற மனிதர்களுக்குச் செய்கிற மரியாதை, இது இல்லே. இது நாகரீகமில்லை... ராகவா, இது தப்பு... நிசமாச் சிரிக்கிறவங்ககிட்டே, மெஷினா சிரிக்குறது ஞாயமில்லே.

கசந்த சிரிப்பாக கைப்போடு நெளிகிற அவனது உதடுகள். மனசின் விரக்தி அதில் முகம் காட்டுகிறது.

'நெசந்தான். நாகரீகமில்லேதான்... நா என்ன செய்றது? வாழ்க்கையே யந்திரமாயிருச்சு, பாக்குற தொழில் மட்டுமில்லே... வாழ்ற ஜீவியமே யந்திரமய மாயிருச்சு. ஜீவனம் மட்டுமில்லே, ஜீவியமும் யந்திர மயம். அப்புறம்... நா மட்டும் எப்படி யந்திரத்தனமா மாறாம, மனுசனா இருக்குறது? எப்படிச் சாத்தியம்?''

ராகவனுக்கே திகைப்பு. குழப்பம்.

இது தனது நினைவா... உதடுகளின் முணு முணுப்பா? தெரியவில்லை. உதடுகள் அசைந்ததா... நாக்கு சலனமுற்றதா? ஞாபகமில்லை.

லேசாக வீசுகிற காற்று. ஆயினும் அவனுள் வியர்வை. கசகசப்பான வியர்வை. மைதாமாவுத் தூசிகளும், பசைப்பிசுக்கும்... தாள் கட்டுகள், அட்டைக் கட்டுகளை தூக்கிப் போடுகிறபோது குப்பென்று எழுந்து வந்து அப்புகிற தூசிகளும்... மின்விசிறி எவ்வளவுதான் வீசினாலும் சாஸ்வதமாக இருக்கிற புழுக்கமும்...

நாள்முழுக்க இதே நிலையில்...

சட்டையே வியர்வையில் நனைந்து, உலர்ந்து, தூசிகளும் அழுக்கும் அப்பி... வெட வெடப்பாகி...

'ச்சேய்' என்று சலித்து வருகிறது.

துவைத்து ஏழெட்டு நாட்களாகி விட்ட கறுப்பு நிறப் பேண்ட், அழுக்கிலும் வியர்வைப் பிசுபிசுப்பிலும் துவண்டு போய்க்கிடக்கிறது. மேலே போர்த்தியிருக்கிற இண்டமுள்ச் செடி மாதிரி. 'எப்படா கழற்றியெறியலாம்' என்று மனசை அலைபாய வைக்கிற அழுக்குப் பிசுக்கு. பிசுக்குச்சுமை.

மெயின்வீதி நெருங்குகிறது. கூடுதலான மனித இரைச்சல். டேப் — ரிகார்டுகளின் பாட்டுச் சத்தம். சத்தங்கள்.

''வீட்டுக்குப் போய்ட்டு... குளிச்சிட்டு வருவமா? இல்லே... சாப்டுட்டு வீட்டுக்குப் போயிருவமா?''

அவனுக்குள் முட்டிப்பாக இருந்த கேள்வி. குழப்பமான யோசனை.

வீடு... வாடகை வீடுதான். சின்னஞ்சிறு அறை. மனைவியும், குழந்தையும் தனக்காகக் காத்திருப்பார்கள் என்கிற நிஜநிலை இருக்கிறபோது, அந்த வீடு காந்தமாக ஈர்க்கிறது. ''ஓடி வா, ஓடி வா'' என்று புன்னகைக்

கிறது. அழகும் இனிமையுமாய் மென்னகை செய்து கண்சிமிட்டுகிறது.

மனைவியும் குழந்தையும் இல்லை என்கிறபோது... அந்த வீடு, வெறும் சுவர். வெறும் கதவு. உயிரற்ற கட்டிடம். சுண்ணாம்புச் சாந்துப்பிண்டம். ஓய்ந்து படுத்து உறங்குகிற மடம். அவ்வளவுதான்.

அதில் வாழ்க்கை இல்லை. ஜீவிதம் இல்லை. ஜீவித அழகும், உயிர்ப்புமில்லை.

''வீட்லே என்ன இருக்கு?'' வேன் டிரைவரின் துடுக்கான அந்தக் கேள்வி. இவனது மொத்த வாழ்க்கைச் சூன்யத்தையும் சொல்லிச் சிரிக்கிற கேள்வி. இவனது உள் வாழ்வின் அவலத்தை நடுவீதியில் போட்டு உடைத்து கேலி செய்கிற கேள்வி.

பார்வதி இருந்தால்...

ஆறு மாத உயிர்த்தங்கம் புனிதன் இருந்தால்...

இவன் எத்தனை ராட்சஸவேகத்தில் வீடு நோக்கி ஓடியிருப்பான்!

களைத்து வருகிறவனை அன்பான புன்னகையால் குளிப்பாட்டி அலுப்பைப் போக்குகிற பார்வதி. அவள் தயாராகச் சுடவைத்து வைத்திருக்கும் வெது வெதுப்பான வெந்நீர். அன்பும் பாசமுமாய் மனசைப் பகிர்ந்து கொள்கிற உரையாடல்கள்...

சோறு... சாம்பார்... ரசம்... தண்ணீர்ச்செம்பு... அத்துடன் மனசையே பரவசப்படுத்துகிற மனைவியின் அன்பு. சிரித்துச் சிரித்து எச்சில் வடித்து, உதைக்கிற ஆறுமாசப் புனிதனின் பேரழகு. அந்த வெண்ணெய்க் கட்டியை — தங்க மிருதுவை — தூக்கி மடியில் வைக்கும் போது, மனசுக்குள் பரவுகிற சந்தோஷப்பெருக்கு.

இல்லை... இல்லை... இதெல்லாம் இல்லை.

அதனால்தான் எகத்தாளமாக டிரைவர் கேட்கிறான்- "வீட்லே என்ன இருக்கு?"

அவனுக்குள் பரவுகிற சூன்ய இருட்டு. சுள்ளென்று சுட்டுத் தகிக்கிற வெறுமைப்பகீர். தனது இழப்பின் முழுமையை உணர்ந்த மனப்பயங்கரம்.

ஆளரவமற்ற வீட்டின் முடிவற்ற மௌனம். மனசுக்குள் பூதாகரமாக உயர்ந்து, முட்டிப்பிளக்கிற அசுரமௌனம். உறக்கத்தையும், நிம்மதியையும் பிடுங்கிப் பிய்த்துப் போடுகிற ராட்சஸ மௌனம். சோம்பலான, லகானிழந்த நினைவுக் குதிரையின் வாலில் கட்டியிழுபடுகிற கிழிந்த பொருளாக, இவன்.

வீடே, வேப்பங்காயாகத் தோன்றியது.

குளிக்க முடியாது... டயமாயிருச்சு. அதுக்குள்ளே மெஸ் மூடிருவாங்க. மூடுறதுக்குள்ளே சாப்புட்டாகணும். இல்லேன்னா... பட்டினிதான். ராப்பட்டினி.

குளிச்சிட்டு... துணிமணியை மாத்திட்டு வரமுடியாது. நேரமாயிரும்.

அப்ப... சாப்புட்டுட்டுப் போயிர வேண்டியதுதான்.

வேலை முடித்த களைப்போடு—அலுப்போடு—அழுக்கோடு—மனித அன்பை ஸ்பரிசிக்காத வறட்சி வெறுமையோடு... சாப்பிட உட்கார்வது என்றால்...

அது சாப்பாடா? உணவா? வெறும் தீவனம். மாடு தின்கிற கூளம். வயிற்றை அடைக்கிற ஒரு குழைவுச் சமாச்சாரம்.

"ச்சேய்! வாழ்க்கை இப்படியாகிப் போச்சே..."

அவனுக்கு மனசேயில்லை. விரக்தியும், கசப்புமாக வதைப்படுகிற உள்ளுணர்வு. வேறு வழியில்லாமல் யந்திரமாக நகர்ந்தான் ராகவன், மெஸ்ஸை நோக்கி.

பார்வதியையும், புனிதனையும் பார்க்க மனசு கிடந்து துடிக்கிறது. ஏங்கிச் சாகிறது.

## 4

கிராமத்துத் தெரு வெறிச்சிடத் துவங்கி விட்டது. காடுகரைகளைப் பார்த்து கிளம்பிவிட்ட ஊர்ஜனம். வயிற்றுப்பாட்டுக்கான பிழைப்புத் தொழில்களில் வியர்வை சிந்துவதற்கான பயணம்.

இளமதியம் நெருங்கிக் கொண்டிருந்தது. வெயில் லின் முகம் வெளுத்து விட்டது. கோப உஷ்ணமாகி விட்டது, தெருவில் ஆள் நடமாட்டமில்லை. கோழி குஞ்சு நாய்கள்தான் நடமாடிக் கொண்டிருந்தது.

தலைவாசலையொட்டிய நடையில், பார்வதி காலை நீட்டி உட்கார்ந்திருந்தாள். மடியில் புனிதன். பால் குடிக்கும் வெள்ளாட்டுக் குட்டியின் வால் ஆடுவதைப் போல... குஷியோடு உதைக்கிற பிஞ்சுப் பாதங்கள். அவன் சின்ன முகம், அவளது முந்தானைச் சேலைக்குள் மறைந்திருந்தது.

அந்தப் பிஞ்சு உதடுகளின் 'சிப்... சிப்... சிப்' மென்கிற மகிழ்வுச் சத்தம். உதடுகளின் பூப்போன்ற மிருதுவோடு அழுத்துகிற அந்தச் சுகம், தாய்மைப் பரவசப் புல்லரிப்பின் கண்சொருகிப் போய்... மயங்கித் திளைக்கிற பார்வதி.

உணர்வுலக உள்ப்பகுதிக்குள் மிதந்தலைகிற சுகத்தில் அவள்.

வெளிப் பார்வைக்கு அவள் ஏதோ நினைவில் ஆழ்ந்து லயித்துக் கிடக்கிற மாதிரித் தோன்றும்.

அதுவும் ஒரு நிஜம்தான். இடது குடங்கையில் மகனைத் தாங்கி பாலூட்டிக் கொண்டிருக்கிற பார்வதியின் வலது உள்ளங்கை, உதைக்கிற பிஞ்சுப் பாதங்களைத் தழுவி வருடுகிறது. மனதின் சகல மூலைகளையும் வருடுகிற ராகவன் புனிதனைத் தந்த புருஷன்.

டவுன் பஸ் இந்தச் சின்ன ஊருக்கு மூன்று வேளை வருகிறது. லொட லொடத்த ஓட்டை வண்டி, வெள்ளைப் பேருந்து. அலுமினியத்தேர்.

காலை பத்து மணிக்கு 'மொதப்ப்ஸ்' வரும், அந்தப் 'பஸ்ட்டைம்' பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தால், ரெண்டு நாற்பது டிக்கட். ஆலமர ஸ்டாப்பில் இறங்கி, பத்து நிமிஷம் நின்றால் போதும், ஒரு வெத்தலைப் போட்டு, மென்னுகிற நேரம்தான். அதற்குள் ஒகு பஸ் வந்து சேர்ந்து விடும். கையை காட்டி, நிறுத்தி... ஏறி நின்றால்... (பெரும்பாலும் நிற்கத்தான் முடியும். உட்கார இடமே கிடைக்காது) ஒரு ரூபாய் அறுபது காசு. லொட லொடக்கிற அந்தத் தகரடப்பா பேயிரைச் சலோடு தார்ச் சாலையில் நகரும்.

அந்தச் சின்ன டவுண் வந்துவிடும், இவள் வாழ்க்கைப்பட்ட ஊர். டவுணா, கிராமமா? ரெண்டும் தான். நகரவாசனையுள்ள கிராமம் என்றால், ரொம்பத் துல்லியமாக இருக்கும்.

ஒரே ஒரு கடைவீதி. மெயின்தெரு. ஒயின் ஷாப்... லாட்டிரிக் கடைகள்... டீக்கடைகள்... சரம்சரமாக பான்பராக்கும், போதைப் புகையிலைப் பாக்கட்டுகளும் தொங்குகிற வெத்தலை பாக்குக்கடைகள்... புரோட்டா சால்னா கடைகள்... டிபன் சென்ட்டர்... 'ராகம் இசை உலகம்' என்கிற பாட்டுப் பதிகிற ம்ஸிக்கல் சென்ட்டர்.. எஸ்.டி.டி. பூத் என்று நகரத்து வாசம் டேப் ரிகார்டுகளின் பேயிரைச்சல். தப்பு, பாயிரைச்சல், சினிமா வால்போஸ்டர்கள்...

தெருவெல்லாம் புழுதி, கரிசல்க்காட்டு வாசத்தோடு கூடிய தெருப் புழுதி. காய்ந்து உலர்ந்த நாற்றுச் சோளச் சருகுகளும், கம்மந்தட்டைத் தோகைச் சருகுகளும்... டக்கர்களின் போக்குவரத்தும்... காய்ந்த எள்ளுச் செண்டுகளின் இனிய மணமும்... கிராமத்து முகத்தைக் காட்டும்.

அந்த மெயின் வீதி, நிறையப் பஸ்கள் வந்து போகிற ஒரு பிரதானச் சாலையில் இருந்தது. அந்த வீதியைக் கடந்து உள்ளே வந்தால்—

சுத்தமான கிராமம். கந்தகமண்ணின் கிராமம்.

ஆங்காங்கே சின்னச்சின்ன தீப்பெட்டியாபீஸ்கள். பெரிய பெரிய விறகுக் குமிகள். வேலித்தூர்களின் ராட்சஸ முடிச்சுகளும், மஞ்சணத்திமரத்து சந்தன நிறத்து உள்ச்சதைகளும். குச்சியடுக்கிய கட்டைகள் வரிசை வரிசையாக வெயிலில் காய்ந்து கொண்டிருக்கும். அடிப்பெட்டிகளும் உள்ப்பெட்டிகளும் பெரிய பெரிய சாக்கு விரிப்புகளில் குமிகுமியாக உலர்ந்து கொண்டிருக்கும்.

ஊர் முழுக்க கருமருந்து நெடி வீசும். கந்தகமும் பசையும் கலந்த ஒரு நாற்றம் ஊர் முழுக்க காற்றில் ரெக்கை விரித்து திரியும்.

நாலே ரூபாய்தான். மிஞ்சிமிஞ்சிப் போனால், ஒண்ணரை மணி நேரப்பயணம்தான். நாலு ரூபாய்த் தொலைவுக்குள் தான், அந்த ஊர். புருஷன் ராகவன். வாழ்க்கை. எதிர்காலம். நிகழ்காலம். தாம்பத்யம். இன்பம். அன்பு. சுகப்பரவசம். ஆத்மதோழன் எல்லாமே.

இத்தனை கிட்டத்திலிருக்கும் 'மனுஷரைப்' பார்க்க முடியவில்லை. ஏனென்று கேட்க இயலவில்லை.

ஏக்கமும் வருத்தமுமாய் சாம்பிப் போன மனசோடு புலம்பிக் கொண்டிருக்கிற அவல நிலவரம். நினைக்க நினைக்க வருத்தமாக இருக்கிறது, பார்வதிக்கு.

## 5

நாலே நாலு ரூபாய்ச் செலவுதான். போய் இறங்கினால்... முகத்தைப் பார்த்தால்... பாசக் குதூகலமாய் பிரகாசிக்கிற ராகவன்.

''அடே... பாருவா...? வந்துட்டயா? வா, வா, வா'' என்று பரவசக் கூத்தாடுகிற ராகவனின் முகத்தில் மனசின் ஒளியைப் பார்க்கலாம். மனசு குளிர்ந்து, கண்குளிரப் பார்க்கலாம்.

''குளிச்சிட்டீகளா...'' ''சாப்புட்டீகளா?'' என்று பாந்தமும், பாசத் தலிப்புமாகக் கேட்கலாம்.

இன்னும் சரியாக கழுத்தை நிமிர்த்தாத ராசுக்குட்டி புனிதனை ''இந்தாங்க'' என்று ஒப்படைக்கலாம். அவனது ரத்தம். அவனது உயிரின் உருவம். ரத்தநிழல்.

''டேய்... டேய்... ராசுக்கண்ணு... செல்லக்கட்டி... தங்கப்பெட்டி... இந்தாடா... உங்கப்பா. கூப்புடு, கூப்புடு... 'அப்பா' அங்கங்கு... அங்கங்கு... அப்ப்ப்பா ஆ...''

எச்சில் வடிய சிரிக்கும் புனிதனின் கன்னத்தில், உதடுகளை அழுத்திக் கொஞ்சலாம்.

'தொதுக், தொதுக்'கென்று வெண்ணெய் தங்கமாக இருக்கிற புனிதனை ஆசை ஆசையாய் கைநீட்டி வாங்குகிற ராகவன்.

''ஏலேய்... ஏலேய்...'' என்று கனிந்து குழைகிற மனசின் மிருதுக்குரலில் மகனின் வயிற்றில் முகம் புதைத்து கொஞ்சிக் கிச்சலம் காட்டுகிற ராகவன்.

மென்மையான மழலையின் ஸ்பரிசத்தில் புல்லரித்துப்போகிற பரவச உணர்ச்சி. முகமெல்லாம் பரவி... உதட்டில் ஒரு பூவின் ஒளி மின்னலாய் புன்னகை செய்கிற ஆத்மதோழனின் மனமலர்ச்சியை மனசால் தொட்டுணரலாம். பிள்ளையை வைத்துக் கொண்டு, கொஞ்சிக் கொஞ்சிக் கூத்தாடுகிற புருஷனைப் பார்க்கப் பார்க்க... பிள்ளையைச் சுமந்து பெற்ற வயிறு குளிரும். பால் வார்த்த மாதிரி இனிமையை உணரும். பால் கொடுத்த திரேகமாய் புல்லரிக்கும்.

இரவின் மன்மத இருட்டில், மனசும் உடம்பும் பின்னிக் கிடந்த அந்த ஆத்மப் பேரின்ப நினைவு, அடி மனசுக்குள்... ஒரு பூவின் வாசமாய் முகம் காட்டும்.

'ஹ்ஹெ...ம், கவலைகள் சுமந்த பெருமூச்சின் நீண்ட சத்தம்.

''எதுக்குமே வழியில்லாமப் போச்சே'' என்று ஏக்கத்துடன் முணுமுணுக்கிற பார்வதியின் உலர்ந்த உதடுகள்.

பிரிவின் வெக்கை. கைக்கெட்டும் தூரத்தில் தேவ பானத்தை வைத்துக் கொண்டு, பாலைத்தாகத்தில் பரிதவிக்கிற அபாக்கியம். அவலம். நினைக்க நினைக்க, நெஞ்சுக்குள் கவிகிற சோக இருட்டு. மண்ணில் பரவும் மேகத்தின் நிழலைப் போல, மனசுக்குள் பரவி நிரப்புகிற வருத்த இருட்டின் கனம். அதன் அழுத்தம்.

மனசின் அயற்சி, உடம்பின் சோர்வாகப் படர்ந்தது. தேகமே அறுபட்ட பசுங்கொடியாக வாடித் துவண்டது. மனசின் ஆழ உணர்வுகளை அள்ளிக் கொண்டு வந்த பெருமூச்சு. நெடுமூச்சாக நீண்டு சீறிய பெருமூச்சு.

உணர்வுலகத்திலிருந்து மீண்டு வந்தாள்.

மடியில் கிடக்கிற புனிதன். இன்னும் உற்சாகமாக துள்ளுகிற அந்தப்பூ. 'சிப், சிப், சிப்' என்கிற உயிர்ச் சத்தம். அந்த மெல்லொலியில் ஒரு சிணுங்கல். எரிச்சல். பூம்பாதங்களின் உதைப்புகள்.

''ஏலேய்... சின்ன நாயி...'' என்று செல்லக்கண்டிப் பாக அவனை மென்தட்டாக அடிக்கிற பார்வதி.

அந்தப் பூப்பந்தை அப்படியே அலாக்காக தூக்கி, திருப்பிப் போட்டாள். மறுபடியும் அவனது பிஞ்சுக் காலின் துள்ளல். அந்தப் பூவின் மனக்குதூகலம். துள்ளுகிற பூம் பாதங்களை கையால் வருடி... வருடி... உள்ளங்கையால் கூட்டி 'அள்ளி'... உதட்டில் வைத்து முத்தம் கொஞ்சுகிற பார்வதி.

அவளுக்குள் ராகவனின் வாடிய முகம். உலர்ந்த உதடுகள். சீவப்படாமல் குலைந்து கிடக்கிற தலைமுடி.

''பாவம்... அந்த ஆளு! குளிச்சாரோ, குளிக்க லியோ...! துணிமணி துவைக்காம, எப்படிச் சங்கடப் படுறாரோ...! ஓட்டல்லே சாப்புட்டா... அது ஒரு சாப்பாடா? பாசமில்லாத சாப்பாடு. அன்பு குழையாத, பைசாச் சாப்பாடு. உறைப்பும், காந்தலும் குடலைப் புண்ணாக்குமே. முகம் பார்த்துச் சோறு வைச்சுக் குடுக்க நாதியத்துப் போய்... மனசு கிடந்து தவிப் பாரோ...! ஆளத்த வெறும் வீட்டுலே படுத்தா... ஒறக்கமா வரும்? நிம்மதியத்துப் போய்... மனசெல்லாம் முள்ளு முள்ளாகக் கிழிக்க... இருட்டுக்குள்ளே முழிச் சுக்கிட்டு படுத்துருப்பாரோ...!''

நினைக்க நினைக்க, உள்ளுக்குள் நீள்கிற வேதனை, பாசமனசின் உள் தவிப்பு. ''அந்தச் சின்ன வீட்டுக்குள் ராகவனும், இவளும் சேர்ந்திருந்து...

புனிதனைக் கொஞ்சி மகிழ்கிற அந்த இன்பம், ஒரு கனா மாதிரியாகிப் போயிற்றே'' என்ற நினைப்பில் வருகிற வலி. ரணம்.

'இப்படியாகிப் போச்சே' என்ற அவல நினைப்பின் முள் கிழிப்பு. நெஞ்சுக்குள் அறைகிற அவலம். மனசின் ரத்தக் கீறல்களாக வந்து சூழ்ந்த விதிக்கொடுமை. கண்ணோரங்களில் மனச்சோகத்தின் துளி முகங்கள்.

கோபமில்லை. தாபமில்லை. சண்டை சச்சரவு எதுவுமில்லை. வாக்குவாதம் எதுவுமில்லை. அடிதடி எதுவுமில்லை. வசவுகள், சாபங்கள் ஒன்றுமில்லை.

ஆனாலும்—

புருஷனும், பெண்சாதியும் ஒரு வீட்டில் ஒன்றிணைந்து வாழவும் முடியவில்லை. இது என்ன... வினோத விதிக்கொடுமையோ!

அவளுக்குள் தாறுமாறாக ஓடுகிற நினைவுகள். நோக்கமின்றி, குருட்டு ஈக்களாகச் சுற்றித் திரிகிற எண்ணங்கள்.

புனிதனின் கால்த்துள்ளல் அடங்கிவிட்டது. 'சிப், சிப், சிப்' வென்கிற உதடுகளின் உறிஞ்சும் சத்தமு மில்லை. அப்படியே கண்ணயர்ந்துவிட்டான். கீழே கிடந்த ஒரு சருகுத்துகளை எடுத்து, பிள்ளையின் மென்மையான தலைமுடியில் வைத்தாள்.

மார்பிலிருந்து புனிதனை எடுத்து... உதட்டோரத்து வெள்ளையை சேலைத் துணியால் மெதுவாக ஒற்றி எடுத்து... சோர்வான பெருமூச்சோடு எழுந்தாள். தோளில் புனிதனை கிடத்தியிருந்தாள். தொட்டிலை உதறினாள். எறும்பு எதுவுதுல்லாமல் உதறிவிட்டு, தொட்டிலில் போட்டாள்.

தொட்டிலில் கிடத்தியவுடன் விழிப்பு தட்டியவனைப் போல, மெல்ல நெளிகிற புனிதன். கலைகிற உறக்கத்தை அவனிடமே மீண்டும் சேர்க்க, தொட்டிலை ஆட்டினாள், பார்வதி.

தொட்டில் ஆட ஆட... உறங்குகிற புனிதன். உறங்கிய பின்பும், எதையோ சப்புவதைப்போல மூடின நிலையில் சலனப்படுகிற பூ உதடுகள். அசையும் உதடுகளின் மலர்ச்சலனம். அதையே பார்க்கிற பார்வதி. பாசம் முழுவதையும் கண்ணில் நிறுத்தி, கனிவோடு பார்க்கிற தாய்மை. உயிரின் ஆழத்தில் பாசநனைவு. உள்ளுக்குள் ஒரு பரவசத் ததும்பல்.

இந்த மழலையைப் பார்த்து ரசிக்க, ராகவனும் பக்கத்தில் இருந்தால்...

கன்னக்குழிகளை சின்ன உதடுகளின் ஈரமின்னல்களை—பாதப்பூக்களின் மிருதுவை அவனும் கூட இருந்து, சொல்லிச் சொல்லி... பேசிப் பேசி ரசித்தால்...

அது எத்தனை பெரிய உணர்வுக் கலப்பு. தாம்பத்ய மனச்சிலிர்ப்பு. ''அந்த இன்பம் இல்லாமல் போயிற்றே...'' என்கிற ஏக்கம், பார்வதிக்குள்.

இதை எண்ணியவுடன் மனசுக்குள் தாக்கிய சூன்யச்சோகம். ராகவ வெறுமை. சரிபாதியின் இழப்பு.

பார்வதிக்குள் என்னென்னவோ நினைவு முட்கள். அதன் குத்தல்கள். குத்தியிழுக்கிற கிழிப்புகள்.

தாயும், தகப்பனும் சேர்ந்து... தன் உதிரப்பூவைக் கொஞ்சுவதே... தனிச் சுகம்தான். கொஞ்சலைப் பகிர்ந்து கொள்வது. இல்லை, இல்லை... ரெண்டு பங்குக் கொஞ்சலைக் கொட்டுவது. கொஞ்சுகிற சாக்கில் செய்கிற குறும்புகள். கைக் குசும்புகள். மனச் சரசங்கள். உணர்வு விளையாட்டுகள்.

அவளது கன்னத்தில் — புஜத்தில் — இடுப்புச் சதையில் அவனது விரல்கள். விரல்களின் மனத்தீண்டல்கள் அதன் நடன நளினம். அதில் மனசின் துள்ளல். உடம்பின் சிரிப்பு. மனத்தின் மோகச் சிரிப்பு. உணர்வுச் சிலிர்ப்பு. உள்ளுலக லயிப்பு.

சிரிப்புச் சலங்கைகளின் மென்மையும், குறும்புமான மோதல்க் குறுக்கல்கள். மன்மதக் குலுங்கல்கள்.

அதில் உணர்வுகளெல்லாம் நெகிழ்ந்து... பூக்களாகச் சிரித்து... மலர்ந்து... வாசம் பொழிந்து... ஒளி சிந்தி... மிருதுவாகி... மென்மையாகி...

உறங்கும் புனிதனின் இரு கன்னங்களையும் வழித்து, முத்தமிடுகையில், மனசுக்குள் துல்லியமாய் உறுத்துகிற தனிமை உணர்ச்சி. தனிமைச் சூன்யம். சூன்யப்பகீர், பகீரின் அதிர்வலைகள், அதிர்வின் வலிப்பரவல்.

நெடுமூச்சு, ஒன்று, கனத்த மனச்சோகத்தை சுமந்து வெளிப்பட்டது. நெஞ்சுக்குள் முட்டிக்கொண்டு வருகிற அழுகை. அழுகையை கட்டுப்படுத்துகிற யத்தனிப்பில், அண்ணாந்து பார்த்தாள் பார்வதி.

தொட்டிலை வலது கையால் ஆட்டினாள். ஒரு சீரான ஆட்டுதல். இடது கையால் ஜாக்கட் ஊக்குகளை மாட்டினாள். மார்ச்சேலையை சரி செய்து கொண்டாள். உறங்கும் போதும் விழித்திருக்கும் பெண்மையின் உஷார்த்தனமான அனிச்சைச் செயல்.

மெல்லிய விசும்பல், அடிமனசின் ரணமாக வெடித்தது. கண்ணோரங்களின் ஈரக் கசிவைத் துடைத்துக் கொண்டாள்.

"வம்பு தும்பு எதுவுமில்லாமலேயே... தும்பம் அனுபவிக்கிற தலைவிதி... இது என்ன கொடுமையோ..."

பார்வதியின் மனப் புலம்பல். புலம்பல்கள்.

## 6

பாம்படம் போட்டிருக்கிற நீண்ட காதுகள். அந்தத் தங்க உருண்டை ஆபரணம் ஊஞ்சலாடுகிற சதைக் கயிறு. நனைந்த சணல்த்துண்டாகத் துவள்கிற அந்தக் காதுகளின் அதீதமான கால்கள்.

அந்தப் பாம்படம் ஆட, உள்ளே வந்தாள். மாரித்தாய். நரைத்த முடிகளுக்குள் ஒன்றிரண்டு கறுத்த முடிகள். வாழ்ந்த வாழ்க்கையின் ஆயுள் நாட்களைப் போல, ஏராளமான சுருக்கங்கள், திரேகத்தில்.

''என்னடி... பய ஒறங்கிட்டானா?''

''இப்பத்தான் கண் அசந்துருக்கான்.''

பார்வதியின் அசிரத்தையான குரல். அக்கறையும் ஆவலுமாய்க் கேட்ட மாரித்தாயின் துடிப்புக்குச் சம்பந்தமில்லாத, ஒட்டாத தொனி, சற்றே உள்ளே, ஆழத்தில் வெறுப்பின் கருமை நிழல்.

''என்ன ஒரு மாதிரியாயிருக்கே...?''

மனப்பாந்தத்தின் பதைப்பில் கேட்கிற கிழவியை, பார்வதி லேசான சலிப்போடு ஏறிட்டாள். 'என்னத் துக்கு இப்படித் தொண தொணக்கே?' என்று கேட் காமல் பார்க்கிற பார்வை.

''இருக்கேன்லே? போதாது?''

''என்னடி?''

''ஒண்ணுமில்லே. நல்லாத்தான் இருக்கேன்லே?''

''சாப்புட்டுட்டீயா?''

''இன்னும் இல்லே''

''ஏண்டி...... எளமதியமாயிருச்சு. இம்புட்டு நேரமா சாப்புடாம இருந்தா... எப்புடிடி? புள்ளைக்காரி. பாலு

குடுக்க வேண்டியவா. எதுக்கு குலைபட்டினியா இருக்கே?''

''பட்டினி என்ன... பட்டினி! பதறாம சாப்புடுவோம். இப்ப என்ன, கொள்ளையா போவுது?''

மாரித்தாயுக்குள் அந்தப்பதில் அவமானமாக உறைத்தது. தன்னைப் பொருட்படுத்த மறுக்கிறாள். வெறுக்கிறாள். மதிக்கவில்லை. பாசமில்லை. பிரிவில்லை. மழையாகதான் பொழிந்தாலும்... நெருப்புக் கங்காகத் தெறித்து வருகிறாள்.

அந்தக் கிழவியின் முகம் வாடிப்போய் விட்டது. கண்ணில் ஒரு வேதனை. அடிபட்ட கோழிக்குஞ்சின் ரணம்.

அவமதிக்கப்பட்ட கொதி உணர்ச்சியில் மாரித்தாயின் கை நடுங்கியது. மனப்பதற்ற நடுக்கம்.

''என்னடி பாரு...? ஏன் இப்புடிப் பேசுதே?''

கோபத்தில் கன்றிப் போன குரல். கம்மிப்போய், கரகரத்துப் போன கிழட்டுக்குரல்.

''எப்புடிப் பேசுதாக?''

''சாப்புடக்கூடாதான்னு சொன்னது ஒரு குத்தமா? அதுக்கா... இந்த எகிறு எகிறுதே? பெத்தவாங்கிற மதிப்பு, மரியாதையே கிடையாதா?''

திரும்பிப் பார்க்காத மௌனம். வேறு பக்கமாகத் திரும்பியிருக்கிற முகம். லேசான விசும்பலின் அதிர்வு. கண்ணில் வழியும் மனவேதனையை துடைத்துக் கொள்கிற கையின் அசைவு.

'மகள் அழுகிறாள்' என்றவுடன்... சர்வாங்கமும் பதறிப் பதைக்கிற மாரித்தாய். கோபம், விசனம், கண்டிப்பு எல்லாம் கணத்தில் மாயமாகிற்று.

மனசின் சகல மூலைகளிலும் பதைப்பும் பதற்றமும் பரவி நிரம்ப... ''அடிப் பாதகத்தி... என்னத்துக்கு நீ கண்ணைக் கசக்குதே? குஞ்சைக் கொத்திக் குடிக்குற கோழியும் உண்டா, உலகத்துலே? நா என்னடியம்மா செஞ்சுட்டேன்?'' என்ற அழுகையும் புலம்பலுமாய் மகளைத் தொட்டாள். தொடுகிற விரலின் நடுக்கம். நடுக்கத்தில் முகம் காட்டுகிற பெற்ற மனசு.

''ஏந்தலையெழுத்து, சோண எழுத்தாகிப் போச்சு. இதுக்கு நீ என்ன செய்வே? ஒன்னைக் குத்தம் சொல்லி என்ன ஆகப் போவுது?''

விசனப்பட்டு கசியும் குரல். கண்ணீரான உஷ்ணத் திரவக்குரல்.

பார்வதியின் திரவக்குரல். அதன் தகிப்பு. பெற்ற வயிற்றில் தீக்கோலைச் சொருகின மாதிரியிருக்கிறது. குற்ற உணர்வும், பரிதவிப்புமாக மனசு அலைபாய... அப்படியே சரிந்து உட்கார்ந்து விட்ட மாரித்தாய். குத்துக்கால் வைத்த நிலையில், சுவரில் சாய்ந்து உட்கார்ந்த கிழவி. கண்ணிலிருந்து நீர்மாலைகள்.

''இதுவும் என் தலைஎழுத்தா அடக் கூத்துவனே.., இதையும் நா கண்கொண்டு பாக்கணுமா?''

என்று அவலமாக தனக்குள் தானாக புலம்புகிற மாரித்தாய். தன்னைத்தானே நொந்து கொள்கிற அம்மா. தலையில் 'மடேர், மடே'ரென்று அறைந்து கொண்டு, அழுது அரற்றுகிற அம்மா. அறைந்த அறையில் கதி கலங்கிப் போய், நாலாபக்கமும் குலைந்து விரிந்து கிடக்கிற தலைமுடி.

எதையும் திரும்பிப் பார்க்காமல் பார்வதி. தன்னைத் தானே நொந்து கொண்டு... நனைந்து நைந்து போன காகிதச் சித்திரமாக குலைந்து போன மனநிலையில் பார்வதி.

"சாப்புட்டாரோ... குளிச்சாரோ... தெரியலே, துணி தொவைக்காம, அழுக்கும், பிசுக்குமா இருப்பாரு. வீட்டுக் குப்பையைக் கூட கூட்டிப் பெருக்க நாதியில்லை. நா உசுரோட இருந்து என்ன செய்ய? இந்த ஒடம்போட இருந்து, என்ன செய்ய? யாருமத்த அனாதையா அந்த மனுசரு, அங்க கெடந்து சீரழியுதாரு...

"கல்யாணம் முடிச்சு என்ன செய்ய? கருமாதி செய்ஞ்சு என்ன செய்ய? இருந்து வாழ விதியத்துப் போச்சே... பக்கத்துலேயிருந்து பக்குவம் பாக்கக் குடுத்து வைக்கலியே... 'முகம் பாத்து சோறு வைச்சோம், மனம் பாத்து கொழம்பு வைச்சோம்'னு ஒரத்துலே இருந்து, ஒத்தாசை பண்ண வழியில்லியே, காலைச்சுத்துன பாம்பா, தலையெழுத்து பின்னிக் கிடுச்சு. நா என்ன செய்யட்டும்? ஏந்தலையெழுத்து இப்புடியானதுக்கு, நீ என்ன செய்வே?"

கண்ணீரின் தகிப்பான புலம்பல். அம்மாவிடம் அழுது புலம்புகிற மனக்குமைச்சல்.

விசும்பலும் அடங்கின குரலின் புலம்பலுமாக இருந்தாலும், மாரித்தாயின் மனச்செவியில் வந்துவிழுகிற மகளின் கண்ணீர்ச் சொற்கள், சொற்களின் சோகத் தகிப்பு உள்மனக் கிடக்கை. தாம்பத்ய ராகத்தின் துயர சுருதி.

"இதெதுக்கு? இங்க எதுக்கு நீ இருக்கணும்? பெத்து, வளர்த்து, ஆளாக்குறதுக்கு சீரழிஞ்சு செங்கச் சுமந்த இந்தக் கெட்டுச்சிறுக்கி இனிமே எப்படியானா... என்ன? ஒத்தையிலே கெடந்து... சீரழிஞ்சா என்ன? அது என்னோட தலைவிதி. கூத்துவன் பண்ணிப் பாக்குற கூத்து. நீ நாளைக்கே பொறப்படு. ஒனக்கு ஓம் புருஷன்தான் பெரிசு. போயிரம்மா போயி... புருஷனைக் கொஞ்சு. குளுப்பாட்டு. சோறூட்டு...

நாளைக்கே நா ருவாயைத் தாரேன். அரிசி, பருப்பு பண்டம் எல்லாம் மூட்டை கட்டி வைக்கேன். புள்ளை யைத் தூக்கிக்கிட்டு... காரேறு. போய்ட்டு வாம்மா. போயி... புருஷனைக் கவனி...''

தனக்குள் தானாக அவலமும், விசனமுமாகப் புலம்புகிற மாரித்தாய். அழுகையில் மூக்கைச் சீறி சுவரில் இழுவுகிற அம்மா.

பார்வதிக்குள் மகிழ்ச்சி ஊற்று ஆனந்தப் பூக்களின் முகமலர்ச்சி இருட்டை விரட்டும் காலைச் சூரியனாக, மனசுக்குள் ஒளி சிந்துகிற நம்பிக்கை உணர்வு.

'நாளைக்குப் போயிரலாம், புருஷனைப் பார்க் கலாம்' என்ற நினைப்பே, வாழ்க்கையின் இன்ப ராகமாய் அவளுக்குள் இசை மழை பொழிந்தது. ஆனாலும் அழுகையும், புலம்பலுமாய் வட்டிலை எடுத்து, சோற்றுப்பானையைத் திறந்தாள்.

## 7

எங்கோ ஆந்தை அலறுகிற சத்தம். பனங்காடை பயத்தில் வீறிட்டுக் கத்துகிற நாராசம். 'கார்ர்ர்...கார்ர்ர்' ரென்கிற சத்தம்.

இரவின் நிசப்தத்தைக் கோடு கிழித்துக் காட்டுகிற தூரத்துச் சத்தங்கள். ஊர் அடங்கி விட்டது. ஓடி ஓடி உழைத்த சூரிய மனிதர்கள் வாழ்வின் மடிக்குள் முகம் புதைத்து உறங்குகின்றனர்.

ஆனால்... அம்மா, இன்னும் விடாமல் அழுகையும் கசிவுமாக அங்கலாய்க்கிறாள். அனுமார் வாலாக நீள்கிற அங்கலாய்ப்பு. அந்த அங்கலாய்ப்பில் சங்கிலித் தொடர் போன்ற ஒரு தொடர்ச்சி இல்லை. அலுந்து அலுந்து கிடக்கும் சங்கிலித் துண்டுகள் போல, விட்டு விட்டுத் தாவுகிற அங்கலாய்ப்பு.

அவளது மொத்த வாழ்க்கையே வரிசை தப்பிய துண்டு, துண்டுகளாய் வந்து விழுகிறது. அந்த

வாழ்க்கை முழுக்க நிறைந்து அடைத்திருக்கிற சோகம். நிராசை- துன்ப அடர்த்தி. அதைத் தாங்கி நின்ற பாச வைராக்யம்...

"ம்... ம்... ஹூம்... இருந்து என்ன செய்ய? துன்பப் பட்டு என்ன செய்ய? ரெக்கை முளைச்சுப்பறக்க ஆரம்பிச்சுட்டா... தாய்ப் பறவையோட தயவு எதுக்கு? தாய்ப்பறவையை பத்தி என்ன கவலை? அது அது பாட்டுக்கு. பறக்க ஆரம்பிச்சிரும்லே? காலம் பூராவும் ஒத்தைக்கட்டை. கெழட்டுப் பறவையானப் பெறகும் நாதியில்லே. ஒத்தைக்கட்டைதான்... சுத்தி நிக்குற சூனியத்தோட பேசிக்கிட்டு, கிறுக்கச்சி மாதிரி கெடக்க வேண்டியதுதான். வேறவழி?"

இந்த வார்த்தைகள். அம்மாவின் உள்மனச் சோகம் முழுவதும் ததும்பி நிற்கிற வார்தைகள். மனிதத்துணைக்கு ஏங்கித் தவிக்கிற கிழட்டு ஜீவனின் அபலைச் சொற்கள், பெற்ற அம்மா-வளர்த்த அம்மா வின் அபலைச் சொற்கள்.

பார்வதிக்குள் இந்தச் சொற்கள், மெழுகுக்குள் இறங்கும் தீக்கோல்களாக...

இவள் நெஞ்சே நெகிழ்ந்து-உருகிக் கனிந்து... நெக்குருகி...தாய்மைக் குழைவில் பாகாகி...

"ஐய்யோ...அம்மா..." என்று மௌனமாக அலறுகிற பாச நெஞ்சு. உள்ளுக்குள் குளிர்ப்பிரளயம். பாசப்புயல். நெகிழ்வுச் சூறாவளி.

காய்ந்து குலைந்த பரட்டைத் தலை முடியோடு ராகவன். உயர்ந்த முகத்தின் வாட்டம். கவலையும், வேதனையுமாக உறக்கமற்று சிவந்த கண்கள்.

ஆத்மதோழனின் ஏக்கம். மனசாலும் உடம்பாலும், உணர்வுகளாலும், பின்னிப் பிணைந்தவன். கொடுத்து

வாங்கியவன். வாங்கி, வழங்கியவன். கலந்து, கரைந்தவன். கரைந்து, கலந்தவன். 'வா, வா' என்று அழைக்கிற வாழ்க்கை. எதிர்காலம். கண்சிமிட்டி அழைக்கிற இன்பம். நிகழ்கால அர்த்தம். இவனின் சரிபாதி, மறுபாதி.

நெகிழ்ந்து உருகிய மெழுகுமனசை இறுக்கிப்பிடித்தாள். தாய்மைப்பாசத் தீக்கோல்களிலிருந்து... தன்னை விலக்கிக் கொண்டாள், பார்வதி.

அபலைத்தனமான அம்மாவின் அற்ப ஆசையைக் கூட, நிர்த்தாட்சண்யமாக நிராசையாக்க வேண்டியிருக்கிறதே என்ற வேதனை அந்த வேதனையை ஒரு நினைவாக நினைத்து, வருந்திவிட்டு...கடந்துவிட்டாள். வேறுவழியில்லை.

'எம்புட்டு நாளைக்குத்தான் பொறுப்பது?

"ஐயோ பாவம், அம்மா...அம்மா..." என்று பொருட்படுத்துவது? இரக்கப்பட்டு, ஆதரவாக இங்கேயே இருப்பது? அதுக்கும் ஓர் அளவில்லியா? எல்லையில்லியா?

கல்யாணம் முய்ஞ்சி, மூணு வருஷமாகப் போகுது. பத்துநாள் இங்கே, அம்மாகூட, அழுது புலம்பி...அடம்பிடிச்சு புருஷன் ஊருக்குப் போனா... ரெண்டே நாள்தான்.

'மகளைப் பாக்க வந்தேன்'னு சொல்லிக்கிட்டு அம்மா வந்து உக்காந்துக்கிடுவா. அழுதுபொலம்பி... அங்கலாய்ச்சு...மகளையும் பேரனையும் கூட்டிக்கிட்டு வந்துடுவா...அப்புறம் அங்க பத்துநாள்...

இதேதான் தொல்லை. இதுக்கு ஒரு முடிவும் இல்லே. இந்த நரகத்தை எம்புட்டு நாளைக்குத்தான் தாங்குறது? அங்க புருஷனும் அனாதையா-தானும்

மனசு புழுங்கி இங்கே...இப்படியே எத்தினி காலத் துக்குச் சீரழிஞ்சு சாகுறது?'

என்று தனக்குள் தானாக... தனக்குத்தானே ஆறுத லாக ஓடுகிற யோசனைகள். பார்வதியின் மன இழை கள். இளகும் மனசை இறுக்கிப்பிடிக்கிற எண்ணங்கள். 'வாழ்ந்து முடிச்சவளுக்காக...வாழவேண்டிய இளசுக வாழ்க்கையை தொலைக்கணுமா' என்று நினைத்துக் கொண்டாள், ஒரு தொடர்ச்சியாக.

இன்னும் புலம்புகிற அம்மா முடங்கிப்படுத்திருக் கிறாள். கையை மடித்து, தலையணையாக வைத்திருக் கிறாள். விடிவிளக்கின் மங்கலான வெளிச்சத்தில் தெரிகிற அம்மாவின் முதுகு.

அம்மாவின் புலம்பல் ஒரு தாலாட்டாக உள் மனசுக்குள் இறங்கி...மயக்கி... லயிக்க வைத்து...

பார்வதி உறங்கிவிட்டாள்.

விடிந்தது.

அம்மா பொய் சொல்லவில்லை. ஆயிரம்தான் புலம்பினாலும், அங்கலாய்த்தாலும், காரியத்தில் பின் வாங்கவில்லை.

''காருக்குப் போகணும் பார்வதி...பயலைக் குளுப்பாட்டி, நீயும் குளிச்சுக்கோ.'' என்றாள் மாரித்தாய்.

கடைக்கு ஓடினாள். அரிசி, பருப்பு, மளிகைச் சாமான்கள் வாங்கிக் கொண்டு வந்தாள். புனிதனுக்குத் தேவையான பிஸ்கட் பாக்கட்கள், உட்வர்ட்ஸ் எல்லாம் வாங்கி வந்தாள். அத்துடன் வாசனைச் சோப்பு, பவுடர் என்று எல்லாமும் தான்.

பார்வதிக்கு அம்மாவின் பாசத்தைப் பார்க்கப் பார்க்க அழுகை அழுகையாக வந்தது. சுண்டெலி

மாதிரி அவள் 'குடு,குடு' வென்று ஓடுவதும், சாமான் களை சேகரித்து பரபரத்துத் திரிவதும்...மகளுக்கான பயண எற்பாட்டில் ஒரு துரிதத்தைக் காட்டுவதும்... அதற்கிடையிலேயே...

''ஒத்தைமகா. ஒரே ஆதரவு. ஒரே உயிர்த் தொணை. அவளோட சேர்ந்து, இருந்து வாழ்றதுக்கு எனக்குக் கொடுப்பினை இல்லாமப் போச்சே...! காலம் பூராவும் நாதியத்த ஜீவனா, சீரழிஞ்சு செத்த கெழட்டுச் சிறுக்கிக்கு...அதுவே கடைசிவரைக்கும் தலையெழுத் துன்னு ஆயிப்போச்சே''

என்று புலம்புவதையும் நிறுத்தவில்லை.

அம்மாவைப் பார்க்கப் பார்க்க அழுகைபீறிட்டுக் கொண்டு வருகிறது, பார்வதிக்கு. பிரிய மனமில்லாம லேயே பயண ஏற்பாடு. உயிரைப் பறித்து தருவதைப் போன்ற ரணத்தை அனுபவித்துக் கொண்டே, மகளை அனுப்பிவைக்கிற முயற்சி.

''அம்மா...அம்மா...அம்மா...''

பார்வதிக்குள் முட்டிக்கொண்டு வருகிற அழுகை. குலைபதறி வருகிறது. நெஞ்சுக்குள். 'சிலீர், சிலீர்' ரென்று ஓடுகிற குளிரோட்டம். வருகிற கண்ணீரின் உறுத்தலை வெளிவர விடக்கூடாதே என்று அண்ணாந்து பார்த்தாள். கழுத்தை நிமிர்த்தி... முகத்தை மலர்த்தி உயரத்தில் பார்த்தாள்.

தேக்கங்கட்டைகளில் நீலநிறப் பெயிண்ட் அடிக்கப்பட்டிருந்தது. மூலைமுக்குகளில் கண்ணாடித் துணி மாதிரி நூலாம்படைகள்.

சின்னஞ்சிறு காரைவீடு. வலுவான கனத்த கற்சுவர். சதுரம் சதுரமாய் சைஸ் செய்யப்பட்ட கருங் கல்கள். அதன் வரிசை தப்பாத அடுக்கு. வரிப்பாள மாக சிமெண்டுப் பூச்சு.

ரெண்டு மூன்று தலைமுறைகளைப் பார்த்த வீடு. இன்னும் நாலைந்து தலைமுறைகளைப் பார்க்கும், ஈடு கொடுக்கும். வைரம் பாய்ந்த பழைய காலத்துவீடு.

மேலே தட்டிப்போட்டிருக்கிறது. தேக்கங்கட்டைகள் பதித்து, குத்துச்செங்கலும் சாந்தும் சொருகி...கருப்பட்டியும், ஜாதிக்காயும் போட்டு ஆட்டிய காரைச் சுண்ணாம்பினால் தளம்போட்ட மேற்கூரை. மொட்டை மாடிக்குப்போய்வர படிக்கட்டும் உண்டு.

ரெண்டே அறைகள். விசாலமான 'பத்துக்குப் பத்து' என்ற அளவிலான அறைகள். பெரிய கனத்த கதவுகள். கருங்கதவுகள். ஆள் உயரத்துக்கும் மேலான கதவுகள்.

முன்பக்கம் பெரிய வாலோடியாக ஒரு தாழ்வாரம். அதில்தான் சமையலறை, குளிப்பறை எல்லாம், அதற்கும் முன்பக்கத்தில் விசாலமான முற்றம். சுற்றுச் சுவர். உள்ளுக்குள்ளேயே அவரைப் பந்தல்.

வீடு, தாழ்வாரம், முற்றம் எல்லாவற்றையும்விட ரெண்டு பங்கு விசாலமும், கூடுதலுமான வெற்றிடம் வீட்டிற்கும் கிழக்கே. இன்னும் மூன்று வீடுகள் கட்டலாம்.

ஆற அமர விலைக்கு விற்றால் நாலு லட்சத்துக்கும் மேலே போகும். கள்ள விலைக்கு, ஆத்திர அவசரமாக விற்றாலும்கூட... ரெண்டு லட்சத்துக்கு விற்கலாம். அவ்வளவு பெரிய சொத்து மதிப்பு.

இத்தனையும் அம்பாவின் சுய சம்பாத்தியம், பார்வதி பத்தாவது வயசில், அஞ்சாப்பு படிக்கிறபோது... வாங்கின வீடு இது.

மாரித்தாயின் வியர்வை. ஓய்வில்லாத பாடு. நாதியற்றுப்போன சூன்யப் பாலையான வாழ்க்கையில், ஒரு சுனையைப் போல இனிக்கிற மகளின் வாழ்க்கை

யையாவது அர்த்தப்படுத்தவேண்டுமே என்கிற வெறி. பார்வதிக்காக என்று பறந்து பறந்து பாடுபட்டுச் சம்பாதித்தது.

பாடுபட்டு...கூலிவேலை செய்து...ஆடுகுட்டிகளை வளர்த்து...மாடுகன்றுகளை வாங்கி...புல்லறுக்க காடு காடாகச் சுற்றி...கொழை தழைக்காக யார்யாரிடமோ வசவுகள் வாங்கி... பால்விற்று...சீட்டுகள் கட்டி... தேனீ தேன் சேர்க்கிறமாதிரி நாலாதிசைகளிலும், நாலாவகைகளிலும் அலைந்து சம்பாதித்தது. மாரித்தாயின் மனவைராக்கியம்.

மாரித்தாயின் வாழ்க்கைத் தியாகம், மூளியாகிப் போன வாழ்வின் அவமானத்தையெல்லாம் ஈடுகட்ட வேண்டுமென்கிற உள்மன உத்வேகம்; போர்க்குணம்.

சும்மா வந்துவிடவில்லை, இந்த வீடு. இந்த வீடு அம்மாவின் வியர்வை, ரத்தம், சதை வாழ்க்கை, மன வைராக்கியம், ஆத்மபலம், உயிர். மகள்மீதுகொண்ட பாசம். இளம் விதவையின் போர்க்குணம். ரகசிய அவமான ரணங்களையெல்லாம் தின்று ஜீரணித்து வென்று காட்டிய வெற்றிக்கொடி

இந்த வீடு அம்மாவின் சுயசம்பாத்தியம். அவள் பெயரில்தான் பட்டா, பத்திரம் எல்லாம்.

மனம் சம்மதித்து, விரும்பி மகளுக்குத் தரவும் செய்யலாம். பெற்ற மகளுக்கு இல்லையென்றுசொல்லி விட்டு... வழியில் போகிற ஓர் அந்நியனுக்கும் தரலாம். கோவிலைச் சுற்றித் திரிகிற செவலை நாய்க்குக்கூடத் தரலாம்.

எல்லாம்...மாரித்தாயின் இஷ்டம்தான்.

ஏன் என்று கேள்வி கேட்க வயிற்றுமகள்-ரத்தப் பிறப்பு-பார்வதிக்கேகூட உரிமையில்லை. ரத்தவாரிசுக்

கும் மீறியது. சுயசம்பாத்தியம். சட்டபூர்வமான சுய சம்பாத்தியத்தை இஷ்டபூர்வமாக தானம் செய்வதை, எந்த ரத்த சம்பந்தமும் வந்து தடுக்கமுடியாது.

''பெத்தவா சம்பாத்தியம் புள்ளைக்கு இல்லியா? தாய் சொத்து சொந்த மகளுக்கு இல்லியா?''

என்கிற மாதிரியான உரிமைக் கேள்வியெல்லாம் பூர்வீகச் சொத்துக்கு எடுபடும்; சுயசம்பாத்தியத்தின் கிட்டத்தில் கூட இக்கேள்விகள் நெருங்க முடியாது.

மாரித்தாயின் மூலாதாரமும், காலாதாரமும் இந்த வீடு ஒன்றுதான்.

பார்வதி பரபரத்தாள். குளிப்பு...துணிமணி சேகரிப்பு...பைக்குள் திணிப்பு எல்லாம் மளமளவென்று நடந்தன. கண்ணுக்குள் வந்து நின்ற ராகவன் மனசின் மெல்லிய பகுதியை சுண்டி யதிரவைக்கிற இசைக் கருவியாக, ராகவ நினைவுகள். புதுப்பாவாடையை உடுத்தப்போகிற ஒரு சிறுமிக்குரிய குதூகலமும், உற்சாகப் பரபரப்பும், உல்லாச சிறகடிப்பும், பார்வதி மனசுக்குள்.

அவசர அவசரமாகச் சாப்பிட்டாள். விக்கல். மாறி மாறி விக்கல்கள்.

''தண்ணியைக் குடியேண்டி...'' என்று பாசக்கோபமாச் சீறுகிற அம்மா...

கண்ணில் நீர்ததும்ப... முகமெல்லாம் விக்கலின் கோணலும் உணர்வும் பரவ... ''அவுக நெனைப்பாக'' என்றாள் பார்வதி.

''யாரு...ஒம் மாப்பிள்ளையா?''

''ம்...பாவம்! அவுக சாப்புட்டாகளோ...என்னமோ! நா இங்க நேரா நேரத்துக்குக் கொட்டிக்கிடுரேன்.''

''போடி இவளே! நீ பொட்டச்சி. இப்புடி நெனைச்சு நெனைச்சு... வெந்து நோகவேண்டியது தான். ஓம் மாப்புள்ளை அப்படியா? ஆம்பளை. நேரா நேரத்துக்கு மூக்குப்புடிக்க கௌப்பு கடையிலே சாப்புட்டு, ராஜாப் போல இருப்பாரு...''

''போம்மா... இவரு இப்புடியில்லே, பாசத்துக்கு ஏங்குற ஆளு. நல்ல மனுசரு...''

''போடி சின்ன நாய்! ஒனக்கென்ன தெரியும்...? நேத்து ரெக்கை மொளைச்ச குருவி. ஆம்பளைக லட்சணம் என்னன்னு வாழ்ந்து பாத்து...அனுபவிச்சு... அறிஞ்ச ஏங்கிட்டே கேளு. சொல்லுதேன்...''

அம்மாவைப் பார்த்தாள் பார்வதி. மகளைப் பார்க்கும் தாயின் பார்வை. அறியாமை நிறைந்தவளை அன்பும் கருணையுமாகப் பார்க்கிற பார்வை. புண்பட்ட சிறுமியை பரிவோடு பார்க்கிற அன்னையின் பார்வை.

சின்ன வயசிலேயே கணவனை இழந்தவள். வாழ்க்கை முழுவதும் வெறுமைச் சிலுவையை-சூன்யச் சுமையை-சுமந்தவள்.

இளம்விதவையைச் சுற்றிச் சுற்றி வருகிற இச்சையும், கள்ளமுமான கசடுநிறைந்த ஆண்களையே பார்த்துப் பார்த்து வெறுத்து... அசூயைப்பட்டு... காறித் துப்பி மனம் கசந்து போனவள். சிறுவன், இளைஞன், கிழவன் என்று எல்லா வயசுக் கசடுகளை மட்டுமே பார்த்தவள்.

அம்மாவுக்கு ராகவனைத் தெரியாது. பாசமும், உரிமையுமான கணவனைத் தெரியாது. கொடுத்து

வழங்குகிற தாம்பத்ய வாத்ஸல்யத்தை, அம்மா பார்த்த தில்லை.

அம்மாவின் அறிவுக்கெட்டாத இன்ப உலகம். அவளது அனுபவ எல்லைக்குள் முகம் காட்டியிருக்க முடியாத அன்பு உலகம். பாச உலகம், காதல் உலகம். என் காலில் முள் குத்தினால், அவர் நெஞ்சில் ரண மெடுக்கும் என்கிற விந்தை உலகம். நிஜமான மன உலகம், மனக்கலப்பு உலகம், மனசும், உடலும் கலந்து ரெண்டிலும் ரசாயன விளைவுகளை நிகழ்த்து கிற உலகம்.

அம்மாவை நினைக்க நினைக்க, அம்மாவின் வாழ்க்கைச்சூன்யம், நெஞ்சைத்தாக்குகிறது. வருத்த மாக இருக்கிறது.

பத்துமணி பஸ்ஸுக்கு ஆவலும் ஆர்வமுமாய் பரபரக்கிற மகளை ஏற்றிவிட்டாள், மாரித்தாய். அப் போதும் புலம்பினாள்...

''நாந்தான்...நாதியத்த சிறுக்கி''

அம்மாவின் சோகப்புலம்பல் பஸ்ஸைத் துரத்திக் கொண்டு வருகிறது.

## 8

''எப்படா வேலை முடியும்? எப்ப வீட்டுக்குப் போகலாம்?''

ரெக்கையடிக்கிற ராகவ மனசு. அந்தப் பரபரப்பு உடம்பின் ஒவ்வொரு அணுவிலும், முள்மேல் நிற்கிற மாதிரி நிலை கொள்ளாமல் நின்றான். வேலையில் மனசு ஒட்டவேயில்லை.

'பார்வதி வந்துருக்கா...' என்ற தகவலை வந்து பக்கத்து வீட்டுச்சிறுமி சொல்லிவிட்டுப் போனதி லிருந்து, இதே தத்தளிப்பு. தடுமாற்றம், பரவசத் ததும்பல்.

இத்தனைக்கும் பார்வதி அம்மா ஊருக்குப் போய் நான்கு நாட்கள்தான் ஆகின்றன. வெறும் நாலுநாள். இந்த நான்கு நாள் வெறுமை...பார்வதி இல்லாச் சூன்யம்...வாழ்க்கையே பார்வதிதானா? வாழ்வின் அர்த்தமே பார்வதிதானா? வாழ்வின் இன்பமலரும் அவள்தானா? எல்லாமே, அவளா?

இந்த நாலு நாள்ப்பிரிவு. நான்குயுகங்கள். நரக வேதனைகள். சாப்பிட்டது ருசிக்கவில்லை. மெஸ் சாப்பாடு. அன்பு இல்லாமல், பாசம் இல்லாமல், முகம் பார்த்த பரிவில்லாமல், 'எப்படி இருக்கு' என்று ருசி பற்றிய கருத்தை முகக்குறியில் தேடுகிற உயிரில்லாமல், உயிர்த்தோழி இல்லாமல் உண்ணுகிற உணவு ஓர் உணவா? பிளாஸ்டிக் பருக்கைகள். கலர்ச்சாம்பார். யந்திரச்சோறு.

வீட்டிற்குப் போகவே தயக்கம். பயம், ஆளில்லாத அந்தச் சூனியத்தை எதிர்கொள்ளப்படும்.

டீக்கடைகளில்-பார்பர்ஷாப் பேப்பர்களைப் பார்ப்பதில்-பொழுதைக் கரைத்துவிட்டு...அந்த ஒற்றை மெயின் வீதி, வெறிச்சோடியபின்புதான்-வேறு வழியேயில்லாமல் வீட்டுக்குப் போவான்.

வீட்டுச்சாவி பக்கத்து வீட்டுப்பாட்டியிடம்தான் இருக்கும். அவள் எப்பவும் உறங்க மாட்டாள். அல்லது எல்லா நேரமும் உறங்குவாள், அவளிடம் எந்த அகால நேரத்திலும் சாவியை வாங்கலாம்.

கதவைத் திறந்து உள்ளே போனால்...

அங்கங்கே தாறுமாறாகக் கழற்றிப் போட்ட அழுக்குத்துணிகள். தூசியும் துப்பட்டைகளுமான குழப்பங்கள். மடக்கி வைக்கப்படாத மடக்குக் கட்டில். மடித்து வைக்கப்படாமல், அழுக்கும் சுருக்கங்களுமாய்

போர்வைகள். எண்ணெய் பிசுக்கான தலையணை உறைகள்.

வீடு, வீடாகத் தோன்றாது, வாழ்க்கையே சரிபாதியாக உடைந்து, நொறுங்கிக்கிடக்கிறபோது, வீடு மட்டும் எப்படி வீடாக ஒளிவீசும்? உயிர்சிந்தும்? புன்னகைமின்னும்?

குளிக்கத் தோன்றாது. மினுக்காமல் குடமும், பானையும், நீரில்லாத வெற்றுப்பாத்திரங்கள். நீர்த்துளிகள் உயர்ந்து, அதுவே கறையாக...அழுக்காக... அவலட்சணமாக...வாழ்க்கையைப்போல.

அப்படியே கட்டிலில் நீட்டி நிமிர்ந்து விடுவான். கண்களை மூடினால், வந்துசூழ்கிற இருட்டு. சுவரில் ரீங்கரிக்கிற சிள்வண்டின் இரைச்சல். அதுதவிர முழு நிசப்தம். மனிதவாடையற்ற மயானக்கனம். மௌனப் பாரம்.

தாறுமாறாக ஓடுகிற நினைவுகள். 'தறிகெட்டு ஓடுகிற எண்ணங்கள். தனிமையின் தகிப்பு தாளாமல் நல்லவிதமாகவும், கெட்ட வழியாகவும் ஓடுகிற நினைவுகள். வக்கிரமமான எண்ணங்கள். அத்தையின் மீது வருகிற கசப்பிலும், ஆத்திரத்திலும் முளைவிட்டு எழுகிற நினைவு விருட்சங்கள். கற்பனா வக்கிரம்.

''ராகவன் மருந்தைக் குடிச்சுச் செத்துட்டானே... ஐயய்யோ பாதகத்தி...! ஒன்னோட மகா தாலியறுத்துட்டா'' என்று கதறலும், அழுகையுமாய் தகவல் சொல்லுகிற பெண். அது கேட்டு ''ஐயய்யோ பாதரவே இப்படியும் கொடுமை நடக்குமா?'' என்று தலையில் தலையில் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைக்கிற மாரித்தாய்.

நெஞ்சில் அறைந்து கொள்கிற மாரித்தாய், ஊரே வெடிக்க, கதறிக்கத்துகிற மாரித்தாய். ஊரே வந்து கூடி நின்றாலும்...யாரும் அனுதாபம் காட்டவில்லை. ஆறுதல் சொல்லவில்லை.

மகளையும், மருமகனையும் சேர்ந்து வாழவிடாமல், சீரழிச்ச கெழவி. இவளுக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்'' என்று திட்டித்தீர்க்கிற ஊர்க்காரர்கள்.

மூடிய கண்ணுக்குள் ஓடுகிற காட்சிகள். கற்பனைத் தோற்றங்கள். மனக்காட்சிகள்.

அதைப் பார்த்து, நிஜமாகவே புன்னகைக்கிற ராகவன். பல் தெரியாமல் விரிந்து, மலர்கின்ற மூடின உதடுகள். ரசனையான புன்னகை.

இப்படியான காட்சிகள். கற்பனைகள். இன்னும் வெவ்வேறு விதமான நினைவோட்டங்கள். உறக்கம் ஒட்டவே ஒட்டாது. 'உறக்கம் வராது போலிருக்கே' என்கிற உலைச்சலே, உறக்கத்தை விரட்டிவிடும்.

கட்டிலில் அப்படியும், இப்படியுமாகப் புரள்வான், உருள்வான். கொசுக்கடிக்கும் காதில் — காலில் — முழங்கை முட்டில்—கன்னக் கதுப்பில் கொசு கடிக்கும். கடித்த இடத்தில் காந்தும். அரிக்கும். கொசுவுக்குப் பயந்து, போர்வையை இழுத்து மூடினால்... புழுங்கும். வியர்க்கும்.

தூங்கவே முடியாது. பார்வதி இல்லாத வெறுமை. உயிர் இல்லாத சூன்யம். மனிதக்குரல் இல்லாத அமைதி, வாழ்க்கையோ - உணர்வுகளோ - மாயமாகி விட்ட பிரமை.

அதன் வேதனைகள், மன உளைச்சல்கள். முடிவற்ற நினைவுப் பாய்ச்சல்கள். தூக்கமற்ற இரவுகள்.

சாமத்துக்கும் மேலாகிவிட்டால், வயிறு பசிக்கும். வெறும் வீட்டில் என்னத்தைத் தின்பது? குடிக்க தண்ணீர்கூட இல்லாத பாலை வீட்டில்... வீட்டுப் பாலையில்... எதைத் தின்பது?

தாங்காது. சகிக்க முடியாது. விடிந்தவுடன் முதல் வேலை, பார்வதியை கூப்பிடப் போவதுதான். அத்தையோடு சண்டை போட்டு... நாண்டுக்கிடுகிற மாதிரி. 'நறுக்; நறுக்'கென்று நாலு கேள்வியை கேட்டு விட்டு... பார்வதியை கூட்டிக்கொண்டு வரணும். புனிதனைத் தூக்கிக் கொண்டு வரணும். வாழ்க்கையை கைப்பற்றிக் கொண்டு வரணும்.

தீவிரமாய், வைராக்கியமாய் — வெறியாக — வீரதீரமாக ஓடுகிற அந்த நினைவு... கிராமத்து வீட்டில் வந்து மோதி... முகமழிந்து... சப்பளிந்து...நொறுங்கிச் சிதறும்.

பெரிய காரை வீடு. வீற்றால், நாலு லட்சத்திற்குப் போகும். ஆத்திர அவசரத்திற்கு விற்றாலும், ரெண்டு லட்சம் கை சேரும். அத்தையின் வீடு. பார்வதிக்குத் தராயல், வேறு ஒரு நாய்க்கும் தரக்கூடிய உரிமையை கையில் வைத்திருக்கிற அத்தை. பாசத்துக்கு ஏங்குகிற அத்தை.

அவள் மனம் நோகவிடக் கூடாது. அவள் உணர்வை காயப்படுத்தக் கூடாது. அவள் வருந்தி விடக்கூடாது. அவள் மனசில், வெறுப்பின் நிழல்கூட வந்து விடக்கூடாது.

மருமகனை நேசிக்கணும். பரிதாபப்படணும். அனுதாபப் படணும். "பார்வதியையும், வீட்டையும். வைச்சுக் காப்பாத்து" என்று நம்பிக்கையோடு ஒப்படைக்கணும். ஒப்படைக்கக் கூடிய நம்பிக்கை வரணும். நம்பிக்கை வருகிறமாதிரி நான் நடந்துக் கிடணும்...

இந்த நினைவு வந்தவுடன், வீம்பும், வீறாப்பும் வந்த சுவடு தெரியாமல் மறைந்துவிடும்.

வீடு என்கிற சொத்தைப் பெரிதாக நினைக்காமல், அலட்சியப் படுத்தினாலும்கூட... அத்தை என்கிற மனுசியை வெறுத்துவிட முடியாது.

பத்தொன்பது வயசில் தாயானவள். தாயாவதற்கு நான்கு மாதத்திற்கு முன்பே, விதவையானவள். மறு வருஷமே, தாயையும் இழந்தவள். ஏதுமற்றவளாகி விட்டவள், நாதியற்றவளாகி விட்டவள். கூலி வேலை யில் வயிற்றை நனைக்கவேண்டிய அவலம். வாடகைக் குடிசையில் உடம்பை கிடத்த வேண்டிய கட்டாயம். கைக்குழந்தையையும், வறுமையையும் சுமந்து கொண்டு... மனபலம் என்கிற ஒற்றை யாதரவுடன் வாழ்க்கையோடு போராடியவள். வாழ்க்கை முழுவதும் போர்க்குணத்துடன் கனன்றவள். 'மகள் பார்வதிக் காகவே சகலமும்' என்கிற அர்ப்பணிப்பு மனோபாவத் தோடு போராடியவள். வென்றவள்.

கையெடுத்து வணங்கத்தக்க தெய்வாத்மா. புண்ணிய மனுசி, அமானுசி. மாமனுசி.

அந்த மாமனுசியின் சிறுபலவீனம், பாசம், இத்தனை காலமாக எது பலமாக இருந்ததோ, அதே பாசம், இப்போது ஒரு பலவீனம். மகளைப் பிரிந்து இருக்க முடியாத பாசம். தனது மடியில் வளர்ந்த நாற்று, 'இன்னொரு தோட்டத்தில் வேர்விட்டு, தளிர்த்து, பூப்பூத்து... காய் காய்த்து... விதைகள் சிந்த வேண்டுமே' என்கிற நிஜத்தைப் புரிந்திருந்தும்... பிரிய மறுக்கிற மழலை மனசு. அடம்பிடிக்கிற தாய் மனசு. மழலைத்தனமான தாய்ப்பாசம். சிறுபிள்ளைத்தனமான நாற்றங்கால்.

அவளது அந்த மழலைத்தனமான பாசம். அந்தக் கிழட்டுத் தாயின் அடம். இது ஒரு குற்றமல்ல. குற்ற மான உணர்வல்ல. பாச உணர்வு எப்படிக் குற்ற மாகும்? எப்படித் தப்பிதம் ஆகும்? ஆனால்.

அதுதான்—

பார்வதியின் அவஸ்தை. ராகவனின் சூன்யத் துன்பம்.

## 9

கண்டக்டர் விசில் அடித்தார். அடிப்பதற்கு முன்பே, அந்த மெயின் வீதியில் ‘கட்டாயமாகஇறக்கம் இருக்கும்’ என்ற நம்பிக்கையுடன், பஸ்ஸின் வேகத் தைக் குறைத்தார் டிரைவர், புளியமரத்துக்கு அடியில் வந்து நின்றது. இரைச்சல் நிற்கவில்லை.

கைப்பிள்ளை வைத்திருக்கிற இளம்தாய் என்ற கருணையில் உட்கார இடம் கிடைத்திருந்தது' பார்வதிக்கு.

மஞ்சள்ப்பை, உப்புத்தாள்ப்பை என்று பெரிய பெரிய பைகள். பை நிறைய முண்டும் முடிச்சுமாக சரக்குகள்.

பார்வதி குழந்தையோடு இறங்கி நிற்க... ஒரு நடு வயசுக்காரர் ஒவ்வொரு பையாக தூக்கித் தூக்கிக் கொடுக்க... கண்டக்டர் அதை வாங்கி தரையில் வைத்தார்.

எல்லாப் பைகளும் பேய்க்கனம். பிசாசுக்கனம். எப்படிக் கொண்டு போய்ச்சேர்க்க என்று மலைத்தாள்.

அதற்குள் பக்கத்து வீட்டுப் பாட்டி வந்தாள்.

"அடப் பார்வதியா? இப்பத்தான் வாரீயா?"

"இந்தக் கார்லேதான் வந்தேன்..."

"இப்படியா... போனா போன எடம்னு நாலு நாளா டேரா போடுறது? நாலு நாள்லே ராகவப்பயல் காய்ஞ்சு கருவாடாயிட்டான்."

"என்ன செய்ய... பாட்டி. போன எடத்துலே அம்மாவுக்கு ஒடம்புச் சொகமில்லே. வேற வழியில் லாமப் போச்சு..."

"சரி சரி... இப்பவாச்சும் வந்தீயே... அது நல்லது. வீடான வீட்லே பொம்பளைதான் குத்துவெளக்கு. அவா இல்லாட்டா... அது வீடா? கட்டை மண்ணு தான்"

பாட்டி இங்கிதமாகவும், நலம் நாடும் மனநெருக்கத் தோடும்தான் சொல்கிறாள். ஆனால் ஒவ்வொரு சொல் லும் ஒரு குற்றச்சாட்டாக — ஓங்கிக்குத்துகிற முள்ளாக அவளுக்குள் வலிக்கிறது. பாட்டிதான் ரெண்டு மூன்று சிறுமிகளை அதட்டிக் கூப்பிட்டாள்.

"அடியேய்... சின்னச் சிறுக்கிகளா...! இங்க வாங்க... இந்தப் பைக் கட்டுகளைத் தூக்குங்க."

தோளில் தூங்கிக் கொண்டிருந்த புனிதன், மெல்ல நெளிந்தான். முழிப்புத்தட்டி தலையைத் தூக்கினான். குருவிக்குஞ்சு கண்போல சின்னக் கண்கள். உறக்கச் சடவாகவும், குழப்பமாகவும் சுற்றியுள்ள சூழலைப் பார்த்தான்.

பாட்டி அவனைக் கவனித்தாள், தலையை கவிழ்த்து...அவனது சின்ன முகத்துக்கு நெருக்கமாகக் கொண்டு போனாள்.

"ஐயா... சின்னராசா... குட்டித்தங்கம்... என்னய்யா...? இப்பத்தான் வாரீயா?... அப்பன் ஊரை உத்து உத்துப் பாக்கீயா? சீமைராசா... செல்லக்குட்டி. சக்கரைக்கட்டி... உங்க ஆச்சி

இன்னிக்குத்தான் விட்டாளா? அப்பனைப் போய்ப் பாக்கச் சொன்னாளா?''

புனிதன் முகத்துக்குப் பக்கமாய் கொஞ்சிக் கொஞ்சிச் சிரிக்கிற கிழவியின் முகம். கொஞ்சல்ப் பேச்சின் ராகத்திற்கேற்ப ஆடுகிற முகம். ஆடும் முகத்துக்கு ஏற்ப குலுங்குகிற அவளது காத்து நகை. பாம்படக் குலுங்கல்.

புனிதனுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. பல்லில்லாத பொக்கைவாய் மகிழ்ச்சியில் குலுங்கி குலுங்கி விரிய... சிரிக்கும் சிரிப்பாணியில் எச்சில் வழிந்து... பார்வதியின் புஜத்தில் விழ...

''என்னடா சிரிக்கே? சிரிப்பாணி வருதாக்கும்? அள்ளிக்கிட்டு வருதாக்கும், சிரிப்பாணி? கெழவி கேக்குறது, எனக்குச் சிரிப்பாணிக் கூத்தாவா... இருக்கு?''

பார்வதிக்குப் பின்னால் வருகிற பாட்டி. புனிதன் முகம் பார்த்து... குழந்தையோடு குழந்தையாகக் கொஞ்சுகிற பாட்டி. குழந்தையாகக் கொஞ்சினாலும்... பாட்டிக்குரிய ஆழத்தில் கொஞ்சல்ச் சொற்களுக்குள் ளேயே நெருஞ்சி முட்களை வைத்துத்தருகிற நுட்பம்...

பார்வதி வீடு வந்தாள். ஒரு சின்னத் தகரக்கதவு. பார்வதியே குனிந்துதான் நுழைய வேண்டும். சின்ன வீடு. தாழ்வான கூரை. குறுகலான சிறிய அறை.

அந்த அறையிலேயே ஒரு மூலையில் ரெண்டு அடுப்பு. பானை சட்டிகள். பண்ட பாத்திரங்கள். கட்டில், போர்வைக் குழப்பம். அம்மாவின் பெரிய வீட்டில் தாராளமாக நடந்து, விசாலமாகப் புழங்கிப் பழகிய பார்வதிக்கு, இந்த வீடு ஒரு புகைக் கூடுபோலத் தெரிகிறது. கையை அசைத்தால் கூட முழங்கை எதிலாச்சும் இடிக்கும் போலத் தோன்றுகிறது.

கதவை திறந்தவுடன்—

முகத்தில் குப்பென்று வந்து கற்றையாக மோதுகிற புழுக்க வாசனை. வௌவால் குடியிருக்கிற இடி மண்டபம் போல ஏதோ ஒரு நாற்றம். மனிதன் காலடி படாத குகைக்குரிய வீச்சம்.

பகல் நேரத்திலும் வீட்டுக்குள் முடங்கிக் கிடந்த இருட்டு. கதவைத் திறந்த பின்பும் போக மறுத்து அடம் பிடிக்கிற சோம்பலான இருட்டு.

லைட்டைப் போட்டாள். பாட்டி தொட்டில் கட்ட உதவினாள். கூடமாட துணையாக இருந்தாள். தொட்டிலில் புனிதனைப் போட்டு, பாட்டியிடம் ஒப்படைத்து விட்டு...

அழுக்கும் குப்பையுமாகிக் கிடந்த வீட்டை— தண்ணீர் பார்க்காத பானை குடங்களை — நீர்முகம் காணாத அழுக்குத் துணிகளை— விளக்குமாறு தீண்டாத தரைத் தூசிகளைப் பார்த்தாள், பார்வதி. மனசுக்குள் வந்த ஆயாசம். மலைப்பு.

தனது தாம்பத்யமே இப்படித்தான் இருப்பதாக அவளுக்குள் ஓர் உணர்வு. மனஇறுக்கம்.

மிகப் பெரிய வீடு சொந்தமாக இருந்தும் — மிகச் சிறிய வாடகைக் கூட்டுக்குள் வாழ வேண்டிய கட்டாயம். அதிலும் நிரந்தரமாக இருக்க முடியாத நிர்ப்பந்தம். நாலு நாளைக்கொரு தடவை ஊர்ப் பயணம்.

புருஷன் இருந்தும் கொண்டாட முடியவில்லை.

வாழ்க்கை இருந்தும் வாழ முடியாத விநோதம்.

''அடியே பாருவதி...''

மிருதுவான குரலில் மென்மையான அழைப்பு. மனசுக்குள் மனசான ஒரு நெருக்கமான விஷயத்தைப் பகிர்ந்து கொள்கிற மன அண்மையான அழைப்பு.

"என்ன பாட்டி...?''

"கெழடி ஒண்ணு சொல்லுவேன். தப்பா... எடுத்துக்கக் கூடாது''

''சொல்லுங்க பாட்டி''

''நீ செய்றது ஒனக்கே நல்லதுல்லேடி''

''எதைச் சொல்றீக பாட்டி?''

''இங்க ரெண்டு நாள், ஒங்க அம்மா வீட்லே பத்து நாள்னு காலத்தைக் கழிக்குறது நல்லால்லே''

"எனக்கும் பிடிக்கலே பாட்டி...''

''காலா காலத்துலே இதுக்கு ஒரு முடிவு கட்டு. இல்லாட்டி... ஒனக்கு குடும்ப வாழ்வே சிக்கலாயிரும்டி...'

"ம்''

"எப்படியோ முடிவு கட்டு... ராகவன் நல்லபய தான். இருந்தாலும் ஆம்பளை. ரொம்பச் சிரமப் படுத்துனா... அவனும் தெசை நழுவமாட்டான்னு என்ன நிச்சயம்?''

ஆழ்ந்த பெருமூச்சு விட்டாள். அதற்குள் பாட்டி ஒரு சிறுமியை கூப்பிட்டு... தாக்கல் சொல்லி யனுப்பினாள்.

''தீப்பெட்டியாபீஸ்லே ராகவன் இருப்பான். பார்வதி வந்துட்டாள்னு போய்ச் சொல்லிட்டு வாடி...''

பார்வதி வீட்டைப் பெருக்கினாள். குப்பென்று எழுகிற தூசி; நாசிக்குள் துளைத்து தும்மவைக்கிற நெடி நிறைந்த தூசி.

தண்ணீர் எடுப்பதற்கு முன்பு, குடம் பானைகளை மினுக்கினாள். பண்ட பாத்திரங்களைத் துலக்கினாள்.

எங்கோ போய் சாணம் எடுத்து வந்தாள். காய்ந்து கனல் பறந்து கிடந்த முற்றத்தில் சாணிப் பாலைத் தெளித்தாள்,

''என்னடியிது, நேரங்கெட்ட நேரத்துலே முத்தம் தெளிக்கே? பொழுது பெறப்படுறதுக்கு முந்தித்தான் தெளிக்கணும்''

''சாத்திரமெல்லாம் சரித்தான் பாட்டி... இன்னிக்கு அதைப் பாக்க முடியாது,

புழுதியும், மணலுமாய் கிடந்த முற்றம். கட்டியான சாணிப்பால் அடர்த்தியாக தெளிக்கப்பட்டது. பளிச் சென்று முகம் காட்டியது. தேனைக்கொட்டி மொழுகிய மாதிரி, அழகாக இருந்தது.

சாயங்காலச் சூரியனின் வெயிலில் முற்றத்தின் ஈரமின்னல் ஒளி சிந்தியது.

துணிமணிகளை அலசிக் காயப் போட்டாள். போர்வைகளையும் அலசிக் காயப் போட்டாள். அடுப்பை மூட்டினாள். வீட்டுக்குள் பத்திப் புகையின் நறுமணம்.

வீடு, வீடாயிற்று. குத்துவிளக்கின் வெளிச்சத்தில் ஒளிமுகம் காட்டியது. உயிர் ஒளி. வாழ்வின் உயிர். அன்பின் வாழ்வு. தாம்பத்ய அன்பு. ராகவனின் வருகையை எதிர்பார்த்து கணந்தோறும் தவித்தது, பார்வதிக்கு.

''அண்ணே... இந்தாங்க, ஏஞ்சிட்டையிலே நா எடுத்த தாள்க்கட்டுகளை எழுதுட்டீகளா?''

''ம்''

''அண்ணே... ஏங்கணக்குலே அட்டைக்கட்டு எம்புட்டு எழுதுனீக?''

''அதெல்லாம் நாளைக்கு வந்துகேளு...''

''இன்னிக்கென்ன?''

''நா வீட்டுக்குப் போவணும் அர்ஜெண்ட்''

ஸ்டோர்ரூமில் இன்னும் நிற்கிற ராகவன் புறப்படுகிற துரிதத்தில் அவன், அவனுக்கும் முன்பாக, சாலையில் இறங்கி ஓடுகிற அவன் நினைவுகள்.

வழக்கமான கேள்விகள், இன்றைக்கு நச்சரிப்பாகத் தோன்றுகிறது. எரிச்சலூட்டுகிறது. இச்சிலாத்திப் படுத்துகிறது.

அவன் சிடுசிடுக்கிறான். முகத்தில் ஏகமாய் கடுகடுப்பு. ஒரு படி காணப் பயறு போட்டாலும், பொறித்துக் கொட்டிவிடும்.

மேனேஜரிடம் விபரத்தைச் சொல்லிவிட்டு... கணக்கு வழக்குகளை முன்கூட்டியே முடித்துவிட்டு, பரபரப்பாக வெளிவந்தான். மைதானத்திற்கு வருகிற போது, வேப்பமரத்து இலைகளில் அந்திவெயிலின் தங்கக் கரைசல். ஐந்துமணி இருக்குமா...?

காக்கிபேண்ட்டும், வெள்ளைச் சட்டையுமாக மேல் நிலைப்பள்ளி மாணவர்கள். பச்சைப் பாவாடையும். நீல நிறத் தாவணியுமாக மாணவிகள். சைக்கிள்களிலும், நடையுமாக.

ஜனங்களைக் கிழித்துக்கொண்டு, வேகவேகமாக நடந்த ராகவன் உள்ளுக்குள் ஒருவித நமைச்சல்.

பார்வதி வந்து கதவைத் திறந்து பார்த்திருந்தால்... வீடு கிடக்கும் அலங்கோலங்களையும்; அழுக்கையும் பார்த்து மூகம் சுளித்தால்...

தைப்பொங்கலை-தீபாவளியை-வரவேற்பது என்றால், வீடு ஒளிமயமாகும், வண்ணமயமாகும். புது மின்னலாய் பளிச்சிடும். ஆனால் என் பார்வதியை வரவேற்பதில் என் வீடு? என் புனிதனை வரவேற்பதில்?

இருட்டும், அழுக்கும், தூசியுமாக என் வீடு.

'ச்சேய்! என்று உள்ளுக்குள் ஓர் உணர்வு. குற்ற உணர்வு, நமைச்சல், முள்ளின் உறுத்தல்.

கொஞ்சம் பொறுப்புணர்ச்சியோடு இருந்திருக்கலாம். கொஞ்சம் வேலை பார்த்திருக்கலாம், கூட்டிப் பெருக்கி, தண்ணீர் எடுத்து, துணிமணிகளை அலசிக் காயபோட்டு மடித்து வைத்து...

வீட்டை, வீடாக வைத்திருக்கலாம், நா ஒரு மடப்பய. தின்னிக் கழுதை. ஒறக்கம் புடிச்ச சோம்பேறிப் பய. தன்னைத்தானே திட்டிக்கொண்ட ராகவன்சுய விமர்சனமாய் குறைபட்டுக்கொண்டான்.

நினைவு நினைவாக இருக்க...நினைவை முந்திக் கொண்டு அவன். அவனது பாதவிரைவு. ரெக்கையடித்துப் பறக்கிற கால்கள். 'லடப் டடப்' பென்கிற செருப்புச் சத்தத்தின் வேகம். துரிதத்தின் முகம்.

ராகவன் ஓட்டமும் நடையுமாக வந்தான்.

அவனுக்குள் புனிதன். ஆறுமாசத்தங்கம். அள்ளினால் நெஞ்சில் குளிர்கிற வெண்ணெய்த் தங்கம். பூமழலை, பூப்பந்து, கைகால் முளைத்த பூச்செண்டு.

அவன் மென்பஞ்சுவயிற்றில் வாய்பதித்து கிச்சலம் காட்டிக் கொஞ்சிச் சத்தம் கொடுத்தால்... அவன் சிரிக்கிற சிரிப்பாணியிருக்கிறதே...எச்சில் வழிய, விடாமல் சிரிக்கிற சிரிப்பாணி. சின்னப்பூவின் உள் வெளிச்சமாய் அவனது சிரிப்புச் சத்தம். தொடர்ந்த சிரிப்ப(ா)ணியில் லேசாக விக்கல் கூட எடுக்கும்.

அந்தச் சிரிப்பு...அதன் ஈர மின்னல்கள். கண்ணை உறுத்தாத குளிர் மின்னல்கள். மனசுக்குள் பூக்களை யள்ளித் தூவுகிற உணர்வு மின்னல்கள்.

ராகவன் மெயின் வீதியைக் கடந்தான். அவன் உட்கார்ந்து 'பொழுதை நகர்த்துகிற' பார்பர்ஷாப், பேப்பர் படிக்கிற டீக்கடை, மூன்றுவேளையும் சாப்பிடு கிற மெஸ் எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டு, வாழ்க்கையைத் தழுவுகிற வெறிவேகத்தில் சக்கரம் கட்டிய கால்களாக முன்னோக்கிப் பாய்கிற பாய்ச்சல்.

''இதையெல்லாம் இன்று புறக்கணிக்கிறோமே'' என்ற நினைவு மனசுக்குள் முகம் காட்டி மறைகிறது. பரிகாசமான ஒரு சிரிப்பு, அவன் உதடுகளில் அப்படிச் சிரித்துக்கொள்வதில் ஒரு மகிழ்ச்சி.

அதே... கறுப்பு பேண்ட். வியர்வையிலும், அமுக்கி லும் துவண்டு நசநசக்கிறது. போட்டிருக்கிற கறுப்புக் கோடுகள் போட்ட வெள்ளைச் சட்டை, ஏழுகோட்டை அழுக்கில், லட்சணம் கெட்டுப்போய் கண்ணை மூடிக் கிடக்கிறது, எண்ணெய் வழிகிற முகம், ரெண்டு நாளாய் குளிக்காத தலைமுடி வீச்சமெடுக்குமோ என்ற எண்ணம், ஒரு சின்ன வேதனையாக வலித்துவிட்டு மறைகிறது.

செருப்பின் 'டடப், லடப்' பென்ற சத்தம். அந்தச் சத்தலயச்சலன வகையிலேயே, தன் உயிரின் உள்ளொலியை உணர்ந்து விட்டாள், பார்வதி. ஆவல் பரபரப்போடு எட்டிப் பார்த்தாள்.

இவன்தான்.

அந்தி வெயிலை வெட்கப்பட வைக்கிற தங்க முகத்தில் ஆனந்த வியப்பும், பரவசத் துடிப்பும் ஒளி

மின்ன... பார்வதியின் முகம். வாசலில் எட்டிப் பார்க்கிற முழு நிலா.

"ஏய்ய்... எப்ப வந்தே?"

"மதியமே வந்துட்டேன்..."

"இன்னிக்காச்சும் வந்தியே... பரவாலே. ஒங்கம்மா ஒன்னை எப்படி முழுமனசா அனுப்பி வைச்சாக?"

"அவுக எங்க முழு மனசு? எல்லாம்... அரைமனசு தான். நாந்தான் பிய்ச்சுக்கிட்டு வந்துருக்கேன்..."

"அப்படியா?"

அவன் முகத்தில் பரவசப் பரவல். சந்தோஷப் பேரொளி.

"பிய்ச்சுக்கிட்டு வந்துருக்கேன்" என்ற வார்த்தைக் குள் தெரிகிற அவளது திமிறல்கள். போராட்டங்கள். அம்மாவுடன் நடத்திய வாக்குவாதங்கள், தன் மீது அவள் கொண்டிருக்கிற பந்தப்பிடிப்பு... தனது ஆத்ம வேர்கள், அவளுக்குள் பதிந்திருக்கிற ஆழம், அழுத்தம்... எல்லாமே, சட்டென்று முகம் காட்டுகின்றன.

வாசல்படியில் கால் வைத்து நின்றான், ராகவன். ரொம்ப நெருக்கமாய் பார்வதியின் முகம். மஞ்சள் வெயிலாய் ஒளிரும் அவளது சிறுமுகம்.

"காலை கையை கழுவிக்கிடட்டா?"

"என்னத்துக்கு? வெண்ணியே வைச்சிருக்கேன். நல்லாக் குளிச்சுக்கோங்க. அலுப்பு கொறையும்..."

"இ து க் கு த் தா ன்... எஞ்செல்லக் கட்டி வேணும்ங்குறது."

குஷியாகிப் போன ராகவனின் வலது கையின் கட்டைவிரல், அவளது கன்னத்தை நோக்கி நெருங் கியது, செல்லமாய் கிள்ள.

பாதியில் நின்று கொண்ட விரல்கள்.

"ஏன்... என்னாச்சு?"

"தங்கக் கன்னத்தை அழுக்குக் கையிலே கிள்ளக் கூடாது."

என்று உள்ளார்ந்த அர்த்த ஆழத்துடன்—மோகப் பெருக்குடன்—பார்த்த அவனது கண்கள்.

"ச்சேய்... நீங்க ரொம்ப மோசம்...!"

"மோசம்தாண்டி, இந்த விஷயத்துலே நயம்"

"போதும் போதும், தாளிச்ச தாளிப்பு. மொதல்லே போய்க் குளிச்சிட்டு வாங்க."

"அதுக்கு முன்னாடி நம்ம பயலைப் பாக்கணுமே.."

"அவனுக்கு அப்பா மேலே கோபம். பாக்க முடியாதுன்னு கண்ணைமூடி ஒறங்குறான்."

"நம்ம புள்ளே கோபிச்சா கூட, அதுவும் ஓர் அழகு தான்."

அவளை இடித்துத் தள்ளிக் கொண்டே உள்ளே வந்த ராகவன், தொட்டிலை இரு கையாலும் பற்றி... அகலப்படுத்தி... புனிதனைப் பார்த்தான். இன்னும் பால் குடிக்கிற பாவனையிலேயே மெல்லிசாகச் சலனப் படுகிற அவனது சின்ன உதடுகள். நெற்றியில் கிடக்கிற அவனது மென் மயிர்கள், 'பால் வாசம் அடிக்கக் கூடாதே' என்பதற்காக அவன் உடல் முழுவதும் அப்பி யிருந்த வாசனைப் பவுடரின் திட்டுகள்.

சப்பிக் கொண்டிருந்த அவனது பூ உதடுகளில் ஒரு சிரிப்பு. எதையோ பார்த்து வியக்குகிற மாதிரியான ஒரு மென்னகை.

''ஏய்... இங்க பாரு நம்ம பயலை. ஒறங்கிக்கிட்டே சிரிக்கான்...''

இவன் வியப்பு எட்டாத தூரத்தில், வெந்நீர்ப் பானையைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தாள் பார்வதி.

## 10

ராகவனுக்கு எல்லாமே புதுசாக இருந்தது. புது உலகத்திற்கே வந்துவிட்ட மாதிரியோர் பிரமிப்பு.

வீடு அப்படியிருந்தது. தலைகீழாக மாறியிருந்தது. கட்டில் மடிக்கப்பட்டு சுவரில் சாய்த்து வைக்கப் பட்டிருந்தது. தலையணை உறைகளும், போர்வை களும் மடித்து வைக்கப்பட்டு... பானை குடங்கள் பளிச் சென்று... வீடே, ஒரு குத்துவிளக்கு மாதிரி... மினுக்கி வைத்த குத்துவிளக்கில் சுடரேற்றி வைத்த மாதிரி...

குளித்து முடித்தான். தலையைத் துவட்டினான். இவள் எடுத்துக் கொடுத்த கைலி. மதியம் வந்து அவள் துவைத்துக் காயப்போட்ட கைலி. சலவைச் சோப்பின் வாசமும், அதன் பளிச்சிடலும், கண்ணையும், நெஞ்சை யும் பறித்தது.

கைலியை உடுத்தினான். வியர்வை நாத்தமில்லாத வெள்ளைப் பனியன்... ஈர் முடியை அடித்து உதறிக் கொண்டே உள்ளே வந்தான்.

''சோறு வைக்கட்டா?''

''பய முழிக்கலியா?''

''அவன் ஒறங்கட்டும். நீங்க சாப்புடுங்க...''

''இன்னும் பொழுதடையலே. அதுக்குள்ளே சாப்புடணுமா?''

"உங்க இஷ்டம்..."

"என்ன கொழம்பு?"

"சாம்பார்... ரசம்தான்"

"என்ன கடிச்சிக்கிடை?"

"அவரைக்காய்"

இவனுக்குப் பிடித்த அய்ட்டம் தான். சாப்பிடலாமா என்று தோன்றிய எண்ணம்.

இன்னும் மிச்சமிருக்கிற அந்தி வெயில். மேற்கு மலைத் தொடரின் முதுகில் ஊர்கிற முதலை மாதிரி கருமேகங்கள். அதன் முதுகுக்குள் மறைந்தும், மறையாமல் மின்னி ஜொலிக்கிற செஞ்சூரியன். ரத்தப் பிரகாசிப்பு, ரத்தத் தழல். தழலின் வெளிச்சத்தில், மேல் வானமே செவ்வானமாகச் சிவந்து கிடந்தது.

"என்ன சாப்புடுதீகளா...?"

மீண்டும் கேட்கிற பார்வதி. இந்தக் கேள்வியின் மடிக்குள் ததும்புகிற அன்பும், பரிவும் மனசைப் பரவசப் படுத்துகிறது. மனசையே குழையச் செய்கிற இந்தக் கனிவுதான், வீட்டுச் சோற்றை தேவாமிர்தமாக்குகிறது. இந்தக் கனிவை—மனித உணர்வுகளின் இழைப்பின்னல் களை—மெஸ்ஸில் எதிர்பார்க்க முடியாது.

"சாப்புடுதீகளா" என்ற கனிவும், பரிவும் இருக்காது. எதிர்பார்ப்பும், இனிய உணர்வும் இருக்காது. 'என்ன சாப்புடுதீக' என்ற உணர்வற்ற—வறண்ட—கேள்விதான் மெஸ்ஸில் கேட்கும். அந்த வறண்ட கேள்வியே, இலையில் பரிமாறப்பட்ட சகலத்தின் ருசியையும் பொய்யாக்கி விடும்...

"என்ன சத்தத்தையே காணோம்?"

மீண்டும் பார்வதி. ஒரு மென்னகையோடு பெருமூச்சு விட்டான். அவனுள் ஓடிய அந்த நினைவுகள்.

"என்ன சிரிப்பு...?"

"ஒண்ணுமில்லே... நீயில்லாம நா சாப்புட்ட சாப்பாட்டை நெனைச்சேன்..."

"ஏன்... நல்லால்லியா? ருசியா வைக்க மாட்டாகளா?"

"அதெல்லாம்... ருசியாத்தான் செய்வாக. வாசம் ஆளைத் தூக்கும்?"

"பெறகென்ன?"

"இங்கே நீ வட்டில்லே சோறு கொழம்போட, கொஞ்சம் அன்பையும், பாசத்தையும் ஊத்திப் பிசைஞ்சு தருவே. அங்கே அது இருக்குமா?"

"அடேஙப்பா... ரொம்பச் சைஸாப் பேசுதீகளே.."

பார்வதியின் பூரிப்புச் சொற்கள் பாராட்டுகளை அதன் மலர் மென்மையை — தாளமுடியாத உள் மனசின் பூரிப்பு. பூரிப்பை, பூரிப்பாகக் காட்டத் தெரியாமல், திண்டாடித் தவிக்கிற பார்வதி.

தொட்டிலுக்கு அருகில் போனான். இன்னும் உறங்குகிற புனிதன். அவனது பிஞ்சு உதடுகளின் சிரிப்புச்சலனம்.

"என்ன பார்வதி... பய ஒறங்கிக்கிட்டே சிரிக்கான்?"

"கனாவுலே நரி வருமாம். அதான் சிரிக்கானாம்"

"நரியை கனாவுலே பாத்துட்டா... பயப்படத் தானே செய்யணும்? பயந்து அழத்தானே செய்யணும்?"

''நரிக்குப் பயப்படணும்னு தெரியாத பச்சை மண்ணு, சிரிக்கத்தானே செய்யும்?''

''ஓகோ... அது அப்படியா?''

வேடிக்கையும் விளையாட்டுமாய் வியப்புக் காட்டிய ராகவன், புனிதனையே வைத்த கண் எடுக்காமல் பார்த்தான். இமை தட்டாத பார்வை. கண்ணில் வந்து உட்கார்ந்திருக்கிற மனசு. குழைவும், பரிவுமான பாச உணர்வு. தகப்ப மனசு.

## 11

பஸ்ஸில் ஏற்றியனுப்பிவிட்டு... ''போய்ட்டு வாரீயா... போய்ட்டு வாரீயா'' என்று நூறுதரம் ஏக்கமும் புலம்பலுமாய் குழைந்த மாரித்தாய்.

பஸ் நகர்ந்தது. அவளுக்குள் உயிரே கழன்று விழுவதாக ஒரு பகீர் உணர்வு. அடிவயிற்றுக்குள் பரவிய ஒரு சூன்ய வேதனை.

பஸ் போய் விட்டது. மகளும், பேரனும் போய் விட்டனர். நாதியற்ற சிறுக்கியாகி விட்டோம். ஆதரவற்ற பாதகத்தியாகி விட்டோம்...

அவளுக்குள் பிரம்மாண்டமாய் விசுவரூபம் கொண்டு ராட்சஸமாய் தாக்கிய தனிமை உணர்ச்சி. ரொம்ப வருஷ காலமாய், கூடவே குடியிருந்து, பய முறுத்துகிற அந்த அச்ச உணர்வு...

புருஷனையும் பறி கொடுத்துவிட்ட அந்தநாள். வெளியூர் ஜனமெல்லாம் வந்திருந்து, விட்ட சொந்தம் தொட்ட பந்தமெல்லாம் வந்து குவிந்து, இழவு கொண் டாடிய அந்த நாள்.

சர்வாலங்காரப் பதுமையாக... புதுப் பெண்ணாக முழுமையான அலங்காரத்தோடு மாரித்தாய். அவள்

முகம் தெரியாமல், முக்காடிட்ட துணியாக ஒரு வெள்ளைத்துண்டு.

அவள் கையைப் பிடித்துக் கொண்ட உறவுக்காரப் பெண்கள் சுற்றிலும் நிறைய பெண்கள். உறவுக்கார ஜனங்கள். சொந்த பந்த ஜனங்கள்,

ஊரின் விளிம்பு. தாலியறுக்கிற அந்த இடம். செய்கிற சாத்திரங்கள், பெண்களின் ஒப்பாரி. மாரித்தாயின் வளையல் உடைக்கப்பட்டு... தாலியறுக் கப்பட்டு... பூ அலங்காரம் கலைத்து பிய்த்தெறியப் பட்டு, கால்விரல் மிஞ்சிகளைக் கழற்றி... அவளை மூளியாக்கிய அந்தக் கொடிய நாள். பெண்ணுக்கென்று சமூகம் காலம் காலமாக இழைத்து வருகிற கொடுமை யின் குரூரமுகத்தின் பயங்கரத்தை எதிர்கொண்ட நாள்.

அன்றைக்குச் சாயங்காலமே.

வீடு, வெறும் வீடாயிற்று. இழவுக்கு வந்திருந்த பந்தஜனம் போய்விட்டது. ரெண்டு நாளாய் ஆட்களும், ஜனநாடமாட்டமுமாய் நிறைந்து, நெரிபட்ட வீடு... சட்டென்று வெறும் வீடாகிப் போன பகீர்.

சூன்யத்தின் முதல் தாக்குதல், மாரித்தாயின் உள் மனத்தின் ஜவ்வைக் கிழித்து, ரத்தம் கசிய வைத்த வெறுமை. நிமிர்ந்து பார்த்தாள்.

புருஷனின் கிழிந்த வேட்டி. பழைய சட்டைகள். அழுக்கான பனியன்கள். பொய்யாகிப் போன நிஜத்துக் கான சாட்சியங்கள். செத்துப் போன புருஷனோடு வாழ்க்கை போய் விட்டது. பொய்யாகி விட்டது.

குபீரென்று தாக்கிய சூன்யம். உயிர்த்துணையே யில்லாமற் போய்விட்ட வெறுமை. தொட்டிலில் அழுது சிணுங்கி நெளிகிற பார்வதி. தொட்டிலிலிருந்து சிந்துகிற சிறுநீர்.

அந்த மழலைதான், ஒரே நாதி. ஒரே உயிர்த் துணை. வாழ்க்கை. ஜீவித நோக்கம். வாழ்க்கை ஆதாரம்,

'இனி என்னத்துக்கு உசுர் வைச்சு வாழணும்' என்று வழிமறித்து நின்று கேட்கிற கேள்விக்கான ஒரே பதில், அந்த மழலைதான்.

ஓடிச்சென்றாள். குலைநடுங்க... பதைபதைப்புடன் குழந்தையைத் தூக்கினாள். திரேகமே நடுங்கிக் குலுங்க... அழுகையும், ஆசையுமாக குழந்தையை நெஞ்சோடு சேர்த்தணைத்தாள். வெறி கொண்டவளைப் போல, அழுத்தி முத்தமிட்டாள். கண்ணீரின் வெப்பமும், முத்த எச்சிலும் அந்த மழலையைத் திணறடித்தது.

மாராப்புச் சேலையை முழுசாக நழுவ விட்டாள், ஜாக்கட் ஊக்குகளை இடதுகை விரல்களால்...

வழக்கத்திற்கு விரோதமாக — உறங்கும்போதும் விழித்திருக்கும் பெண்மையின் சுரணையை இழந்தவளாக— மகளை மடியில் போட்டுப் பாலூட்டினாள். மழலையின் முகத்தை மூடாத மாராப்புச் சேலை. முழுக் காற்றும், வெளிச்சமும் அந்த மழலை முகத்தில்.

கூச்சமற்று... நாணமற்று... மரத்துப் போனவளாக மாரித்தாய். 'நாதியற்றுப் போனோமே' என்ற வேதனையின் அதீதம். 'யாரு'மற்று ஆகிவிட்டோம்' என்கிற சோகத்தின் உச்சம். விரக்தியின் விளிம்பு.

யாரு இருக்காக? எந்த உசுர் பக்கத்துணை? யாருக்கு நாணணும்? கூச்சப்படணும்? உயிர்களே இல்லாத சூழலில், என்னத்துக்கு நாணம்? எதுக்குச் சுரணை?

உயிரற்ற சுவர்கள். கண்ணில்லாத கதவு. வீட்டுக்குள் நிசப்தம். வெறுமை. இவைதானே மிச்சம்? இதுக்கா வெட்கப்படணும்? மூடி மூடி மறைக்கணும்?

வெட்ட வெளியில், பால் குடிக்கிற மழலை. மொத்த உயிர்த்துணையையே யிழந்துவிட்ட சோகத்தில், சகலமும் மரத்துப் போன மாரித்தாய்.

மடியில் கிடந்து, மார்பகத்தை உதடுகளால் ஸ்பரிக்கிற இந்த மழலை. அந்த ஸ்பரிசம் ஒன்றுதான், வாழ்க்கையின் மூலாதாரம். அந்த ஸ்பரிசம்தான், அவளது உணர்வு, உயிர், சுரணை, வாழ்க்கை, எதிர் காலம், லட்சியம். எல்லாமே... அந்த ஸ்பரிசம்தான். இனியிருக்கும் நாட்களின் சகல கனவுகளும், நகர்வு களும்... அந்த ஸ்பரிசத்திற்காகத்தான்.

பார்வதியைத் தொடாமல், மாரித்தாய்க்கு உறக்கமே வராது. மாரித்தாயின் உயிர் வாழ்தலின் காரணமே, பார்வதிதான்.

பார்வதியைப் பிரிந்து ஒரு நாள்கூட வாழ முடிவ தில்லை, மாரித்தாய்க்கு.

பாவாடைப் பருவத்தில்... பார்வதி, மாரித்தாய் பக்கத்தில் படுத்திருக்க வேண்டும். மகளின் திரேகச் சூடும், சுவாச வெப்பமும் தாயின் மேல் படவேண்டும். பார்வதியின் சின்னக்கால், அம்மாவின் இடுப்பில் குறுக் காகக் கிடக்கும்.

எப்போதாவது, உறக்கச் சடவில் உருண்டு புரள்கிற போது...பார்வதி புரண்டு சற்றே விலகி விட் டால் போதும். பார்வதியின் ஸ்பரிசக் கதகதப்பு சில கணம் இல்லாமல் போனால்கூடப் போதும். மாரித்தாய்...ஏதோ கெட்ட கனாவைக் கண்டு முழித்த வளைப் போல, பதறிப்பதைத்து எழுவாள். உயிரையே பறிகொடுத்து விட்ட மாதிரி பரபரப்பும், பதற்றமுமாய் தேடித் தட்டழிவாள். கைகளால் அங்கும், இங்கும் சுற்றிலும் தடவிப்பார்ப்பாள், தவிப்புடன்.

சற்று தள்ளி...குண்டக்க மண்டக்க சுருண்டு கிடக் கிற பார்வதிச் சிறுமி. அவள் திரேகச் சூட்டை, கை தொட்டுணர்ந்த பிறகுதான்...போன உயிர் திரும்ப வரும். மனத்திணறல் குறையும். ஆசுவாசமடையும். 'அப்பா...டா' என்றிருக்கும்.

இப்படியே...இருபது வருஷத்திற்கும் மேலாக... இரு நூற்றைம்பது மாதத்திற்கும் மேலாக...ஏழாயிரத்து ஐநூறு நாட்களுக்கும் மேலாக...

மகளைத் தீண்டிக்கொண்டே, வாழ்ந்து பழகியாகி விட்டது. இப்போது—

மகள் இல்லாமல் இருக்க முடியவில்லை. இதுதான் ஆகப்பெரிய பிரச்னை.

வீட்டுக்குள் நுழைந்தாள். வாலோடியான பெரிய தாழ்வாரம். ஆளுயரத்துக்கும் மேலான கதவு. விரிந்து பரந்த பெரிய வீடு. சமுத்திரம் போல. ஆகாயம் போல.

ஆனால் வெறும் சமுத்திரம். மண் கிடங்கு. பூமிப் பள்ளம். பார்வதியில்லாத வீடு. வெறும் பாழ். உயிரில் லாத சுண்ணாம்புச் சாந்து. ஒளியில்லாத கல் அடுக்கு.

மாரித்தாய்க்கு கண் இருட்டிக் கொண்டு வந்தது. வெயிலில் வந்ததால் இருக்குமோ...! இமை தட்டி முழித் தாள், இருட்டு கொஞ்சம் கொஞ்சமாய் விலக... கண்ணுக்குப் புலப்பட்ட வெறும் சுவர். வெறும் கட்டைகள். வெறும் பலகைகள்.

மாரித்தாயிக்கு அழுகை அழுகையாக வந்தது.

பார்வதி இல்லாமல் எப்படி உறங்க? அவளைத் தீண்டாத வெறுமை. அந்த தேகக் கதகதப்பு இல்லாத சூன்யம். அவள் சுவாசம் இல்லாத பிரேத வீடு.

''ச்சேய்...'' என்று வந்தது.

மகளைப் பிரிந்து இருக்க முடியவில்லை. ஒவ்வொரு கணமும், முள்முள்ளாய்க் குத்துகிறது. கனத்து அழுத்து கிறது. பாரமாய் திணற வைக்கிறது.

மதியச் சோறு சாப்பிட மனசில்லாத வருத்தம். பார்வதி காலடிச் சத்தமில்லாத இந்த நிசப்தம். மனசை என்னவோ செய்கிறது. கிடந்து அடித்துக் கொள்கிறது. பிசைகிறது.

## 12

ராகவன் சாப்பிட உட்கார்கிற போது, மணி எட்டுக் கும் மேலாகிவிட்டது. வெள்ளியில் செய்த பண்ணரி வாளை விண்ணில் வீசியெறிந்த மாதிரி... அந்தரத்தில் தொங்கிய பிறைநிலா. அதன் மங்கலான வெளிச்சம். கண்ணை உறுத்தாமல், மனசைக் குளிர வைக்கிற வெள்ளிப் பிரகாசம்.

இந்நேர வரைக்கும், பார்வதி சொல்லச் சொல்லக் கேட்காமல், புனிதனை வைத்து விளையாடிக் கொண் டிருந்தான். மல்லாக்கப்படுத்துக்கொண்டு நெஞ்சில் உட்கார வைத்தான், புனிதனை. மூச்சை செயற்கை யாக இழுத்து இழுத்துவிட... உயர்ந்து உயர்ந்து இறங்குகிற மார்பில் புனிதன். உயரும் போதெல்லாம் சிரிக்கிற புனிதன். அடங்காத சிரிப்பு. சிரிப்ப(ா)ணி வரிசையில் ஒழுகுகிற எச்சில் ராகவனின் நாடியில் விழுகிறது.

''ஐயய்யோ... நீங்களும் சின்னப்புள்ளே மாதிரி. இதென்ன கூத்து?''

எச்சிலைக் கூடத் துடைக்காமல் கொஞ்சுகிற ராகவனை, செல்லமாய் கண்டிக்கிற பார்வதி. தன் முந்தானையால் எச்சிலைத் துடைக்கிறாள்.

சிரித்த சிரிப்பு தாளாமல்... விக்கல் எடுக்க ஆரம்பித்தது, புனிதனுக்கு. பார்வதி கோபமாய் குறுக்கிட்டு, மகனைப் பிடுங்கினாள்.

''பாத்தீகளா...? உங்களாலே புள்ளைக்கு விக்கல்''

''அதுக்கென்ன...? பெத்த புள்ளைகிட்டே தகப்பன் வெளையாடக் கூடாதா?''

''அதுக்கும் ஒரு அளவு இல்லே?''

''அளவு இருக்கு. அது நமக்குப் பொருந்தாது''

''என்ன சொல்லுதீக?'' என்ற கேள்வியோடு உட்கார்ந்து, அந்தப் பக்கமாகத் திரும்பி... கால்களை நீட்டினாள். பிள்ளையை மடியில் கிடத்தி...

இவன் ஒருக்கழித்துச் சாய்ந்தான். முழங்கையை ஊன்றி... அதன்மேல் தலைவைத்து, பார்வதியைப் பார்த்தான். அவளது முதுகின் அசைவிலேயே... குழந்தையை 'அமர்த்தப்' போகிறாள் என்பதை உணர்ந்தான்.

ஏதோ உள்ளர்த்தத்துடன் பேசுகிறான் என்ற பிரக்ஞையில், மறுபடியும் கேட்கிறாள் ''என்ன சொல்லுதீக?''

''ஒரே வீட்லே புருஷன், பொண்டாட்டி, புள்ளைக சேர்ந்து இருந்தா... அது வழக்கம். அந்த வழக்கம் இருந்தா... எல்லாம் அளவா இருக்கும். இங்கதான் அந்த வழக்கம் இல்லியே... அப்ப அந்த அளவு மட்டும் எப்படி இருக்கும்?''

அவன் வார்த்தைகளில் கசிகிற அவனது மனசு. உள் மனசின் ஆழக்காயம். காயத்தின் நிரந்தர ரணம். வேதனை சுமந்த அந்த வார்த்தைகளின் உணர்வுகள்.

கழுத்தை மட்டுமே திருப்பி, புருஷனைக் கூர்ந்து பார்க்கிற பார்வதி.

அந்த வேதனையிலும் பார்வதியின் கோணத்தை ரசித்தான். முதுகும், முகமும் ஒருசேரத் தெரிகிற வினோதச் சாயல்.

''என்ன புதிர் போட்டுப் பேசுதீக?''

விளையாட்டு, வேடிக்கை எல்லாம் தவிர்த்த ஒரு தீவிரத்தன்மை பார்வதியிடம் நெற்றியின் நிழலில், கண்கள். அதன் தீவிரப் பார்வை. நங்கூரப் பார்வை.

அவனிடமும் அதே வேதனை படிந்த முகம். துயரார்ந்த உணர்வு. மனக்கிடக்கையை வெளிப் படுத்தியே தீர்வது என்கிற உறுதிப்பாட்டில் ராகவன்.

''புதிர் போட்டுப் பேசலை. வெளிப்படையாவே சொல்லுதேன். பொறுமைக்கும் ஒரு எல்லை இருக்கு.

''எம்புட்டு நாளைக்கு நா இப்புடியே சோறு தண்ணிக்கு வழியில்லாம, நாதியத்த ஆம்பளையாச் சீரழியுறது?''

''நா என்ன செய்யட்டும்? எனக்கும் இது சந்தோஷ மாகவா இருக்கு? அம்மா படுத்துற பாடு...''

''அதுக்கும் ஒரு அளவுல்லியா? மகளை கட்டிக் குடுத்துட்டு... இருந்து வாழவிடாம... தன் கூடவே வைச்சுக்கிட்டா... எப்படி? அது என்ன ஞாயம்? ஒனக்கும் துன்பம், எனக்கும் துன்பம். இதை எம்புட்டு நாளைக்குச் சகிச்சுக்கிட?''

''அம்மா பாவமில்லியா? காலம் பூராவும் நாதியில் லாம இருந்துருக்கா. நா ஒருத்தி தான் அவளுக்குத் தொணை, எனக்காகவே உசுரை வைச்சு வாழ்ந்தவ. ஒழைச்சவ. சம்பாதிச்சு வீடு வாங்குனவ. என் மேலே

உசுரையே வைச்சிருக்கா. பிரிஞ்சிருக்க முடியாம தவிக்கிறா... இதுலே குத்தம் சொல்ல என்ன இருக்கு?''

''இதுதான் குத்தம். அவுகளாலே ஒன்னைப் பிரிஞ் சிருக்க முடியலே. கூடுதலா பாசம் வைச்சிருக்காக. அதுக்காக... சேர்ந்து வாழ வேண்டிய நம்மளை தனித் தனியா பிரிச்சே வைச்சிருக்குறது குத்தமில்லியா?''

''மத்தளத்துக்கு ரெண்டு பக்கம் இடிங்குற மாதிரி, எனக்குத்தான் சிக்கல். நீங்க சொல்றதும் ஞாயம்தான். எனக்கும் புனிதனோட இங்க இருக்குறதுதான் சந்தோஷம். ஆசை. ஆனா... அங்குட்டு அம்மா அழுகுறதையும், புலம்பிச் சாகுறதையும் பார்த்தா... அதுவும் பாவமாயிருக்கு... நா என்ன செய்ய?''

''இந்தச் சிக்கலுக்கு சீக்கிரம் ஒரு வழி கண்டு பிடிச்சாகணும். இப்பவே... எனக்கு ரொம்பக் கேவலமா யிருக்கு. பொண்டாட்டி புள்ளையை வுட்டுட்டு, ஒத்தையிலே கெடந்து சீரழியுறவன்னு இப்பவே ஊரெல்லாம் தெரிஞ்சு போச்சு. எல்லாரும் எளனமா நெனைக்காங்க. பேசுதாங்க. ஒண்ணுக்குமத்த ஒரு கேணப்பயகூட, ஏங்கிட்டே தைர்யமா பரிகாசம் பண்ணுதான்... 'வீட்லே யார் இருக்காக'ன்னு. நெனைச்சா... மனசு கெடந்து வேகுது''

அவன் சொல்கிற தொனியில் ஒரு சீற்றம். உள்ளேயே பம்மிப் பதுங்கிக் கிடந்த நாள்ப்பட்ட வெக்கை கனல். கசப்பும், விரக்தியும், வெறுமையுமாகக் கடந்த நரக நாட்களின் ராட்சஸத் தடத்தின் மூர்க்கம்.

பார்வதி உள்ளுக்குள் சிதறிப் போனாள். அதிர்ந்து நடுங்கி விட்டாள். கனிவும், குழைவுமான ராகவனுக் குள்... இத்தனை கனலா? தனது ஆத்ம நாயகனுக்குள் மறைந்து கிடப்பது, இத்தனை பெரிய கொதிப்பா? அவனுக்குள் மறைந்து கிடப்பது, இத்தனை பெரிய

கொதிப்பா? அவனுக்குள் இப்படியோர் சோக ராகவனா? விரக்தி ராகவனா? வெடிப்பு ராகவனா?

இந்தப் புதிய பயங்கரத்தில் மோதிக் கொண்ட அதிர்ச்சியின் வெல வெலப்பில், பார்வதி. அவளுக் குள்ளும் அதே உணர்வுகள். கொதிப்புகள். 'புருஷனும், புள்ளையுமா சேர்ந்து கொஞ்ச முடியலியே' என்கிற ஏக்கம். வருத்தம். எரிச்சல். அதே மனநிலையில், அவனும்.

பார்வதியின் கண்களில், நீரின் கலக்கம். நீர்த்திரள். திரண்ட கண்ணீர் இமைகளில் ஈரமாகப் படிந்து, கண்ணோரங்களில் முத்தாகத் திரண்டு, தேங்கித் திகைத்து சிதறி வழிகிறது. அந்தக் கண்ணீர்த் துளியின் சிதறல்த்தெறிப்பில், அவன் பதைத்துப் போனான்.

## 12

''என்னத்துக்கு அழுகுறே?'' கோபமில்லாத சாதாரணக் குரலில் கேட்டான், ராகவன். 'அழாதே' என்று ஆறுதல் சொல்கிற தொனி, அந்தக் கேள்விக் குள் உட்கார்ந்திருந்தது.

அந்தக் கேள்விக்காகவே காத்திருந்ததைப் போல, மளமளவென்று பொங்கி வழிந்த கண்ணீர் கன்னமேடு களில் நீர்வரிகள் விசும்பல்.

''நீ என்னத்துக்கு அழுகுறே? சும்மாயிரு. அழா தேம்மா...'' அவனது கெஞ்சல்.

''நா என்னத்துக்கு அழாம இருக்கணும்? நம்ம விதிக் கொடுமையை நெனைச்சுத்தான்''

''விதி என்ன செய்யும்? மனுசக் கழுதைக்கு மதி சரியில்லாமப் போச்சுன்னா... விதி என்ன செய்யும்?''

"விதிதான்... விதி செய்ற கூத்துதானே... இந்த அலைக்கழிப்பு? இழுத்தடிப்பு?"

"விதியெல்லாம் ஒண்ணுமில்லே. அதெல்லாம் சரியாத்தான் இருக்கு"

"என்ன சரியாயிருக்கு? உங்களுக்கும், எனக்கும் வம்பு வழக்கு இல்லே. சண்டைசச்சரவு இல்லே. ஆனா.. ஒண்ணாச் சேர்ந்தும் இருக்க முடியலே. இது விதி யில்லியா? நம்மளைப் பிரிச்சு வைச்சு கூத்துப் பார்க்குற அம்மா மனசுலே, கெடுதல் நினைப்பு இல்லே... பாசம் தான் இருக்கு. இது, விதிக் கொடுமையில்லியா?"

அழுகையில் உடைந்த பார்வதியின் குரல். விசும்பல்களுக்கிடையே கசிகிற குரலில், கண்ணீர்க் கரைசல். சோகக்கலங்கல்.

அவளையே கூர்ந்து பார்க்கிற ராகவன். நிலவும் நெருக்கடியான சூழலில், 'என்ன செய்வது' என்கிற மான யோசனையில் அவன் அவளது முதுகு, ஜாக்கெட்டின் பாசி நிறப்பச்சை. அதற்கும் கீழே இடுப்புப் பகுதியில் கண்ணீர்த்துளிபோல, துளிர்த்து நின்ற வியர்வைத்துளி. அமிர்தப்பால் குடிக்கிற குஷியில், அவளது இடுப்புப் பகுதியில் பிஞ்சுக்கையால் வருடுகிற புனிதன்.

முகத்தை அந்தப் பக்கமாய்த் திருப்பியிருக்கிறாள். அவளது செவியும், காதோர ரோமங்களும், கன்னக் கதுப்பில் இறங்குகிற கண்ணீர் விழுதுகளும் தெரி கின்றன.

"நமக்குக் கல்யாணம் மூய்ஞ்சி ரெண்டரை வருஷ மாகுது. முப்பது மாசம். இந்த முப்பது மாசத்துலே... இந்த வீட்லே நாம ரெண்டு பேரும் சேர்ந்திருந்தது, எம்புட்டு நாள் இருக்கும், தெரியுமா?"

"ம்?"

"விட்டு விட்டு... நூறு நாள்தான் இருக்கும். ஒரு நா... ரெண்டு நாள்தான் இங்க இருப்பே. மத்த நாள் பூராவும் உங்க அம்மா வீட்டுலதான்... நீ, இப்படி இருக்குறதுக்கு... என்னத்துக்குக் கல்யாணம்?"

"ஏங்கிட்டே கேக்குற நீங்க... எங்க அம்மாகிட்டே இதே மாதிரி வலுவா கேக்க வேண்டியதுதானே?"

"ஏன்... நீ கேக்க வேண்டியது தானே?"

"என்னன்னு?"

"இங்கேயே வைச்சுக்குறதுக்கு, எதுக்குக் கல்யாணம் பண்ணுனே'ன்னு"

"பெத்ததாயி. அய்யாயில்லாம வாழ்ந்த அம்மா.

ஒத்தையிலேயே ஒழைச்சு. என்னை வளர்த்து ஆளாக்குன அம்மா. அப்பேறப்பட்ட அம்மா கண்கலங்கி, பொலம்புறதைப் பாத்த பெறகு... கேக்க மனசு வருமா, எனக்கு? அதுவும் பொட்டச்சி, அதுலேயும் வவுத்துப் பொறப்பு. ரத்தப் பொறப்பு."

"பெறகு?"

"நீங்க கேக்கலாம்லே? எனக்குன்னு குடுத்த உங்க மகளை... ஒங்க கைப்பக்கத்துலே வைச்சிருக்கிட்டு... எங்களை வாழவுடாம, கெடுத்துச் சீரழிக்கீகளே... இது என்ன ஞாயம்னு நீங்க கேக்கலாம்லே? தாட்சண்யம் பாக்காம, வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டுன்னு மூஞ்சிக்கு நேரா கேக்க வேண்டியதுதானே...?"

"என்ன செய்றது? என்னாலே முடியலியே. நானும் மனுசனா இருந்து தொலைச்சுட்டேனே... மனுசத் தன்மையோட இருக்கேனே... ஒங்கம்மா கண்ணீரை

நெனைச்சு, கலங்கிப் போற ஈர மனசோட இருந்து தொலைச்சுட்டேனே...''

மறுபடியும் கழுத்தைத் திருப்பினாள். அவன் பக்க மாக முகத்தைத் திருப்பினாள். புருஷன் முகத்தை கூர்ந்து பார்த்தாள். நல்லுணர்ச்சியால் குழைந்து, கனிந்து ஒளி சிந்துகிற ராகவனின் முகம். ஈரம் பனித்த கண்கள்.

அந்தக் கண்களை ஊடுருவித் துளைக்கிற பார்வை யாக, பார்வதியின் பார்வை. அவனது மன ஆழத்தைத் தொட்டுவிட முயல்கிற ஊசிப்பார்வை. அவனது மனத் திரைகளையெல்லாம் கடந்து, உள்மன ரகசியத்தை உற்றுப் பார்க்கிற அழுத்தமான பார்வை.

''என்ன இப்படிப் பாக்கே?''

பார்வையின் தீட்சண்யம் தாளாமல், தடுமாறுகிற அவன். பறவையாடுகிற அவனது கண்கள்.

''எங்கம்மாகிட்டே நீங்க கேள்வி கேக்கலே. கேக்க முடியலே. அதுக்குக் காரணம், நீங்க சொல்றதுதானா? நீங்க நல்லவுகதான். ஈகை எரக்கமுள்ள மனுசருதான். இல்லேங்கலே. ஆனா... எங்கம்மாகிட்டே ஞாயம் கேக்காம இருக்குறதுக்குக் காரணம்... அதுதானா? அது மட்டுந்தானா?''

ஊசி ஊசியான வார்த்தைகள், மாய ஊசிகள், ஊடுருவிப் பாய்ந்து, உள்மனச் சவ்வைக் குத்துகிற ஊசிகள். உள் ரகசிய நினைவுகளைத் தொட்டு, வம்புக்கு இழுக்கிற வார்த்தைகள்.

''என்ன சொல்லுதே?''

பாவனையான கேள்வி. புரியாமை போல வேஷம் கட்டி நிற்கிற கேள்வி,

தலையைத் தாங்கி ஊன்றியிருந்த முழங்கையை எடுத்தான். முழங்கையில் ரத்த ஓட்டம் நின்று போன மாதிரியோர் மரத்துப் போன நிலை.

முழங்கையை எடுத்துவிட்டு, தலையை கீழே வைத்து, மல்லாக்க முகத்தை நிமிர்த்திக் கொண்டான். அவளது ஊசிப் பார்வையைத் தாங்க முடியாத தடுமாற்றம். அவனது உள்பலவீனம்.

"நா சொல்றது நெசமாவே புரியலியா, ஒங்களுக்கு?"

மறுபடியும் அவள் போடுகிற கொக்கி. விடாமல் வீசியெறிகிற ஈட்டிப் பாய்ச்சலான கேள்வி.

ராகவன் தத்தளித்தான். இன்னும் பாவனை காட்ட முடியாது. வேஷம் போட முடியாது.

அவனுக்குள் —

பார்வதியின் கிராமத்து வீடு. அந்த வீடு எனும் சொத்து. அதைச் சுற்றி இவன் பின்னி வைத்திருக்கிற நினைவு அலைகள். அதன் ரகசியம். பரசியமாகிற ரகசியம்.

தர்மசங்கடமாய் தத்தலிக்கிற ராகவன்.

## 14

இவனுக்குள் ஒருகுறி இருந்தது. ஒற்றைக் காலில் ரொம்ப நேரமாக வெயிலில் நிற்கிற கொக்கின் நோக்கம். கண்ணி வைததுவிட்டு, 'பறவைக் கால் எப்போது பதியும், எப்போது சுண்டலாம்' என்று மூச்சரவம் கூட இல்லாமல், பம்மிப் பதுங்கிக் கிடக்கிற வேடனின் குறி.

தீப்பெட்டித் தொழிற்சாலை பற்றிய சகலசூட்சும மும், ராகவனுக்கு அத்துப்படி. பதினைந்து வருஷ

அனுபவம். கந்தகத்திலும், பசையிலும், காகிதக்கட்டு, அட்டைக் கட்டுகளிலும் உருண்டு புரண்டு எழுந்த அனுபவம். ஞானச் சேகரம். தொழில் தேர்ச்சி.

இவனுக்குள் ஓர் ஆசை. ஒரு தீப்பெட்டி யாபீஸை லீசுக்கு எடுத்து நடத்த வேண்டும். நாலைந்து வருஷத்தில் அதைச் சொந்தமாக்க வேண்டும். பாலியஸ்டர் வேட்டியும், கதர்ப்பட்டு சட்டையும் போட்டு... ஸ்கூட்டரில் பவனிவர வேண்டும். பிரமுகர் ராகவனாக உயர வேண்டும்.

இவனைப் பார்த்து "மோலாளி", "மோலாளி" என்று பலர் மரியாதையாக 'விஷ்' பண்ணவேண்டும். புனிதன் காரில் கல்லூரி போக வேண்டும். அமெரிக்காவில் கம்ப்யூட்டர் சைன்ஸ் படிக்க வேண்டும்.

இத்தனை 'வேண்டும்'கள். இன்னும் நிறைய 'வேண்டும்'கள். ஏகப்பட்ட 'வேண்டும்'கள்.

முடியாத 'வேண்டும்'களா? வேரில்லாத குமிழ் கனவுகளா?

ம்ஹூம்! பதினைந்து வருஷமாகப் பழகித் தேர்ந்த அனுபவக்கை. தொழிலின் — வியாபாரத்தின்—உள்—வெளி—சகல ரூபங்களும், நுட்பங்களும், வளைவு நெளிவுகளும், உருட்டு புரட்டல்களும் பட்டறிந்து ஞானம் பெற்றவன்.

அவனால் முடியும். நிச்சயமாக முடியும். நிகழ்த்திக் காட்ட முடியும், சவடால் அல்ல; சத்தியம். சாத்தியம் ஆகும் என்பது சத்தியமானது. சர்வசத்தியமானது. சந்தேகத்திற்கு இடமில்லாதது.

ஆனால்—

இதையெல்லாம் நிகழ்த்திக் காட்டுவதற்கு...

முதல் துவக்கத்தில், ஒரு 'முதல்' வேண்டுமே. ஒரு சிறிய மூலதனம் வேண்டுமே. ஆரம்பக் காரியத்திற்கு 'ஐவேஸ்' வேண்டுமே.

முதல் புள்ளி வைப்பதற்கு மாவு வேண்டும். புள்ளிகள் வைக்க மாவு கிடைத்தால், ஒரு கோலமே போட்டு விடுவான். ஒரு ஓவியமே தீட்டிவிடுவான். தெருவே திகைத்து, வாய்பிளக்கிற மாதிரி ஓர் ஓவியக் கோலம் தீட்டி அசத்தி விடுவான்.

அந்த முதல் மூலதனம் எப்படி கிடைக்கும்? எங்கிருந்து?

பார்வதியின் கிராமத்து வீட்டை விற்பது. கிடைக்கும் நாலு லட்சத்தில், ஒரு லட்சத்தில் ஒரு பெரிய வீடு. இப்போது வாடகைக்கு இருக்கிற ஒற்றையறை என்ற எலிப் பொந்தைவிட, சற்றுப் பெரிதான ஒரு வீடு. அத்தையும் கூட இருக்கிற அளவுக்கு சற்றே பெரியது.

விலைக்கே வாங்கி சொந்தமாக்குவது. அல்லது பத்துவருஷ ஒத்திக்கு வீட்டை வாங்குவது.

மீதி மூன்று லட்சத்தில்... இவனது புள்ளிகள். இவனது 'வேண்டும்'கள். இவனை வட்டாரத்தின் ஒரு முக்கிய புள்ளியாக மாற்றப் போகிற பல'வேண்டும்'கள். அதையெல்லாம் சாத்தியமாக்குகிற— சத்தியமாக்குகிற— மூலதனமாக, அந்த மூன்று லட்சம்.

இதுதான்... ராகவன் திட்டம். ஆசை, குறி, நோக்கம், வலை. வலையை வீசிப் பார்த்தான்.

மாரித்தாய் ஆணியடித்த மாதிரி சொல்லிவிட்டாள்.

''என்ன வேணும்னாலும் செய்யுங்க. உங்கபாடு, ஆனா... ஏங் கண்ணுக்குப் பின்னாலேதான்.''

அதில் மாரித்தாய் உறுதியாக இருந்தாள்.

வீட்டை விற்றுவிட்டால்... மகள் வீட்டில் போய் ஒண்டினால்... நாளை, சில வருடங்களுக்குப் பிறகு—

மருமகன் அலட்சியம் செய்தால்? அருவெருத்து முகம் சுளித்தால்? "ச்சீ... கெழடி, பேசாமக் கிடையேன்" என்று சீறினால்...?

இப்படியெல்லாம் சந்தேகம் மாரித்தாய்க்கு. சாகும் காலத்தில் கேவலப்பட்டு—சீப்பட்டு—சாகக் கூடாது என்கிற பயம்.

சாகிறபோது மதிப்பு, மரியாதையோடு சாக வேண்டும். மகளும், மருமகனும் கெஞ்சிக் கொஞ்சுகிற சூழலில்... உயிர் பிரிய வேண்டும் என்கிற ஆசை.

சிந்திய வியர்வையில் விளைந்த வீடு, இது. இந்த வீட்டில் தான், இந்தக் கட்டையின் உயிர் போகணும் என்கிற லட்சிய வெறி.

மாரித்தாயின் உறுதிப்பாடு, ராகவனின் கனவுகளைக் காத்திருக்க வைத்தது. தாமதப்படுத்தியது. 'நில்பொறு' என்று நிறுத்தியது.

காத்திருக்கிற அந்தக் கனவுகள்தான், ராகவனைப் பொறுமைசாலி யாக்குகிறது. அவனது புத்திசாலித் தனமான சாமர்த்தியம்தான்... மனிதத் தன்மையாக— ஈகை இரக்கமுள்ள ஈரமனசாக, மறுமுகம் காட்டுகிறது. 'அத்தையின் முகம் கோணி விடக்கூடாதே... அத்தையின் மனம் நோகக்கூடாதே' என்கிற பவ்யமாக— பண்பாக—பரிவாகத் தோற்றமளிக்கிறது.

ஆனால்... இவனது கனவுகளின் விலை... இன்றைய தாம்பத்யம். இவனது 'வேண்டும்'களின் ஈடு... இப்போதைய குடும்ப வாழ்க்கை.

மகளைப் பிரிந்து இருக்க முடியாத அத்தையின் பலவீனம்; இவனது வாழ்வின் வெறுமையாக வந்து கொடுமை செய்கிறது.

மெஸ்ஸின் பிளாஸ்டிக் பருக்கைகள், பார்பர்ஷாப், டீக்கடைப் பேப்பர்களின் பொழுதுகள். பார்வதி யில்லாத வெறும் வீடு. புனிதனைக் கொஞ்ச முடியாத ஏக்கம். அழுக்கும், வியர்வையுமாய்... சிள்வண்டு இரைச்சலை மட்டுமே கேட்டுக்கொண்டு, உறக்கமற்று கழிகிற சோக ராத்திரிகள், சூன்ய இரவுகள்.

அத்தையின் வீட்டில், இவனது எதிர்காலக் கனவுகள், அதற்காக அத்தையின் பலவீனத்தை வணங்க வேண்டியிருக்கிறது. பல்லைக் கடித்துச் சகிக்க வேண்டியிருக்கிறது.

இதற்குத் தீர்வேயில்லையா? அத்தையின் மரணத்தைத் தவிர, வேறு மாற்று வழியேயில்லையா?

''என்னத்துக்குச் சங்கடப் படணும்? தலை யெழுத்தா? வேணும்னா... மருமகனும் இந்த வீட்லேயே வந்து இருக்கட்டும்'' என்கிற மாரித்தாய்.

தீப்பெட்டியாபீஸ் வேலையை விட்டு விட்டு... பட்டிக்காட்டில் என்ன செய்வது? வேறு தொழில் தெரியாதே. சின்ன வயசிலிருந்து பழகிப் போன கந்தக நெடி.

''தொட்டதை விட்டவனும் கெட்டான்; தொடா ததைத் தொட்டவனும் கெட்டான்'' என்று பெரியவர்கள் சொன்ன சொலவடை, பொய்யா? அனுபவ ஞான மல்லவா!

கெட்டுச் சீரழியவா, அத்தை வீட்டில் போய் குடும்பம் நடத்தணும்...?

## 15

''என்ன, பேச்சையே காணோம்?'' பரிகாச மில்லாத மென்மையான கேலிப் புன்னகையோடு, சீண்டுகிற பார்வதி.

மல்லாக்கப் படுத்துக் கொண்டு, இவள் பக்கம் திரும்பாமல் கூரையைப் பார்த்துச் சிரித்தான். லேசான அசட்டுச் சிரிப்பு. சமாதானத்திற்கு வருகிற—பணிகிற—குழைவான சிரிப்பு.

''சரியம்மா...ரொம்பக் கிராஸ் கேள்வியெல்லாம் கேக்காதே...அத்தையை என்னாலே கேக்க முடியாது. ஒத்துக்கிடுதேன். போதுமாம்மா?''

''அதான் கேக்கேன்...எதுக்கு?''

''இங்க பாரு...என்னை ரொம்பத் தூண்டித் துருவிப் பாக்காதே. என்னோட ஆழம் என்னங்குறது, நீயறியாதது இல்லே. ஒனக்குத் தெரியாம ரகசியம் எதுவும் ஏங்கிட்டே இல்லே. ஆனா...ஒரு விஷயம்''

இப்போது ராகவனின் குரல் வித்தியாசப்படுகிறது. குழைவு, பணிவு, அசட்டு நெளிவு எதுவுமில்லாத உயர் கம்பீரமாய்...நிமிர்ந்தெழுகிற குரல். கம்பீரத் தொனி.

''என்ன?''

''என்னோட ஆசை... திட்டம்... கனவு... முயற்சி யெல்லாம், எனக்காக மட்டுமானதுல்லே. ஒனக்கும், புனிதனுக்கும் சேர்த்துத்தான். ஒரு நல்ல குடும்பமா, நாம உயரணும்ங்கிற கூட்டாசைதான். பேராசைதான். நல்லாசைதான்.''

''அதை யாரு இல்லேன்னாக? நீங்க நல்லமனுசர் தான்ங்குறதை நானும் ஒத்துக்கிட்டேன்லே?''

''அப்புறம் எதுக்கு வெட்டி வெவகாரம்?''

பார்வதி சிரித்தாள். உறங்கிவிட்ட புனிதனை அலுங்காமல் குலுங்காமல், நிதானமாகத் தூக்கினாள். உறங்கும் போதும் விழித்திருக்கும் பெண்மைக்குரிய எச்சரிக்கையோடு... ஜாக்கட்டையும். மாராப்பையும் அந்த நிலையிலும் சரிப்படுத்தி ஒழுங்கு செய்து கொண்டாள், பார்வதி.

''ஒறங்கிட்டானா...?''

''ம்''

''அப்ப... இனிமே நமக்குச் சுதந்திரம்தான்''

குறும்பும், விளையாட்டுமான ராகவனின் குஷிக் குரல். மனசின் உல்லாச விசிலடிப்பு.

மகனை தோளில் சாய்த்துக் கொண்டே, கேள்விக்குறி முகத்தோடு ''என்ன சுதந்திரம்?'' என்கிற பார்வதி.

ஒருவித மர்மச் சிரிப்போடு, நெட்டிமுறிக்கிற ராகவன். சிரிப்புக்கும் அப்பால், அவனது கண்கள் பேசுகிற வினோதப் பாஷை. கிசுகிசுப்பான மோகராகம். மன்மத மின்னலில் ஒளிர்கிற முகம்.

''ச்சீய்...! சும்மாயிருங்க. பய பெறந்து ஆறுமாசம் கூட ஆகலே. அதுக்குள்ளேயா? ஐயய்யோ...என் னாலே முடியாதய்யா...என்னைக் கொல்லப் பாக்கீகளா?''

அவள் விளையாட்டும், சிரிப்புமாகப் பேசினாலும், உள்ளுக்குள் ஓர் அழுத்தம். அடர்த்தியான மறுப்பு. தீவிரத்தொனி. பார்வதியின் உள் மனச்சிடுசிடுப்பு. பயப்படபடப்பு.

அந்த ரகசிய மறுப்பை, நாகரீகமாக ஒப்புக் கொள்கிற ராகவன். அதை அவனும் வேடிக்கையும், சிரிப்புமான உறை போட்டே ஒப்புக் கொள்கிறான்.

''ஐயய்யோ...சரியம்மா. வேண்டாம்னா நிறுத்திக் கிடுவோம். அதுக்காக 'கொலை, கிலை'ன்னு என்னத்துப் பேசுதே? 'இதான் சாக்கு'ன்னு என்னை ஒத்தையிலே தவிக்க விட்டுட்டு...மறுபடியும் உங்கம்மா ஊருக்கு பஸ் ஏறிடாதே, தாயே...''

கூழைப் பணிவும், குழைவுச் சிரிப்புமாக கையெடுத்துக் கும்பிட்டான், ராகவன்.

பார்வதி எழுந்தாள். தொட்டிலின் அருகில் சென்றாள். புனிதனை தொட்டிலில் கிடத்தினாள்.

அவன் எழுந்து உட்கார்ந்தான். சம்மணம் போட்டிருந்தான். தலைமுடி கலைந்திருந்தது. பார்வதியையே பார்த்தான்.

''எனக்குப் பயமாயிருக்கு?''

''எதுக்கு?''

''நேத்துத்தானே வந்துருக்கே.?''

''ஆமா''

''நாளைக்கே உங்கம்மா வந்துருதாகளோ... என்னமோ.''

''அதுக்கு நீங்க எதுக்குப் பயப்படணும்?''

''வந்தாகன்னா...ஒன்னைக் கூட்டிட்டுப் போகத்தானே வருவாக?''

பார்வதி மௌனமானாள். அவளுக்கும், அதே பயம்தான். பயத்தின் அடர்த்தியில், மூச்சுத் திணறுகிற மனசு.

இறுக்கமாகிப் போன முகம், கவலையில் இறுகிப் போன முகம்.

"என்ன...'கம்ம்' முன்னு இருக்கே?"

"எனக்கும் அந்தக் கவலையிருக்கு. அதை நெனைச்சாலே...பயமாயிருக்கு"

"ஜோடி சேர்ந்து, உயிர் கலந்த மணிப்புறாக்களை பிரிச்சுப் போடணுமா? பிரிவு வேதனையிலே எரிஞ்சு சாம்பலாகணுமா?"

"வேண்டாம்தான். என்ன செய்றது? அம்மாவோட பாசம். மகளைப் பிரிஞ்சிருக்க முடியாத பாசம். உயிர்த் தொனைக்கு ஏங்குகிற பாசம்."

"பாசம்ங்குறது நல்ல விஷயம். நல்லதையே உண்டு பண்ணுகிற, நல்லது. ஆனா... அந்தப் பாசமே இங்க கெட்டதை உண்டு பண்ணுது. நம்ம அன்பு ரெக்கைகளை பிய்ச்சிப் போடுது"

"ஆமா...அதான் வினோதம். விதிக்கொடுமை...பூ சுடுதுங்குற மாதிரியிருக்கு. அமிர்தம் நஞ்சாயிருச்சுங்குற மாதிரியிருக்கு"

"எதுவுமே அளவா இருக்கணும். அளவுங்குறது ரொம்ப முக்கியம். அளவைமிஞ்சினா... எல்லாமே அபத்தம்தான். அமிர்தமும் நஞ்சாகும், அளவுக்கு மிஞ்சிட்டா..."

"நெசந்தான். நம்ம புனிதனை நாங்குடுக்குற பாலு தான் வளர்க்குது. அதேபாலை அளவுக்கு மேலே ஊட்டிட்டா...பயலுக்கு மாந்தக் கோளாறு வந்துரும்... நோக்காடாயிரும்"

"அதேதான். உங்க அம்மா பாசம்...எல்லை மீறுது. அளவைத்தாண்டுது. அதனாலேதான்...அது நம்ம

அன்பு ரெக்கைகளை எரிச்சுச் சாம்பலாக்குற பாசத் தீயாகுது''

மாரித்தாய் எந்த நிமிடத்திலும் வந்துவிடுவாளோ என்று பயந்து தவிக்கிற ரெண்டு மனசுகள். அம்மா வருகிறாள் என்றால்... ஆலாய் பறக்க வேண்டிய மகளே, 'வந்து விடுவாளோ' என்று பதறுகிறாள். பதறித்தவிக்கிறாள்.

வந்து உட்கார்வாள். அழுவாள். கண்ணீர் விடுவாள். முடிவில்லாமல் புலம்புவாள். அனுமார்வாலாய் அங்கலாய்ப்பாள். ஆத்திரப் படமுடியாது. கோபப்பட முடியாது. அதட்ட முடியாது.

''எங்களைப் பிரிச்சு வைச்சு ஏன் கூத்துப்பாக்கே.? போம்மா...போ... போய், ஓஞ்சோலியைப்பாரு''

என்று துரத்திவிட முடியாது. விரட்டிவிட முடியாது.

மாரித்தாய் இவளுக்கு அம்மா. பெற்ற அம்மா. ஆயுளையே எரித்துக் கொண்ட அம்மா. பாசமுள்ள அம்மா.

மாரித்தாயின் தயவு, ராகவனுக்கு வேண்டும். அன்பு வேண்டும். கனிவும், கருணையும் வேண்டும். ஆசியும், கிராமத்து வீடும் வேண்டும், அதற்குள்தான்.

இவர்களது எதிர்காலம். சுபிட்சம். வாழ்க்கை.

'மாரித்தாய் வந்து விடுவாளோ' என்று கணந்தோறும் கலங்கித் தவிக்கிற ராகவன்.

## 16

நடுச்சாமத்திற்கும் மேலாகி விட்டது. மாரித்தாய்க்கு உறக்கமே ஒட்டவில்லை. கண்ணுக்குள் முள் வைத்துத் தைத்த மாதிரியிருந்தது. கண் உறுத்தியது. குத்தலெடுத்தது.

மகள் இல்லாமல், உலகமே இல்லாமல் போன மாதிரியிருக்கிறது. சூன்யப் பிரமாண்டம். வெறுமைப் பயங்கரம்.

மதியம் சாப்பிடவில்லை. கொலைபட்டினியாய் கிடந்தாள். பசிக்கத்தான் செய்தது. சாப்பிடத் தோன்ற வில்லை. மனசின் அயற்சியும், விரக்தியும் திரேகமெல் லாம் பரவியிருந்தது. ரத்த அணுக்கள் முழுக்க வியாபித்திருந்தது.

செயல்படாமல் அயற்சியுற்றுக் கிடந்தாள், சுருண்டு கிடந்தாள். சலனமற்று, அசையக் கூடத் தோன்றாமல், துவண்டு கிடந்தாள். வெயிலில் வெட்டிப்போட்ட பசுங்கொடிபோல வாடியிருந்தாள்.

உள்வாசல்ப் படியில் தலைவைத்துப் படுத்திருந் தாள், மாரித்தாய்.

நிற்காமல் இயங்குகிற காலம். சுழல்கிற பூமி. நகர்கிற பொழுது. பொழுது அடைந்து விட்டது. இருட்டிய பிறகும் சாப்பிடத் தோன்றவில்லை.

''சாப்புடுதீயாம்மா?'' என்ற பார்வதியின் குரல், 'இதோ வரப்போகுது, அதோ வரப்போகுது' என்று நிஜமாய் நம்புகிற மனசு, அப்படியோர் கேள்வியை எதிர்பார்த்து ஏங்குகிற உணர்வு. உள்ளுணர்வு மயக்கம்.

பார்வதியின் காலடிச் சத்தம் கேட்கப் போகிறது என்று ஒவ்வொரு கணமும் எதிர்நோக்கித் துடிக்கிற

மனசு, உயிரின் சகல சக்தி முழுவதும் செவியில் குவிந்து நின்றது.

'ஏதோ ஓடைக்குப் போயிருக்கிற பார்வதி, இதோ வந்து விடப்போகிறாள்' என்று காத்திருக்கிற செவிகள். 'ஏன் இன்னும் வரலை' என்று சலித்துக் கொள்கிற மனசு.

"போனா... போன எடம், வந்தா... வந்த எடம்... இப்படியே பழகிப்போச்சு, பொட்டைப் புள்ளைக்கு. 'போனோம், வந்தோம்'னு இருக்க வேண்டாமா? பொசுக்குன்னு வரவேண்டாமா? மசமசன்னு இருந்தா... எபபடி" என்று சலிப்போடு ஓடுகிற நினைவுகள். சித்தப்பிரமை பிடித்தவளைப் போலப் புலம்புகிற அவள்.

'பார்வதி ஊருக்குப் போய் விட்டாள்...' என்ற நிதர்சனம் நினைவில் முட்டுகிற போது... அவளுக்குள் வெடிகுண்டு வெடித்த மாதிரியோர் அதிர்வு. ரத்தமும், சதையும் சிதறல் சிதறலாக தெறித்து விழுகிற மாதிரி யோர் பிரமை.

மகளைச் சாகக் கொடுத்து விட்டவளைப் போல... நெஞ்சில் அறைந்து கொள்கிற மாரித்தாய்.

"அய்யோ... பாதகத்தி, என்னை நாதியத்தவளாக் கிட்டுப் போய்ட்டியே... உசுரைக் குடுத்து வளர்த்த தாயை, ஒத்தையிலே தவிக்க விட்டுட்டுப் போய்ட் டியே..."[2] என்று அழுது கதறுகிற பரிதாபம். அவமான அலறல். மனசின் சோகம் முழுவதும் பீறிட்டு வெடிக் கிற அழுகையாக முகம் காட்டுகிற அலங்கோலம்.

இருண்ட வீட்டிற்குள் விளக்கு கூட ஏற்றாமல், அப்படியே வாசலில் கிடக்கிற மாரித்தாய்.

பக்கத்து வீட்டுப் பெண் எட்டிப் பார்த்தாள்.

"என்னடியிது கொடுமை...? தெறந்து கெடக்குற வீட்லே, இருண்டு கெடக்குது. ஆளு இல்லியா?"

வாசலில் படுத்திருக்கிற நிழல் தோற்றம்.

"என்னக்கா... லைட் போடலியா?"

"போட்டு என்ன செய்ய? போடாம இருந்து என்ன செய்ய?"

விரக்தியின் உச்சத்தில், கிறுக்குப் பிடித்தவளைப் போல சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசுகிற மாரித்தாய். உயிரற்ற குரல். வேரறுந்து போய் வாடிப் போன குரல்.

அப்புறம்...

அந்தப் பெண் 'என்ன, ஏது' என்று விசாரித்து, மின்விளக்கு சுவிட்சைப் போட்டு... ஆறுதலாக நாலு வார்த்தைகள் சொல்லி... சாப்பிடச் சொல்லி நச்சரித்து, அவளே பழைய கஞ்சி வைத்துக் கொடுத்து...

சாப்பிட வைத்து...

இதோ... நடுச்சாமத்திற்கும் மேலாகி விட்டது. பார்வதியின் விரல் தீண்டவில்லை. மகளின் சுவாசச் சூடு வந்து உரசவில்லை. இருபது வருசத்து ஸ்பரிசம். ஸ்பரிச உணர்வு ரீதியான உரசல்.

எதுவுமேயில்லை. இமையும் மூடவில்லை.

இரவு முழுவதும் உணர்வில் உரசாமல் நகர்கிறது. எங்கோ கூவுகிற மயிலின் சத்தம். பனங்காடையின் அலறல். ஆந்தையின் சிறகடிப்பு. நாய்க்குரைப்பு. நாய்க்குரைப்புகள். இரவின் சத்தங்கள்.

உறங்காமல்—உறங்க முடியாமல்... நகரும் இரவைக் கவனித்தும், கவனிக்காமலும் புலம்பிக் கொண்டிருக்கிற கிழவி.

விடிந்தது. இனித் தாங்கவே முடியாது. மகளைக் கூட்டிக் கொண்டு வந்துவிட வேண்டியதுதான் என்கிற முடிவின் வைராக்யத்தோடு, பஸ் வந்து நிற்கும் இடத்திற்கு வந்தாள்.

## 17

பத்து மணிக்கு முதல்பஸ். சிலசமயம் பத்தரைக் குக்கூட வரும், ஒரு சில நாளில் வராமலேயே கூடப் போய் விடும்.

ஆனால்...

சரியாக விடிவதற்குள் மாரித்தாய் வந்து உட்கார்ந்து விட்டாள். பஸ் வந்து திரும்புகிற மைதானத்தின் விளிம்பில் ஒரு வேப்பமரம். மரத்தின் அடியில் உட்கார்ந்து விட்டாள்.

இவள் வந்து உட்கார்ந்த பிறகுதான்... பொழுதே தலையைக் காட்டியது. தங்கநிறத் தூளைக் கரைத்து மெழுகின மாதிரி... தரையெல்லாம், காலைப் பொழுதின் மஞ்சள் வெயில்.

பஸ் வரும் திசையிலேயே உயிரையும், பார்வையை யும் வைத்திருந்தாள். விடிந்ததிலிருந்து பச்சைத் தண்ணீர் பல்லில் படவில்லை.

நேரம், கனத்த பாரமாய் அழுத்தியது. நகர மறுத்து அடம்பிடித்தது. 'எப்படா பஸ் வரும்' என்ற ஒரே சிந்தனையில், மனசு துடித்தது.

ரத்த அணுக்கள் முழுவதும் 'மகளே, மகளே' என்று துள்ளித் துடித்தது. கண்ணுக்குள்ளேயே இருக்கிற மகளை, கையால் தொட்டுணர்கிற பாசவெறி.

பஸ் வந்தது, ஏறினாள். டிக்கட் வாங்கினாள். பஸ்ஸுக்கு முந்திக் கொண்டு ஓடுகிற நினைவுகள். ஆவல் பறப்பு, ரெக்கையடிக்கிற ஆர்வப் பறவைகள். பாசப்பறப்பு.

எங்காவது ஒரு ஸ்டாப்பில் பஸ் நின்றால்... துடித்துப் போகிறாள். கொதித்துப் போகிறாள். 'பாவிப் பயக...' என்று பஸ்காரனைத் திட்டுகிறாள்.

ஆலமரத்து ஸ்டாப்பில் இறங்கினாள். மண்ணுக்குள் இறங்கியிருந்த விழுதுகள். அதுவே ஒரு மரத்தூராக மாறியிருக்கிறது. நிழலில் உட்கார்ந்திருந்தாள்.

அங்கே—

ஒரு பெண். இளவயசுப் பெண். நன்றாக இருந்தால்... இருபத்தைந்து வயது இருக்கும். கறுப்பாக இருந்தாள். ஆனால் லட்சணமாக இருந்தாள். மூக்கும், முழியும் கச்சிதமாக இருந்தாள்.

கால் விரல்களில் மிஞ்சிகள். கழுத்தில் தாலி. ஒரு பயணத்திற்கான அலங்காரமில்லை. ஒரு பழைய சேலை. சிவப்பில் மஞ்சள் பூப்போட்ட சேலை. எண்ணெய் தேய்க்காமல்... சும்மா அள்ளி முடியப்பட்டிருந்த தலைமுடி. காலில் செருப்பு இல்லை.

முகத்தில் ஒரு சோக நிழல். கனத்த கரிய நிழல். வாழ்க்கையின் தாக்குதலில் நொறுங்கிப் போனவளாகக் காணப்பட்டாள். கண்ணில் ஒரு துயரம். வாட்டம்.

அவளைப் பார்த்தாள், மாரித்தாய். கவனிக்கவில்லை. கவனமெல்லாம்... 'மகள் ஊருக்குப் போகிற பஸ் எப்பவரும்' என்ற சிந்தனையில்தான். உயிரே அதில் தான்.

ஆனால்... அந்தப் பெண்ணின் வயது. முகத்தின் வேதனை. வாட்டம். துயர நிழலின் கனம்.

கவனிக்கும்படி இழுத்தன. மகளைப் பெற்ற பாசத் தாயின் அடிவயிற்றுக்குள், ஏதோ ஒரு பிசைவை ஏற்படுத்தக்கூடிய சோக வாட்டம்.

கவனித்தாள். கிட்டத்தில் போய் உட்கார்ந்தாள்.

''என்னம்மா... ஊருக்கா?''

''ஆமா...''

''கூட யாரும் வரல்லியா?''

''இல்லே''

''சின்னப் பொண்ணா இருக்கீயே...ஒத்தையிலே வாரீயேன்னு யோசிக்கேன்...''

கசந்த சிரிப்பாக ஒரு சிரிப்பு சிரித்தாள். கதறியழுகிற ஓர் அழுகையைவிட, அடர்த்தியான துக்கத்தை உணர்த்திய ஒரு வேதனைச் சிரிப்பு.

''ஏம்மா...இப்புடிச்சிரிக்கே?''

''ஒத்தையிலே வாரத்துக்கே ஆச்சரியப்படுதீக. நா என்ன காரியத்துக்குப் போறேன்னு தெரிஞ்சா... எம்புட்டு ஆச்சரியப்படுவீக? அதை நெனைச்சுச் சிரிச்சேன்...''

''என்னத்துக்குப் போறே, தாயீ...?''

கனிவும், கருணைக்கசிவும், பரிவுமாகக் கேட்கிற மாரித்தாய்.

''எம்புருஷனைக் கொல்றதுக்காகப் போறேன்...''

மாரித்தாயுக்குள் 'திக்'கென்று இருந்தது. கொஞ்ச நேரத்திற்கு ஒன்றும் ஓடவில்லை. 'ஒரு பொம்பளை பேசுகிற பேச்சா, இது?' திகைப்பிலிருந்து விடுபட முடியாமல், தத்தளிக்கிற மாரித்தாய்.

'யாரோ...எவரோ' என்ற அந்நியத்தன்மை சுத்தமாக மறந்துபோக...மகளைக் கேட்கிற உரிமை உணர்வுடன், மனக்கொதிப்போடு கேட்டாள்.

"ஏண்டி பாதகத்தி, என்னத்துக்கு இப்புடிப் பேசுதே? ஒரு பொம்பளை பேசுற பேச்சா? புருஷனைக் கொன்னுட்டு, நீ என்ன செய்யப்போறே?"

"அதைப்பெறகு பாப்பம்..." கண்ணகியின் கொதிநிலையில் அந்தப் பெண். சீற்றமாய், அலட்சியமாய் எகிறுகிற அவள், உயிரை வெறுத்த கோப நிலையில்... பத்ரகாளியாக அந்தப் பெண்.

## 18

பதறித்துடித்துப்போன மாரித்தாய். அவளது தாய் மனசு கிடந்து தவித்தது. 'கொலை பாதகம்' என்றால் சும்மாவா? சாதாரணமா?

புருஷனைக் கொன்றால்...அவனது சாவு. இவளுக்கு ஜெயில், தூக்கு. ரெண்டு சாவுகள். அதோடு, மூன்றாவதாக ஒரு சாவு. தாம்பத்யமரணம். வாழ்க்கையின் மரணம். குடும்பத்தின் மரணம்.

திகிலடைந்துபோய், வெலவெலத்துப்போன மாரித்தாய் பரிவும், பதைப்புமாகக் கேட்டாள்.

"கொலை பாதகம் ஆகுற அளவுக்கு, அப்படி என்னடி பண்ணிட்டான்?"

"அது பெரிய கதை..."

"சொல்லுடி. இப்படி ஒரு வார்த்தையைக் கேட்டுட்டு... நா எம்பாதையிலே போனா... நா மனுச

ஜெம்மமா? மனுசத்தன்மையுள்ள ஒருத்தி சும்மா போவாளா? சொல்லுடி... ஓங்கதையை..."

"கேட்டு, நீங்க என்ன செய்யமுடியும்?"

"என்ன முடியுதோ... ஏதுமுடியுதோ... அது அப்புறம், நீ சொல்லுடி... நாங்கேக்கேன்..."

அந்தப் பெண் கதை சொல்ல ஆரம்பிக்கிறபோது... பார்வதி ஊருக்குப் போகிற பஸ் வந்தது. இதையும் பார்த்தாள் மாரித்தாய். பஸ்ஸுக்குப்போக நினைக்க வில்லை.

இவள் மனசு முழுவதும், இந்தப் பெண்ணிடம் குவிந்திருந்தது. அவளது வாழ்வை, வாழ்க்கையாக்க ணும் என்கிற வேட்கை. தாயின் வேட்கை. மனுசத் தன்மையுள்ள மனுசியின் வேட்கை.

பார்வதியை மறந்துவிட்டாள். இன்னொரு மகளிடம் பாசத்தைப் பொழிந்து கொண்டிருந்தாள்.

அந்தப் பெண் தான் சொல்லப்போகிற அவலங் களை நினைத்துப் பார்த்தாள். அந்தக் காட்சிகள்... சம்பவங்கள்... அதன் வேதனை உணர்ச்சிகள்... ரண அனுபவங்கள்.

அவள் முகத்தில் கவலையின் கரியநிழல். வாடிப் போன முகத்தில், ஒரு கலக்கம். கண்களில் நீர்த் துளிர்ப்பு.

வெட்டுப்பட்ட பல்லிவாலின் துடிப்பாக; அது உதட்டின். வேதனை உணர்ச்சியின் துடிப்பு.

"சொல்லும்மா..." கனிந்த குரலில் மாரித்தாய். இளவயசில் துணையையிழந்தவள். நாதியற்ற பெண்ணின் வாழ்வுச் சூன்யம், எத்தனை கொடிய நரகம் என்பதை பட்டு, அழுந்தி... அறிந்தவள். அதே

கதியை அடையப்போகிற ஓர் இளம் பெண். நிர்க்கதியடையப்போகிற சிறு பெண். தனது பழைய நிலையில்...இவள்.

தன் மீதே கொண்ட சுயபரிதாபம் முழுவதும் ஒன்று திரண்டு...பாசமாக, பரிவாகப் பீறிடுகிறது, மாரித்தாயிடமிருந்தது.

அந்தப் பெண்ணின் உதட்டசைவு. புரளும் நா; உருக்கி ஊற்றப்பட்ட உலோகத்திரவமாக உருண்டு ஊர்ந்து வருகிற வெக்கைநதி. அக்கினி உணர்ச்சிகள். கற்றைச் சோகமாய் ஒரு வாழ்க்கை.

''எங்கய்யாவுக்கு நா மூனாவது பொண். மத்தது ரெண்டும் செத்துப்போக...தங்குனது நா ஒருத்திதான். ஆனா...நா ஒரு பாவி. உயிர் தங்குன நா...பதிலுக்கு அம்மா உயிரைப் போக்கடிச்சுட்டேன்.

கைக்குழந்தையோட அய்யா. ஊரே ஒண்ணுகூடி உபதேசம் பண்ணியிருக்கு, 'மறுகல்யாணம் பண்ணிக்கிடச்சொல்லி'.

அய்யா ஒரேயடியா மறுத்திட்டாரு. ஒத்தையிலே கெடந்து சீரழிஞ்சு, செங்கல் சுமந்து...படாதபாடுகளெல்லாம் பட்டு...என்னை வளர்த்துருக்காரு.

எனக்குப்பேன் பாத்து...தலைசீவி...நா மலங்கழிச்ச துணிமணியைத் தொவைச்சு... எங்கய்யா பட்ட பாடுகள்...பட்ட கஷ்டங்கள்...என்னை வளர்க்குறதுக்கு. அவர் அனுபவிச்ச தும்பதுயரங்கள்...சொல்லிமாளாது, அழுது தீராது.

எங்கய்யாவுக்கு கோவில் கட்டிக்கும்பிடலாம். அம்புட்டுப் பண்பானவரு. ஒசந்த மனசுக்காரரு. பாசத்துக்காக வாழ்றதே வாழ்க்கைன்னு வாழ்ந்து காட்டுனவரு.

எனக்குக் கல்யாணமாயிச்சு.

அப்ப, எம்பாடுதான் ரொம்பக்கஷ்டமாயிருச்சு. இத்தனை வருஷத்துக்குப் பெறகு, எங்கய்யாவை அடுப் பூதவிடவா? ஒத்தையிலே விட்டுவிடவா? கைச்சமைய லாக்கி, கஞ்சி குடிக்கிற நெலையிலே...வயசான எங்க அய்யாவை நிராதரவா - நிர்க்கதியா - விட்டுட்டுப் போகவா?

மயங்கி மயங்கி அழுதேன். மாலை மாலையா கண்ணீர் வடிச்சேன். எங்கய்யா என்னைத்தான் சத்தம் போட்டாரு. கண்டிச்சாரு. ஆறுதல் சொன்னாரு. தைர்யம் சொன்னாரு. ''புருஷனோட சேர்ந்து நீ வாழ்றதுதான், முக்கியம். ஜோடி சேர்ந்து நீங்க நடத்துற குடும்பம்தான், முக்கியம். என்னை முக்கியமா நெனைக் காதே''ன்னு சொன்னாரு...உள்ளுக்குள்ளே ஒருவண்டி வேதனையை ஒளிச்சுவைச்சுக்கிட்டு, சிரிச்ச மொகத்தோட என்னை வழியனுப்பிச்சுவைச்சாரு...

மூனு வருசமாச்சு. நானும், எங்க வீட்டுக்காரரும் ஒத்துமையாத்தான் இருந்தோம். ஒரு பிரச்னை இல்லே. சந்தோஷமாயிருந்தோம்.

அய்யாவை ஒத்தையிலே வுட்டுட்டு இங்க இருக்கே னேன்னு சாப்புடறப்பவெல்லாம் புலம்புவேன். எங்க வீட்டுக்காரரு ஆறுதல் சொல்லுவாரு. இல்லேன்னா எரிச்சல்பட்டுக் கத்துவாரு...

மூணு வருசத்துலே ஏழெட்டுத் தடவைதான் அய்யாவை வந்து பாத்துட்டுப் போயிருப்பேன்.

இப்ப... அய்யாவுக்கு மஞ்சக் காமாலை நோய். ஏங்கூட வந்து இருங்கன்னு கூப்புட்டேன். மாட்டேன் னுட்டாரு, 'மருமகன் தயவுலே வாழ்றது, மரியாதையா யிருக்காது'ன்னுட்டாரு. அவருக்கு ரொம்ப வைராக்ய மான மனசு.

அப்ப... என்ன செய்ய?

வீட்டுக்காரருகிட்டே பேசி... கெஞ்சிக் கூத்தாடி... அழுது மன்றாடி... சம்மதம் வாங்கிக்கிட்டு, அய்யாவைப் பார்க்க வந்தேன். மஞ்சக் காமாலையிலே கெடந்து சீரழிஞ்ச எங்கய்யாவை, கைப்பக்குவத்துலேயே கொணப்படுத்துனேன். அது சீரானவுடனே... வைசூரி விளையாடியிருச்சு. அம்மை விளையாடி, படுத்துக் கெடக்குற அய்யாவைப் போட்டுட்டு... நா எப்படிப் போக? அவருக்குத் தாவலையாகி... மூத்து எறங்கி... நேத்துத்தான் மூனாந்தண்ணி தலைக்கு ஊத்துனேன்...

வீட்டுக்காரரை விட்டுட்டு வந்து மூனு மாசமாச்சு, இதுக்கிடையிலே ரெண்டு மூனு தடவை வந்துருந்தாரு, தேடி. 'அங்க வரல்லியா... அங்க வரல்லியா'ன்னு நச்சரிச்சாரு. சாய்ஞ்சு கெடக்குற அய்யாவைக் காட்டி...! 'நா எப்படிப் போட்டுட்டு வர்றது'ன்னு கேட்டேன். அரை மனசா... முணுமுணுத்துட்டுப் போனாரு...

இப்ப என்னடான்னா... ஒரு பொம்பளையை சேத்துக்கிடப் போறாராம். நா வர வேண்டாமாம். அப்படீன்னு ஆள்மூலமா தாக்கல் சொல்லி விட்டுருக்காரு.

நேத்துத்தான்... தாக்கல் வந்துருச்சு.

மனசு கெடந்து கொதிச்சுப் போச்சு. தாங்க முடியலே. மூனு வருஷமா ஒத்தையிலே கெடந்த அய்யா. சீரழிஞ்சு கெடந்த அய்யா. ஆயூசு பூராத்தை யும் எனக்காக எரிச்சுக்கிட்டுச் சாம்பலாக்குனவரு.

அப்பேற்பட்ட அய்யா நோக்காடு வந்து, சாய்ஞ்சு கெடக்குறப்பகூட பெத்த மகா, எட்டிப்பாக்க வேண்டாமா? உத்தது உரியதைப் பார்க்க வேண்டாமா?

மூனு மாசம் கூடத் தாங்க முடியலே? ஆம்பளைக் கென்ன கொம்பா மொளைச்சிருக்கு? பதினோரு மாசமா அவருக்கு மட்டும் அப்படியென்ன சட்டம்?

அதுக்குள்ளே ஆளு தேடிக்கிட்டா எப்படி? அப்ப, எந்தாலிக்கு என்ன அர்த்தம்?

அதான்... இப்பப்போறேன். என்ன ஏதுன்னு... விசாரணையில்லே. கேள்வியில்லே. போன ஒடனே... அருவாளாலே ஒரே போடு. கொன்னு மலர்த்திடுவேன்..

இப்படிப்பட்ட மப்பேறுன ஆம்பளையை மண்ணுலே உசுரோட நடமாட விடவே கூடாது. ஊருக்கும் ஆகாது... ஞாயத்துக்கும் ஆகாது...''

அழுகையும், கண்ணீருமாய் சொல்லி முடித்த அந்தப் பெண். சொல்லி முடிக்கிறபோது, அவள் கண்ணில் இருந்த சிவப்பு, புண்பட்ட மனசின் கொதிப்பு, பத்ரகாளியின் ரௌத்ரத்தகிப்பு. ஆவேசக் கொந்தளிப்பு.

மாரித்தாய் கேட்டாள். இவள் சொல்வதும், செய் வதும்கூடச் சரிதான். நியாயந்தான். இப்படிப்பட்ட ஆண் மகனுக்கு இவள் தரவிருக்கிற தீர்ப்பு கூட நீதியானதுதான்.

ஆனால்... அதற்கான விலை?

ஒரு குடும்ப நாசமா? இரண்டு உயிர்களின் மரணமா? வாழ வேண்டிய இரண்டு இளம் தளிர்களின் அழிவா?

மாரித்தாயுக்குள் வந்த நடுக்கம். 'அடப் பாதரவே' ஒன்று அலைபாய்கிற மனசின் பதைப்பு. 'இதை எப்படி யாச்சும் தடுத்தாகணும். இவளை எப்படியாச்சும் வாழ வைச்சாகணும்.' அவளுக்குள் உறைகிற உணர்வுகளின் வைராக்யம்.

எப்படி வாழவைக்க? அரிவாளைத் தூக்குகிற கொலைவெறி கொண்ட மனசை, எப்படிக் கொழை யடிக்க? எப்படிக் குளிரவைக்க?

மூனு மாசத்தில் முருங்கை மரம் ஏறுகிற அந்த மனுச வேதாளத்தை எப்படி இறக்க? எப்படி மனுசனாக்க? முடியுமா? நடக்குமா? சாத்தியப்படுமா?''

மனசுக்குள் மருகித்தவித்த மாரியத்தாயுக்குள், ஒரு சின்ன ஒளிப்புள்ளி, சின்னப்புள்ளி.

ஒரு பொண்ணைச் சேத்துக்கிடத்தான் போறான். இன்னும் சேத்துக்கிடலை. இப்பவும் தடுக்கலாம். அந்தத் தப்பான – கூடா உறவை நறுக்கலாம். புத்தி சொல்லலாம். ரெண்டு சிறுசுகளுக்கும் புத்திமதி சொல்ல லாம். சரிக்கட்டலாம்... சமாதானப்படுத்தலாம்... இது களை வாழ வைக்கலாம். இவா வேற, பார்வதி வேறா? ரெண்டும் ஒண்ணுதான். புள்ளைகதான்.

ஆனால், அப்போது அவளுக்குள் ஒரு மின்னலைப் போல வந்து, உள்ளுக்குள் தாக்கி விட்டுப் போன ராகவன்.

சேர்ந்து வாழ முடியாம அவன் பட்டிருக்கக்கூடிய சிரமங்கள், கஷ்டங்கள். குடும்பமான பிறகும், குடும்பமில்லாதவனைப் போல அவன் திரிந்த அலங் கோலம். சங்கடப்பட்டிருக்கக் கூடிய துன்பங்கள்.

ஆனால்... அதற்காக அவன் பொறுமை இழக்க வில்லை. குணம் மாறவில்லை. திசை நழுவவில்லை. இவளைப் பார்த்தபோது—

அத்தை என்கிற மரியாதை குறையவில்லை. எரிச்சல் படவில்லை.

மாரித்தாயுக்குள் மருமகன் ராகவன் ரொம்ப உயரமாகத் தோன்றினான். ஒரு பெருமூச்சுடன். ஒரு

வைராக்யத்துடன்— இந்தப் புதிய மகளிடம் பேச ஆரம்பித்தாள், மாரித்தாய். புதிய தாய்.

## 19

மதியம் ரெண்டு மணியாகிவிட்டது. மேனேஜர் அறைக்குள் நுழைந்தான் ராகவன்.

''என்னப்பா?''

''சாப்புட்டு வந்துரட்டா...ண்ணாச்சி?''

''போய்ட்டு சீக்கிரம் வந்துரு.''

''சரிண்ணாச்சி, உங்க சைக்கிளை எடுத்துட்டுப் போகட்டா? வெருசா வந்துரலாம்''

ம்.. ம்...ம்... இந்தா சாவி...''

மேனேஜரின் குரலில் மெல்லிய எரிச்சல். இலேசான சிடுசிடுப்பு. இந்த மாதிரி வேலையில், இதெல்லாம் ச்கஜம் என்கிற நாள்பட்ட அனுபவத்தில்... எவ்வித வருத்தமுமில்லாமல் சகஜமாகச் சிரித்தான், ராகவன். சைக்கிள் சாவியை எடுத்துக் கொண்டான்.

பகையாளி பார்வையைப் போல மதியவெயில் சுள்ளென்று சுட்டது. கன்னச்சதையில், சருமத்தில் காந்தல் எடுத்தது.

சைக்கிளை வேக வேகமாக மிதித்தான். அவனுக் குள் ஒரு வகையான பதைப்பு. சந்தேக நமைச்சல். அச்சப் படபடப்பு.

''அத்தை வந்துருப்பாகளோ... பார்வதியை கூப்புட்டுப் போக வந்து, வீட்லே உக்காந்துருப் பாகளோ...''

'பக், பக்' கென்றிருக்கிறது.

பார்வதி வந்து ஒருவாரமாகி விட்டது. ஏழு நாட்கள். நூற்றியறுபது மணி நேரத்திற்கும் மேலாகி விட்டது.

ராகவனுக்கு சந்தோஷமாக இருக்கிறது.

பார்வதி இருக்கிறாள் என்கிற சந்தோஷம். ஆள் முகம் பார்த்துச் சிரித்துப் பரவசப்படுத்துகிற புனிதன் இருக்கிறான் என்கிற ஈர்ப்பு, ஆர்வப் பரபரப்பு. வீடு, 'வா, வா' என்று கண் சிமிட்டியழைக்கிறது.

கூடவே ஒரு பயம். அத்தை வந்துருவாளோ என்கிற பயம், நிரந்தரமாகக் குத்தியழுத்திக் கொண்டே யிருக்கிறது. எப்போதும் நிரந்தரமாக ஒரு திகில்.

வீட்டு முற்றத்தில் சைக்கிளை நிறுத்தினான், ராகவன். வாசலில் முளைக்கிற முழு நிலாவாக... பார்வதி முகப் புன்னகை.

''வந்துட்டீகளா?!' என்று ஆர்வக் குதூகலத்தோடு வந்து இனிக்கிற சங்கீதம்.

கால் கையைக் கழுவிக் கொண்டு, வாசலில் நுழைகிற ராகவன், துண்டோடு எதிர்கொள்கிற பார்வதி. வாங்கித் துடைத்துக் கொண்டே, வீடு முழுவதையும் திகிலோடு பார்க்கிற பருந்துப் பார்வை.

''ஹ...ப்பா! அத்தை வரல்லே'' என்று உள்ளுக்குள் முணுமுணுத்து ஆசுவாசப்படுகிற ராகவன்.

அவனது பருந்துப் பார்வையையும், முகப் பிரகாசத்தையும் நுட்பமாக் கவனித்துவிட்ட பார்வதி,

''என்ன?''

''ஒண்ணுமில்லே''

இவள், அவன் மனசின் ரகசியத்தைப் புரிந்து கொண்டாள். ''எங்கம்மா வரலைங்குற சந்தோஷமா?''

என்று கேட்க நினைத்துவிட்டு, கேட்கவில்லை. சும்மா சிரித்தாள்.

''பயலை எங்கே...?''

''இப்ப வரைக்கும் ஏங்கூட வெளையாடிக்கிட்டு இருந்துட்டு இப்பத்தான் ஒறங்குறான்.''

''சாப்புடுதீகளா?''

''அதுக்குத்தானே வந்துருக்கேன்.''

அவள் சோறு வைத்தாள். அவசர அவசரமாகச் சாப்பிட்டான். பக்கத்தில் உட்கார்ந்து பார்க்கிற பார்வதியின் பரிவுணர்ச்சி, கண்ணின் குளிர்ச்சி.

அவளை நிமிர்ந்து நிமிர்ந்து பார்த்துக் கொண்டே சாப்பிட்டான். தயிரை ஊற்றுகிற போது—

அவளைப் பார்த்து, குறுஞ்சிரிப்பாகச் சிரித்தான்.

''என்ன... சிரிப்பாணி?''

''ஒரே ஆச்சரியமாயிருக்கு''

''என்னத்துக்கு?''

''இன்னும் ஒங்க அம்மா வரல்லியே...''

''அதுதான்... எனக்கும் கூட அதிசயமாயிருக்கு''

ரெண்டு பேரும் சிரித்துக் கொண்டனர். கசந்த மனதிலிருந்து, கசிந்த சிரிப்பு. ஒளியற்ற—உயிரற்ற—சிரிப்பு.

''யாரு... ராகவன் இருக்கானா?''

வாசலுக்கு வெளியே ஒரு குரல். 'போஸ்ட்மேன் குரல் மாதிரி யிருக்கிறதே' யோசனையோடு இவன் தலையை நீட்டி எட்டிப் பார்க்கவும், வாசலில் போஸ்ட்மேன் தோன்றவும் சரியாக இருந்தது.

''அண்ணாச்சி... இருக்கேன்''

''தம்பி... ஒங்களுக்கு ஒரு தபால்''

பார்வதி போய் வாங்கினாள். நீலநிறக் கடிதம். 'கடிதம் போட யாரு இருக்காக...' என்ற யோசனை யுடன், தயிர்ச் சோற்றை முழுங்கினான். கையைக் கழுவித் துடைத்தான்.

''யாரு எழுதுனது?''

''சொன்னா... ஆச்சர்யப்படுவீக...''

''சொல்லு...''

''இந்தாங்க. நீங்களே பாருங்க. உங்க அத்தை தான்.''

''அத்தையா! நெசம்ம் மாவா?''

ஆர்வப் பரபரப்புடன் கடிதத்தைக் கிழித்தான். விரித்தான். ''அட... நெசந்தா'' என்ற மகிழ்ச்சித் துளிகள். பரவசப் பெருக்கு. நான்கு கண்களில் ஆனந்த மின்னல்.

பார்வதிக்கும் சேர்த்தே சத்தம் போட்டு வாசித்தான்.

''அன்புள்ள மருமகன் ராகவன் அவர்களுக்கு,

உங்கள் அத்தை ஆசியோடு எழுதிக் கொண்டது, நான் நலம். பார்வதி, புனிதன் நலமறிய ஆசை.

இங்கே ஒரு சின்ன முயற்சியில் இருக்கிறேன். ஒரு சின்னப் பெண்ணுக்கும் அவள் புருஷனுக்கும் ரொம்ப மனஸ்தாபம். குடும்பமே உடையும் என்ற நிலவரம். மனக்கலவரம்.

அந்தச் சின்னதுகளைச் சேர்த்து வைத்து, ஒரு குடும்பமாக வாழச் செய்ய வேண்டுமே என்று நான்

இங்கு பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன். இதற்காக நான் ஓடியலைகிறபோது—பேசிப் பேசிக் களைத்துப் போகிற போது — பார்வதியில்லாமல், நீங்கள் பட்டிருக்கிற சிரமம் எனக்குப் புரிய வருகிறது.

கிழவியின் ஆசையைவிட சின்ன வயசுப் பிள்ளைகள் நீங்கள்—உங்கள் வாழ்க்கைதான் ரொம்ப முக்கியம்.

பார்வதியை பார்த்துக் கொள்ளுங்கள். பாதுகாப் பாகவும், பரிவாகவும் நடந்து கொள்ளுங்கள்.

இந்தக் கிழவியையும் மனசின் ஒரு மூலையில் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

வாரா வாரம், ஞாயிற்றுக் கிழமை ஒருநாள் மட்டும் பார்வதி, புனிதனுடன் நீங்களும் வந்திருந்து, இந்தக் கிழவியோடு இருந்து சாப்பிட்டுவிட்டுப் போனால் போதும். அதுவே பெரிது.

ரொம்பச் சந்தோஷம்.

இப்படிக்கு
உங்கள் அத்தை
மாரித்தாய்.''

''டட்டடா...ங், டட்டடா...ங்''

விளையாட்டும், கும்மாளமுமாய் சவுண்டு கொடுத்த ராகவன். அவன் மனசின் மகிழ்ச்சிப் பேரொளி, பார்வதியையும் தொற்றிக் கொள்ள... அந்த வீடே, மகிழ்ச்சி வெளிச்சத்தில் பிரகாசித்தது.

# செய்தது

தலைவாசலைத் தாண்டி காலெடுத்து வைக்க முடியாமல் தயங்கி நின்றான் ராமசாமி. பாதங்களில் கனத்தகல்லைக் கட்டின மாதிரியிருக்கிறது. தேங்கித் திகைத்தான். மனசு கிடந்தது இடறியது. தவியாகத் தவித்தது. ஒரு பாவத்தைச் செய்கிற குற்றஉணர்வின் முள்சுமை.

தலைவாசல் படியிலேயே திகைத்துத் தேங்கினான். நிமிரத் தயங்குகிற கண்களை, மெள்ள மெள்ள நிமிர்த்தினான். பார்த்தான். அதோ... அந்த மூன்று வீடுகள். ராவுத்தமார் வீடுகள்.

இதே தெருவின் எதிர்ப்புறத்தில். பதின்மூன்று வீடுகள் தள்ளி, அடுத்தடுத்து மூன்று வீடுகள்.

முதல் வீடு இளம்பச்சை நிறத்தில், அப்துல்கலாம் வீடு. அடுத்த வீடும் அதற்கடுத்த வீடும் அண்ணன் தம்பிகள், அப்பாஸ், ரஜாக், ஓட்டு வீடுகள்.

கண்ணில் தெரிகின்ற அந்த இளம் பச்சை நிற வீடு. அதன் ரெட்டைக் கதவுகள். வாசல் தலைமாட்டில் அழகுக்காக மாட்டியிருக்கிற சங்குச்சர மாலைகள்.

கண்ணுக்குள் தட்டுப்படுகிற அந்த வீட்டுக்குப் போகணும். போகத்தான் மனசு வரவில்லை. தூக்க முடியாத கனத்த பாரமாக கால்கள். தயக்கத்தில் மருகித் தவிக்கிற மனசு.

ஆனால். போய்த்தான் தீரணும். மனசை இறுக்கிப் பிடித்துக்கொண்டு சொல்லித்தான் தீரணும். வேறு வழியேயில்லை!

எப்படிச் சொல்ல? என்ன மாதிரி சொல்ல? சொல்றதுக்கு வாய் வருமா? பச்சைப் புள்ளை கழுத்தைத் திருக மனசு வருமா?

பாசப்புன்னகையோடு மலர்ந்த பூப்போல கிட்ட வருகிற நட்பு முகத்தில் காறித்துப்ப வாய் வருமா? ஒரு பாவமுமறியாத உயிர்ச் சிநேகிதர் மனசைக் கிள்ளுறதுக்கு கை நீளுமா?

ராமசாமி மருகித் தவித்தான்.

ஆனால், கிள்ளியே தீரவேண்டிய கட்டாயம். காறித் துப்பியே ஆகவேண்டுமென்கிற நிர்ப்பந்த நிஜம். கழுத்தைத் திருகியே தீரவேண்டிய புறநிலை நிதர்சனம்.

என்ன செய்ய?

நாலஞ்சு வருஷத்துக்கு முந்தி, விடியற்காலம் பேப்பரை விரித்தால்...தலைப்புச் செய்தியே அதுதான்.

''பாபர் மசூதி இடிப்பு.''

எல்லா நாளிதழ்களிலும் பெரிய பெரிய புகைப் படங்கள். மசூதியின் பழைய தோற்றம். பெரிய பெரிய கும்பாவை குப்புறக் கவிழ்த்த மாதிரி. சரித்திரப் பெருமைகள் நிறைந்த மசூதிக் கட்டடப் படம்.

கும்பாவின் மீது நின்றுகொண்டு கடப்பாரையால் இடிக்கிற பலர் கடப்பாரையோடு நிற்கிற மனித உருவங்கள் கொண்ட படம்.

பார்க்கப் பார்க்க மனசு கிடந்து கொதித்தது. வெட்கித் திணறியது. அப்துல்கலாம் முதுகில் தான் சாணம் எறிந்து பாவம் செய்துவிட்ட மாதிரியோர் குற்ற உணர்ச்சி. முள்குத்தல். குத்தலின் உள் ரணம். ரணப்பரவல்.

அப்துல் முகத்தையே எதிர்கொள்ள முடியவில்லை. கோழைத்தனமான நடுக்கம். அவர் வீட்டு வாசல் கதவைத் திறப்பதைப் பார்த்தாலே போதும். ராமசாமி கதவைச் சாத்திக்கொள்வான்.

'என்ன மாமு, இப்படிச் செய்ஞ்சுட்டீகளே' என்று கேட்டுவிட்டால்... என்ன பதில் சொல்ல? எப்படிப் பதில் சொல்ல? முகம் பார்த்துப் பேசுறதுதான் எப்படி? முடியுமா?

உள்மனப் பதைப்போடு சாத்திய கதவுக்குப் பின்னால், தெருவில் நடந்து வருகிற ஸ்லிப்பரின் 'டடப்' டடப்' சத்தம். நெருங்கி வருகிற—நெருங்கி— கடந்து போகிற, 'டடப், டடப்'

ஸ்லிப்பர் செருப்புச் சத்தம் தேய்ந்து மறைந்த பிறகுதான், கதவைத் திறப்பான்.

பரிகாசமாகச் சிரித்தாள் ராசாத்தி.

"எதுக்கு இப்படிப் பயந்து சாவுறீக? ராவுத்தரு வூட்டுக் கோழியை களவாண்டுட்டீகளா?" என்று கேலி பண்ணுவாள். ராமசாமி அசடு வழிவான்.

இப்படியே இரண்டு நாள்.

டிசம்பர் 10-ம் தேதி கதவைத் தட்டுகிற சத்தம். ராமசாமி எழுந்து வந்தான். கதவைத் திறந்தான.

நெஞ்சுக்குள் அறைகிற மாதிரியோர் உணர்வு. வாசலை அடைத்துக்கொண்டு அப்துல்கலாம் சிரிக்கிற கனிவில் இருந்தபடியே புன்னகைக்கிற மாதிரி.

தடுமாறித் தத்தளிக்கிற ராமசாமி கையும்களவு மாகப் பிடிபட்டுக் கொண்டவனைப் போலத் தவிக்கிற ராமசாமி தர்ம சங்கடமாகக் குழம்பிப்போய்... "என்ன பாய்? என்ன மாப்புளே?" என்று உளறுகிற ராமசாமி.

மென்மைப் பரிகாசமான சிரிப்போடு உள்ளே வந்தார் அப்துல்கலாம்.

"என்ன மாமு... ரெண்டு நாளா ஆளே தட்டுப் படலியே..."

"சும்மாதான். ரொம்ப ஜோலிக."

"இதுதான் சும்மா. அதாவது, பொய். இல்லே மாமு?"

"என்ன மாப்ளே!"

"பார்க்க முடியாத அளவுக்கு ஜோலிகன்னு சொல்றது பொய் தானே, மாமு?"

"இல்லே மாப்ளே...மனசுக்கே சங்கடமாயிருக்கு... உங்க மனசு என்ன பாடுபடும்னு நெனைச்சா... வேதனையாவே இருக்கு."

"சரி மாமு...நீங்க போயி...இடிச்சீகளா?"

"இல்லே"

"இடிச்சது ஞாயம்னு நெனைச்சீகளா?"

"இல்லே பாவம்னு நெனைக்கேன்?"

"பெறகெதுக்கு நீங்க மருகணும்? யாரோ, எங்கோ செய்ஞ்ச ஒரு காரியத்துக்கு இங்கே எதுக்கு நீங்க கலங்கணும்?"

''இல்லே மாப்ளே... இருந்தாலும் இது ரொம்ப அநியாயம். சாமியே இல்லைன்னு சாதிக்கிற நாத்திகங்க கூட, கோயிலை பள்ளிக்கூடமாக்கணும்னுதான் சொல்லுவாங்க. இடிக்க மாட்டாங்க. இவங்க இடிச்சுட்டாங்களே. மாப்ளே...''

''எங்களுக்கும் அதுதான் வேதனை. அதுக்கு நாம என்ன செய்ய? மாமு நடந்தது நடந்து போச்சு. நாம எப்பவும் தாயா புள்ளையா, வழக்கம் மாறாம இருந்துட்டுப் போவம். நமக்குள்ளே என்ன இருக்கு?''

''அதுவும் வாஸ்தவம்தான். மாப்ளே.''

அப்துல் போய்விட்டார். அவரது சிரித்த முகம். அதன் கனிவு. உதட்டு ஈரமின்னல். கண்ணின் ஆழத்தில் படித்துநின்ற சோகநிழல். முகம் காட்டுகிற உள்ரணம். அதைக் கடந்து நின்ற அவரது பெருந்தன்மை பிரகாசம், மனித நேயக் கனிவு உறவுகளைப் பேணுகிற மனக்குழைவு. அதன் மிருது.

கண்ணுக்குள்ளேயே நின்ற அப்துல்கலாம், ஆகாயமாக விரிந்து, சிகரமாக உயர்ந்து வியாபிக்கிற அந்த மாமனிதம்,

''என்னங்க. வீட்டுக்கு வந்த மனுசரை உக்காரக் கூடச் சொல்லாம...நின்னு பேசியே அனுப்புச்சுட்டீகளே?''

என்று மென்மையாகக் கண்டித்த ராசாத்தியின் குரலைக் கேட்ட பிறகுதான் உணர்வுக்கு வந்தான். ராமசாமி, தன் தவறை உணர்ந்தான். 'தப்புத்தான்' என்று மனசுக்குள் சொல்லிக்கொண்டான்.

அப்துல்கலாமுக்கும் சேர்த்துச் சொன்ன மாதிரி. ஒரு யோசனையுடன் ''தப்புத்தான்'' என்று மீண்டும் சொன்னான்.

...அப்பேற்பட்ட அருமையான மனிதனிடம் போய் எப்படிச் சொல்ல?

ராமசாமிக்கு மலைப்பாக இருந்தது. மனசு கிடந்து பாறாங்கல்லாக இறுகிப்போன மாதிரியிருந்தது. தன்னால் சொல்லமுடியாது. சொல்லுகிற தைரியம் வராது. மூர்க்கம் வராது. தாட்சண்யம் பார்க்காமல் தாட்டியமாகப் பேசுகிற ராட்சஸம் வராது.

'பின் வாங்கிடலாமா? என்னாலே சொல்லமுடியாதுன்னு சொல்லிட்டு, ஒதுங்கிக்கிருவமா?'

ராமசாமிக்குள் வந்த கோழைத்தனம். மனுசத் தன்மையால் வந்த பயம். அன்பு, கருணை என்கிற உன்னத உணர்வினால் வந்த மனஉளைச்சல்.

தெருவே கூடி எடுத்த முடிவு. மொத்தத் தெருவும் கூடியிருந்தது. ரகசியமாகக் கிசுகிசுத்து, பயமும் பதைப்புமாகப் புலம்பி, அச்சத்தின் உச்சத்தில், விரக்தியின் விளிம்பில் எடுத்த முடிவு.

''மனுசத் தன்மையில்லாத காரியந்தான். ஈனத்தனமான முடிவுதான். ஆனா. வேற கதியில்லியே'' என்று கையைப் பிசைகிற தர்மசங்கடத்துடன் எடுத்த முடிவு கையறு நிலையில் வெட்க உணர்வின் வதைப்போடு எடுத்த முடிவு.

எப்படியாச்சும் சொல்லித்தானேயாகணும்.

ராமசாமிக்குள் கலக்கம். முன்னும் பின்னுமாக ஊசலாடுகிற மனக்கிலேசம்.

காலைவெயில் வாசல்படியில் விழுகிறது. வீட்டுக்குள்ளும் தாண்டிவந்து விழுகிறது. செவ்வகச் சதுரமாக கத்திரிக்கப்பட்ட வெயில். அதில் ராமசாமி கால்களின் அரைநிழல்.

ரெண்டாவது படியில் வலது பாதத்தை வைத்தான். சிமெண்டின் காலைக் குளிர்ச்சி. பாதத்தில் சுரீடுகிற குளிர்ச்சி.

துணுக்குற்ற மனசோடு நிமிர்ந்தான். அந்த மூன்று வீடுகள். அந்த இளம்பச்சைநிற வீடு. அதன் சங்குச்சர வரிசை. உள்ளே நுழைந்தால் தலையில், புஜங்களில் உரசிச் சலசலத்து விலகும்.

பார்த்தால் பச்சைக் குழந்தையாகத் தோன்றுகிறது. எச்சில் வடியும் புன்னகைச் சிரிப்போடு ஆவலோடு கைகளை உயர்த்துகிற பச்சை மழலை.

இவனுக்குள் கண்டுகிற உள் லகான் நாசித்துவார விளிம்புகளைக் கிழிக்கிற அழுத்தத்துடன் சுண்டி இழுக்கிற லகான். நிறுத்துகிற விறைப்போடு பின்னிழுக்கிற லகான்.

ஐப்பசி மாதம் தீபாவளி இன்னும் பத்து நாள் எட்டு நாளைக்குள் இருக்கும். ஊர் பூராவும் புதுத்துணி மணி எடுத்து வந்த மஞ்சள் பைகளும் டெய்லர்களை நச்சரிக்கிற மனிதக் குரல்களும் தட்டான்களாகப் பறக்கும். றெக்கையடித்துத் திரியும். கசாப்பு போடுகிறவர்கள் வீடு வீடாக விசாரித்துக்கொண்டு வருவார்கள்.

''என்ன ராமசாமி... கசாப்பு போட்டுருவமா? திகிடு முகிடான கிடா. பதினெட்டு கிலோ தேறும். அம்புட்டுப் பெருசு, நல்ல வளர்ப்பு!''

''ம்...அப்ப மொரட்டு உருப்படின்னு சொல்லுங்க.''

''ஆமாம்... தீபாவளி வாசம் வருஷம் முழுக்க மனசுலே இருக்கணும்லே? கொழுப்பு நிறைய இருக்கும். எம்புட்டுப் போட?''

''ஒரு கிலோ சேத்துக்குங்க,''

''போதுமா? ஒன்றரையா மாட்டிருவமா?''

''இல்லே போதும். ஒரு நாட்டுக் கோழி வேற வீட்டுலே இருக்கு. அதையும் தீட்டிரப்போறேன். சரியாப் போகும்!''

வீடுவீடாகக் கேட்கிறார். நின்று நிதானித்த பேச்சு கேலியும் கலகலப்புமான தூக்கலான ஸ்தாயி.

அப்துல்கலாம் வீட்டில் மட்டும் கேட்க மாட்டார். கேட்க வேண்டியதில்லை. நிர்ணயிக்கப்பட்டுப் போன ஒரு முடிவு வழக்கமாகிவிட்ட முடிவு.

தீபாவளி என்றால் ஒரு கிலோ மட்டன், ஒரு கிலோ எலும்புக்கறி.

தீபாவளிக்குப் புதுத்துணி எடுக்கமாட்டார்கள். அது ஒன்றுதான் குறை. மற்றபடி தோசைக்குப் போடு வது.கறி எடுப்பது, பலகாரங்கள் செய்வது எல்லாமே நடக்கும். அந்த மூன்று வீடுகளிலும், இந்து வீடுகளின் அதே வாசம், அந்த ராவுத்தர் வீடுகளிலும் மணக்கும். அதே கொண்டாட்டம், அதே உற்சாகம்.

ராசாத்தி, பணியாரமோ, உளுந்து வடையோ சுட்டிருப்பாள். வீட்டுக்கு நாலு என்று மூன்று கிண் ணங்களிலும் கொண்டு போவாள்.

பாத்திமாபீவி, ''என்னத்துக்கு இதெல்லாம் கொண்டு வந்துக்கிட்டு'' என்று செல்லச் சிணுங்க லோடு மறுத்துக்கொண்டே கை நீட்டி வாங்கிக் கொள் வாள். சங்கடப்படுகிற தொனியில் உளப்பெருமிதத்தை நெகிழ்வோடு சொல்வாள்.

''உங்க வீட்லேயாச்சும் இந்த ஒரு பலகாரம்தான். பாருங்க எங்க வீட்டுல எல்லாரும் கொண்ணாந்து கொண்ணாந்து குடுத்துட்டுப் போறாக. ஏகப்பட்ட பலகாரம்ங்க... ஏகப்பட்ட வகைக...''

''இருக்கட்டும்...புன்ளைக திங்கட்டும் குடுங்க'' என்று சொல்லிவிட்டு ராசாத்தி வருவாள்.

தைப் பொங்கலுக்கும் அப்படித்தான். கரும்பெல்லாம் வாங்கி விடுவார்கள்.

ரம்ஜான் அன்றைக்கு அந்த மூன்று வீடுகளும் ஏகக்களே பரமாக இருக்கும் மூன்று வீடுகளும் சேர்ந்து ஒரு செம்மறிக்கிடாய் பிடித்துக் கொண்டு வந்து கட்டி விடுவார்கள். பிள்ளைகள் முகத்தில் உல்லாச வெளிச்சம். உற்சாகத் துள்ளல்கள். பெரியவர்கள் வியர்வை விறுவிறுப்பும் உணர்ச்சிப் பரபரப்புமாக ஓடித் திரிவார்கள்.

வீடு வீட்டுக்கு பிரியாணி வந்து கொண்டேயிருக்கும். அதைச் சுமந்துகொண்டு, ஓடி ஓடிக் கொடுத்தலைவதே ஒரு கொண்டாட்டம் போல் மகிழ்ச்சியோடு செய்வார்கள்.

பிரியாணி வாசம் 'கம்ம்'மென்று மணக்கும். கடைப் பிரியாணியெல்லாம் பிச்சை வாங்கவேண்டும். அப்படியோர் வாசம். நாசிக்குள் மோதியவுடன் நாக்கில்எச்சில் ஊற வைக்கிற மணம். பட்டை-சோம்பு வாசம் மனசுக்குள் தூக்கலாக இருக்கும்.

அந்தப் பிரியாணி சாப்பிட்ட ருசியும் வாசமும் இப்பக்கூட மனசுக்குள் வந்துநிற்கிறது. அதை ருசித்துச் சாப்பிட்ட நாக்கினால், எப்படிப்போய் அதைச் சொல்ல? சாப்பிட்ட நாவினால்...அந்தத் தீயைத் துப்பவா!

நன்றியேயில்லாமல்.விசுவாசமேயில்லாமல் - அந்த வீட்டு வாசல்படியேறி அப்படிச் சொல்லவா? அந்த மனிதர்களின் கனிவு நிறைந்த புன்னகை. முகத்தைப் பார்த்து அந்த நெருப்பை வீசவா? கங்குகளையள்ளி அந்த முகங்களின் அன்புப் பூக்கள் மீது போடவா?

போட முடியுமா? போடுவதற்குக் கைக்குத் தெம்பு வருமா? மனசுக்குள் வைராக்கியம் வருமா? பழகிப் பழகி வருஷக்கணக்கான நட்பு மனசுக்கு அந்த முரட்டு பலம் வருமா? முகம் முறித்துப் பேசிவிட முடியுமா?

இடது பாதத்தை மூன்றாவது படியில் வைக்கிற ராமசாமி வெயிலின் மிருதுவில் நனைகிற தெரு. சின்னச் சின்னக்கீறல்களாகத் தெருவில் கிடக்கும் வெயில். தெரு முழுக்க வீடுகளின் நிழல்கள். நீளநீளமான காலை நேரத்து நிழல்கள். வீட்டு நிழல்களின் இடைவெளி களின் அளவுகளாக வெயில் கீற்றுகள்.

போன வருஷம்தான். கூடப்பிறந்த அண்ணன் தம்பிகளான அப்பாஸ், ரஜாக் இரு குடும்பங் களிடையே கடும் சண்டை. பெரும் சச்சரவு. ஏதோ ஒரு சொத்துத் தகராறு. பகிர்வது எப்படி என்பதில் தீராத இழுபறி. வாக்குவாதம். சண்டையும் குழப்பமும் நித்தப்பாடு என்றாகிவிட்டது. நிதம் நிதமா கூச்சலும் கூப்பாடுமாகக் கிடந்தது.

ஒருநாள்—

பெண்களுக்குள் நடந்த சண்டை, சற்றுத் தீவிர மாகி தலைமுடியைப் பற்றி இழுத்து மல்லுக்கட்டுகிற அளவுக்குப் போக... அப்பாஸும் ரஜாக்கும் ஆளுக் கொரு விறகுக் கட்டையைத் தூக்கிக்கொண்டு ஆத்திரத் துடன் பாய்ந்தனர்.

அப்துல்கலாம் தலையிட்டு, பெரும் பிரயத்தனப் பட்டு, தடுத்தார். தெருவே கூடிவிட்டது. ஆண்களும் பெண்களுமான கூட்டம். "இப்படியும் சண்டை போடுவாகளா...?" "அண்ணந் தம்பிக்குள்ளே அடி தடியா?" என்று வியப்பும் கொதிப்புமாக சலசலக்கிற கூட்டம்.

ராமசாமி சற்றே அதட்டலான குரலில், தாட்டியாகச் சத்தம் போட்டான். "என்ன நெனைச்சுக்கிட்டீங்க மனசுல? ஆளுக்கொரு கட்டையைத் தூக்குனா...

எப்படி? அடிச்சுக்கிட்டா, வெவகாரம் தீந்துபோவுமா? இதென்ன... தெருவா, காடா? இங்க இருக்கிற மனுச மக்களையெல்லாம், ஆடு மாடுன்னு நெனைச்சுக்கிட்டீங்களா? நீங்க சண்டை போட்டு மண்டையை ஒடைச்சிக்கிட்டு... மல்லாந்து கெடந்தா, நாங்க இல்லே கெடந்து சீரழியணும்?''

அப்துல் வெட்கமும் வேதனையுமாக ஒத்துப் பாடினார்.

''போடுங்க மாமு, அப்படித்தான் மண்டையிலே ஒறைக்குற மாதிரிப் போடுங்க. உங்க கூட்டாளிக மூஞ்சியிலே ரெண்டு போட்டாத்தான் இதுக ரெண்டும் வழிக்கு வரும்.''

அப்துல் அவர்களைப் பார்த்துக் கத்தினார்.

''டேய் அப்பாஸு, ரஸாக்கு... இங்க பாருங்கடா. கட்டையைக் கீழே போட்டுட்டு, புத்திக்கு வேலை குடுங்கடா. இந்தத் தெரு ஜனங்க ராமசாமி மாமு தலைமையிலே கூடி இன்னிக்குப் பஞ்சாயத்துப் பேசட்டும். அல்லாவுக்குக் கட்டுப்படுற மாதிரி கட்டுப் படுவீகளா?''

அப்துல் கலாமின் அதட்டலான உரத்த குரலுக்கு இருவரும் கட்டுப்பட்டனர். கட்டையைக் கீழே போட்டதுடன், மௌன சம்மதமாகத் தலைகளையும் கீழே தொங்கப் போட்டனர்.

அப்படியே கட்டுப்பட்டனர். தீராத விவகாரமாக இழுபட்டு, நாள் கணக்காக சண்டை சத்தமாக நீண்டு கிடந்த அந்த வழக்கு... ராத்திரி பஞ்சாயத்தில் தீர்ந்து முடிவுக்கு வந்தது.

''அல்லாவுக்குக் கட்டுப்படுற மாதிரி கட்டுப்படுவீகளா?'' அப்துல் கலாமின் உரத்த குரல்... இதோ, ராமசாமி நெஞ்சுக்குள் இப்போதும் ஒலிக்கிறது. தெரு

ஜனத்தையே அல்லாவாகக் கருதிய...அந்த மனாகாயம் ஆகாய விரிவு.

கட்டுப்பட்டு வழக்கையே— வாழ்க்கையையே— ஒப்படைத்துவிட்டு, கைகட்டி நின்ற அந்த இமாலய நம்பிக்கை.

ஆகாய விரிவான அந்த மனசுகளையும் இமாலய நம்பிக்கையையும் நோகடிக்கவா? நொம்பலப்பட்டுப் போய்க் கிடக்கிற துன்பமான நேரத்தில்... ஆறுதல் சொல்லாமல், அடிப்பதா? அந்த மெல்லிய மனசு களைக் கிள்ளவா? "எக்கேடும் கெட்டுப் போங்கள்... எங்களை விட்டால் போதும்'' என்று கயமைச் சுயநலத் தோடு சொல்லவா? ராட்சத மூர்க்கத்தோடு நெருப்பை யள்ளிக் கொட்டவா?

வெட்கத்தில் குன்றிக் கூசுகிற மனசு. பாவம் செய்யப்படுகிற நல்ல மனசின் உள் உளைச்சல். பூவின் நெஞ்சில் தீயை வைக்க முடியாத உணர்வின் நடுக்கம்.

தீயை வைத்தேயாக வேண்டும். குன்றிக் கூசுகிற மனசைக் கல்லாக்கிக் கொண்டு, சொல்லியேயாக வேண்டும். பாவம்தான். ஆனால், செய்தேயாக வேண் டும். வேறு வழியில்லை. தெருவின் முடிவு. சகலரும் சேர்ந்து பேசிய முடிவு தெருவின் நன்மைக்கான முடிவு.

வேறு கதியேயில்லை. முகம் முறித்துப் பேசித் தானாக வேண்டும்.

நாலைந்து மாதங்களுக்கு முந்தி, ஒரு மாநகரில் ஒரு போலீஸ்காரர் கொலை செய்யப்பட்ட அந்தப் பரிதாபக் கொடுமையை பயன்படுத்திக் கொண்டு, ஒரு வெறிக் கும்பல் கைகளில் ஆயுதங்களும் உருட்டுக் கட்டை களுமாக களம் இறங்கி...

மாநகரின் பதினேழு இடங்களில் காட்டுத்தனமான மனித வேட்டை, பேய்த்தனமான மூர்க்கத் தாக்கு தல்கள். நோயாளிகள்... நோயாளிகளைப் பார்க்க வந்த

உறவினர்கள் என்று சகட்டு மேனிக்கு அடிகள், வெறி பிடித்த மிருகத் தாக்குதல். திட்டமிட்ட வெறிக்கும்பலின் சதித் தாக்குதல்கள்.

ஏகப்பட்ட மனித உயிர்கள் உதிர்ந்தன. ஏகப்பட்ட கடைகள் சூறையாடப்பட்டன. மாநகரமே ரத்தக்கசிவு களோடு அழுது சிணுங்கியது. பாதிக்கப்பட்டவர்—முஸ்லிம்கள்.

ஒரு சில தலைவர்களின் கண்டன அறிக்கை களோடு... இத்தனை கொடிய மரண பயங்கரம் மறந்து போய்விட்டது. மத்திய அரசு கவிழ்க்கப்பட இருக்கிற அபாயப் பரபரப்பில்... இந்த ரத்தச் சேதாரமும் உயிர்ச் சேதாரமும் ஒரு சாதாரணச் சம்பவமாகக் கடந்துபோய் விட்டது.

இப்ப என்னடாவென்றால்... எங்கு பார்த்தாலும் வெடிகுண்டுகளின் பயங்கர அதிர்வுகள். ரைஸ்மில்லில், ரயிலில், பஸ் நிலையங்களில் எங்கும் வெடித்த, குண்டுகள் மாநகரின் அந்தப் பதினேழு இடங்களிலும் பயங்கரமாக வெடித்த வெடிகுண்டுகள் மாநகரையே அதிர வைத்து வெடித்துச் சிதறி... பலநூறு சதைச் சிதறல்களாக... மழலைகள், பள்ளி மலர்கள் பெண்கள் என்று எண்ணற்ற உயிர்த்துண்டுகளாக கடவுளின் பிள்ளைகள், சாத்தானின் இரையாக...

புலிவேஷம் கட்டிக்கொண்டு ஆடுபவனைப் போல, தேசமே தேர்தல் வேஷம் கட்டிக்கொண்டு, வண்ணக் கோலாகலப் பரபரப்பில் உச்சகட்ட உணர்ச்சி விளிம்பில் துடித்துக் கொண்டிருந்த கணத்தில்—

அந்த மாநகரக் குண்டு வெடிப்புகள்... நாடே பதறிப் பதைத்தது, அழுது கதறியது. எந்த மாநகரில், எந்நேரம் எது வெடிக்குமோ என்ற பீதியில் எல்லா ஊர் ஜனமும்.

கிலியும் பதட்டமுமாக மனிதர்கள், உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு நகர மனிதர்கள்,

தேர்தலின் திசையே மாற... தீவிரவாதிகளைத் தேடித்தேடி காவல்துறை தீவிரமாக...

பிடிபட்ட தீவிரவாதிகளெல்லாம் முஸ்லீம்கள். தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளைச் சேர்ந்தவர்கள். சின்னச் சின்னப் பையன்கள் மூளைச் சலவை செய்யப்பட்ட மனித முட்கள். மனித ஆணிகள். மனிதக் குண்டுகள்.

சகல நாளிதழ்களும் ஜனங்களின் மனக்கண்களாக தீவிரவாதிகள், வெடிகுண்டுப் புதையல்கள் பற்றியே பேசிற்று.

'தானுண்டு, தன் பாடுண்டு' என்று எந்த விகல்பமுமின்றி வாழ்ந்து கொண்டிருந்த சகல முஸ்லிம்களையும் கொலைகாரர்களைப் பார்த்த மாதிரி பிறர் பார்க்க... மனிதரை மனிதர் சந்தேகிக்க... பகையோடு நோக்க, 'உர்ர்ர்... உர்ர்ர்'ரென்று உறுமிக்கொள்ள...

நாடே ஒரு தினுசாயிற்று. மென்மை தொலைந்த மாதிரி ஒரு பிரமை.

மனித மனசுகளே முறுக்கேறின நூல்களைப் போல விறைத்துப் போயிற்று.

அன்று வாசல் கதவை திறந்து கொண்டு வெளியே வந்தார் அப்துல். கட்டம் போட்ட வெள்ளைக் கைலி, மேலே வெள்ளை ஜிப்பா, கருந்தாடி, தலையில் கறுப்புகுல்லா.

நடந்து வருகிறார். நடையில் தளர்வு. நிமிர்ந்து நடக்க முடியாமல், தயங்கித் தயங்கிப் பார்க்கிற அயற்சி. சுய உறுத்தலால் வந்த சோர்வு.

ராமசாமியைப் பார்த்து, ஒரு வேதனைச் சிரிப்புடன் வீட்டு முற்றத்துக்குள் வருகிற அப்துல்.

''என்ன மாமு...''

''சும்மாதான் நிக்கேன் மாப்ளே,''

''என்ன மாமு... இப்படிப் பண்றாங்க? மனசே தாங்கலே''

"எதைச் சொல்றீக?''

"வெடிகுண்டைப் போட்டு மனுச உசுர்களைக் கொல்றாங்களே... அதைத்தான் சொல்றேன் மாமு. பாவிப்பயக. இப்படிச் செய்கிற கொலை பாதகம், அல்லாவுக்கே துரோகம்.''

''பதிலுக்குப் பதில், பழிக்குப் பழின்னு அவுக ஞாயம் சொன்னாலும் சொல்லாம்லே?''

''இல்லே மாமு... நேர்மையான முஸல்மான் எவனும் பழிக்குப் பழிங்குற பாவத்தைச் செய்யவே மாட்டான்! பாவம் பண்ணுன பாவிகளைத் தண்டிக்குற அதிகாரம்... அல்லா ஒருத்தருக்குத்தான் உண்டு.''

''பெறவு? வரிசை வரிசையா குண்டுக வெடிக்குதே...?''

''அல்லாவோட படைப்புகள்தான் மனுச உயிர் கள். அல்லா படைத்த படைப்புகளை, அழிக்குற ராட்சத அதிகாரம் எவருக்குமில்லே... அப்படி அழிக் கிறவன் சாத்தான்.''

''அப்படியா சொல்லுதீக?'' ராமசாமியின் உயிரற்ற குரல். மனசுக்குள் ஒட்டாத உதடுகளின் சவச்சலனம். ஈடுபாடில்லாத வெற்றுப் பேச்சு.

ராமசாமி முகத்தையே ஓர் ஆவலோடு எதிர்பார்த்து ஏமாந்த அப்துல். அதன் வாட்டம், ஏமாற்ற அயற்சி.

''என்ன மாமு, இப்படிச் சொன்னா... எப்படி...?''

''நீங்க என்ன சொல்லணும்னு எதிர்பார்க்கீக!''

''நாம எப்பவும் போல தாயா புள்ளையா யிருப்போம். மாப்ளே. நமக்குள்ளே என்ன கசப்பு இருக்கு'ன்னு சொல்லுவீகன்னு நெனைச்சேன் மாமு.''

அப்துல் முகத்தைப் பார்க்காமல் தவிர்த்த ராமசாமி. வெட்ட வெளியில் அலைந்த பார்வை முற்றத்தில் தவழ்ந்த பார்வை.

''என்ன மாமு, பேச மாட்டேங்குறீக?''

பேசுறாப்லே ஒண்ணுமில்லே மாப்ளே. மாறி மாறி வெடிக்குற குண்டுக மாண்டு மடியுற மனுசங்க, தோண்டித் தோண்டி எடுக்குற குண்டுக, போட்டு வெச்சிருந்த நாசத்திட்டம் இதெல்லாம் பாத்தா... மனசுக்கு என்னமோ மாதிரியிருக்குல்லே மாப்ளே?''

''மனுசனா பொறந்த யாருக்கும் இந்த பயங்கரங் களைச் சகிச்சுக்க முடியாது மாமு. இந்தப் படுபாதகங் களை நாங்க செய்யலை மாமு. அல்லாவைக் கும்புடுற எந்த முஸல்மானும் இதைச் செய்யலை மாமு,''

அப்துல்கலாமின் குரலில் ஒரு கரகரப்பு. உணர்ச்சி வயப்பட்டுப் பேசுகிற உயர் ஸ்தாயி. தன்னை, தன் மனத்தூய்மையை, நிரூபிக்கிற உத்வேகம்.

அதனால் சலனப்படாத ராமசாமியின் இறுக்கம். கம்மிய குரலில் கிண்டலாகக் கேட்கிறார், ''வேற... யாரு?''

''பாபர் மசூதியை நீங்க இடிச்சீர்களா மாமு?''

''இல்லே''

''அதே மாதிரித்தான் இதுவும். இது நாங்க இல்லே. இதுலே எங்களுக்குச் சம்மதமில்லே, எங்க் இஸ்லாத் துக்குச் சம்மதமில்லே, அல்லாவுக்குச் சம்மதமில்லே''

சம்மதமற்ற வெற்றுப் பார்வைகளோடு அசிரத்தை யாகக் கேட்டுக்கொண்டிருந்த ராமசாமி, சட்டென அப்துல் முகத்தைப் பார்த்தான். சத்திய ஒளி தெறிக்க விழித்த அந்தக் கண்களைப் பார்த்தான். உண்மை மனசின் உயிராக முகத்தில் ஜொலித்த உணர்ச்சிப் பிரகாசத்தைப் பார்த்தான்.

''அப்படின்னா... சொல்லுதீக?''

''ஆமா... மாமு, இஸ்லாமியனைக் காப்பாத்த நெனக்கிற யாரும், இந்தப் படுநாச பாவத்தைச் செய்ய மாட்டாங்க. ஏன்னா... இந்தக் காரியங்களாலே இஸ்லாமியர் யாரும் காப்பாத்தப்படலை. நாதியத்துப் போயிட்டாக. நல்லவுக ஆதரவை எழந்துட்டாக. பழிக்கு ஆளாயிட்டாக, சந்தேகப் பார்வைக்கு உள்ளாகிட்டாக''

அப்துல்கலாம் பேச்சின் உணர்ச்சி வேகம் மளமள வென்று தெறித்து வந்துவிழுந்த மனசின் வார்த்தைகள். அதிலிருந்த சத்தியம் மறுக்கமுடியாத பொருத்தம். தர்க்க நியாயம்.

ராமசாமிக்குள் ஒரு மனக்கனிவு. இறுக்கம். உடைந்து, நெகிழ்ந்து போன மனசின் குழைவு. குழைந்த அன்பின் கனிவோடு மென்னகை புரிந்த ராமசாமி, அப்துல் தோளில் கைபோட்டான். ஆதர வாகப் பற்றிய கையின் மொழியில் நெகிழ்ந்த மனசின் முகம் தெரிந்தது.

ஆழ்ந்த பெருமூச்சு விட்டான் ராமசாமி.

''சரி... விடுங்க மாப்ளே. யாரும்... எங்கேயும், என்னத்தையும் செஞ்சு தொலைச்சுட்டுப் போகட்டும்' பாவம் செஞ்சவன், பாவத்தோட வெனையையும் அனுபவிச்சுட்டுப் போவட்டும். நாம எப்பவும் போல இருந்துட்டுப் போவோம், மாமா மாப்புள்ளையா, போதுமா?''

அப்துல் கலாமின் கண்களின் உக்கிரம் சட்டென்று நிறம் மாறியது. மனசின் உணர்வுகள், கண்ணில் கலங்கி, கசிந்து, நீர் கோத்தது. நீர் மல்கிய கண்கள். அழப்போவதைப் போலத் துடிக்கும் உதடுகள். கன்ன மேட்டில் மெல்லிய துடிப்பு.

ராமசாமி பதைத்துப் போனான்.

''ச்சீய்...இது என்ன மாப்ளே? சின்னப் புள்ளை கணக்கா அழுதா எப்படி? இங்கே பாருங்க...சாமி.

கீமியெல்லாம் ஒரு பக்கத்துல இருக்கட்டும். மொதல்லே, நாம மனுசங்க. மனுசத்தனத்தை தொலைக்காத மனுசங்களா நாம இருப்பம். தாயா புள்ளையா, பாசம் பிரியத்தோட இருந்துட்டுப் போவம். என்ன நா...ஞ் சொல்றது, மாப்ளே?''

ராமசாமியின் வலது உள்ளங்கையைப் பற்றிய அப்துல் கலாமின் கையில், லேசான நடுக்க அதிர்வு. ஈரக்குளிர்ச்சி.

''இதுபோதும் மாமு...இந்த மனப்பான்மை நமக்கு நெரந்தரமா இருக்கட்டும் மாமு...அல்லா தயவு னாலே.''

நா தழுதழுத்து, தடுமாறித் தத்தளித்த அப்துல் கலாமுக்கு ரொம்ப நேரம் பசி. தைரியம் சொல்ல வேண்டியிருந்தது.

மழையில் நனைந்த கோழிக்குஞ்சைப் போல பாதுகாப்பிடம் தேடித்தவித்த அப்துல்கலாமின் உணர்வுகள். பயமும், தோழமையுமாக நம்பிக்கைக்கு ஏங்கிப் பார்த்த அவரது சோகப்பார்வை. தாயைப் பார்த்த பாசப் பரவசத்தோடு வேகமாகத் தவழ்ந்துவந்து மடியேறுகிற மழலையின் மனவெள்ளை.

அவர் முகத்தின் உணர்வுகளைப் பார்த்தாலே... ராமசாமியின் உள்மனசுக்குள் ஒரு பிசைவு. துயரமும் வருத்தமும் கலந்து வாடிக்கிடந்த அப்துலைப் பார்த்த மனசுக்குள் ஒரு துன்ப நிழல்.

அன்புக் கதகதப்புக்காக ஓடித் தவழ்ந்து வந்த அந்த மழலையை, கழுத்தைத் திருகிப் போடவா? தோழமையோடும், உரிமையோடும் வந்து நின்று புலம்பிய அந்தச் சோகப் பிம்பத்தை, மேலும் காயப் படுத்தவா? நம்பிவந்து தஞ்சமடைந்த புறாவை, அடித்துத் துரத்தி கழுகிடமே ஒப்படைக்கிற இழிவைச் செய்யவா?

ராமசாமியின் மனசாட்சிக்குள் முள்முள்ளான அழுத்தல். சிபியாக இருக்க முடியாமல்...காயம்பட்ட புறாவை பருந்திடம் ஒப்படைக்கிற கயமையின் வருத்தப் பிசைவு. அடிமனசின் உள்காந்தல். குற்ற உணர்வின் முகம் கீறல்கள்.

வேறுவழியில்லை. தெருவின் முடிவு. தெரு ஜனத்தின் முடிவு. பயத்தின் உச்சத்தில் கதிவேரற்று எடுத்த முடிவு. மனசின் ஈரத்தையெல்லாம், மனுத்தன்மையையெல்லாம், இயல்பான மனித நேயத்தையெல்லாம் பொட்டலம் கட்டி, முடிஞ்சு போட்டு, மனசின் ஓரத்தில் மூலையில் போட்டு விட்டு...வேதனையோடும் வருத்தத்தோடும் எடுத்த முடிவு...விருப்பமேயில்லாமல் எடுத்த முடிவு. பாவம் என்று தெரிந்தே... பயத்தில்...சுய பாதுகாப்புக்காக எடுத்த முடிவு.

மூன்று வீடுகளைக் கடந்துவிட்டான், ராமசாமி, காலில் இரும்புக்குண்டு இழுபடுகிற மாதிரியோர் உணர்வு. கால் சுமை. நகர மறுத்து கனக்கிற பாதங்கள் நடுங்குகிற கால் விரல்கள். உள்ளங்காலுக்குள் மனக் கூச்சம். அதன் நடுக்கச் சிரிப்பு.

ஃ ஃ ஃ

மாநிலத் தலைநகரில் என்ன நடந்ததோ... நாளிதழ்களின் தொடர் வற்புறுத்தலில் ஏது நடந்ததோ... ஏழெட்டு நாட்களாக போலீஸ் தடபுடல்கள் அச்சுறுத்துகிற ஆரவாரங்கள். அவசரப் பரபரப்புகள். தெருவே நடுங்கிப் பதறியது. குலை நடுங்கியது...கிலியிலும் பீதி உணர்ச்சியிலும் முகம் வெளுத்தது, தெரு.

எலியின் மீது பாய்கிற பூனையின் வேகத்தில் 'சர்ர்ர், புர்ர்ர்'ரென்று வந்து நிற்கிற வெண்ணிற ஜீப். ஜீப்பின் உறுமல் நிற்பதற்குள் பூட்ஸ்களின் 'தடா புடா, தடா புடா' சத்தம். ஓடுகிறவனைத் துரத்துகிற துரிதத்தில் இறங்கிப் பாய்கிற போலீஸ் பட்டாளம்...போகிற போக்கில் வேகப் பரபரப்பு. எல்லாக் கதவுகளையும்

தட்டுகிற மூர்க்கம். கால்களில் தட்டுப்பட்டதையெல்லாம் எற்றுகிற அடாவடி.

அப்துல், அப்பாஸ், ரஜாக் வீடுகளை முற்றுகையிடுகிற போலீஸ் படை. வீட்டு வாசல்கதவை பூட்ஸ் காலால் உதைக்கிற ராட்சதம். தடாலடிப் பிரவேசம். பூட்ஸ் கால்களுடன் வீட்டுச் சோதனைகள்.

பதுங்கியிருக்கிற பயங்கரவாதிகளைப் பிடிக்கிற கெடுபிடியாம். விசாரிக்கிற விசாரிப்பில் அராஜகம். போடா...வாடா என்பது...ரொம்ப மரியாதை வார்த்தைகள். முஸ்லீம் பெண்களை கேள்வி கேட்கிற மூர்க்கம். வார்த்தைப் பிரயோக முரட்டுத்தனங்கள். முதல் நாள்... எல்லோருக்கும் பாவமாக இருந்தது. பரிதாபமாக இருந்தது. ஆயினும்—

தலையிட முடியாத கெடுபிடி. சோதனைச் சுதந்திரம். ''உங்க ஜோலிகளைப் பாத்துட்டுப் போங்க' என்ற துரத்தல்கள் வேறு.

காலையில், பகலில்... மாலையில்... நள்ளிரவு நேரத்தில்...வைகறை இருட்டில் என்று எல்லா நேரத்திலும் போலீஸ் பிரவேசம். போலீஸ் படையெடுப்பு. தெருவே யானை புகுந்த மண்பாண்டக் கடையாக...

பெண் பிள்ளைகள் பதறிப் பம்மினர். 'என்ன செய்வார்களோ?' என்று எல்லோருக்கும் அடிவயிற்றில் புளியைக் கரைத்தது. 'பகீர்...பகீர்' என்கிற பீதி உணர்ச்சி.

ஏழெட்டு நாட்களாகத் தொடர்ந்த கெடுபிடிகள், அடர்ந்த அடாவடிகள். முடிவற்று நீள்கிற படையெடுப்புகள். அச்சுறுத்தலான தடாலடி மிரட்டல்கள்.

தாங்கவே முடியவில்லை. ராத்திரியிலும் பகலிலும் ஜனங்கள் தூங்கமுடியாமல் தவித்தனர்.

பொறுக்க முடியாத மனச்சஞ்சலம். பீதி, அடிவயிற்றில் நெருப்புச் சீறலான கிலி,

அரவமில்லாமல் தெரு ஜனங்கள் கூடினர். ஆள் ஆளுக்குப் புலம்பித் தவித்தனர். பதறிச் செத்த கதைகளைச் சொன்னார்கள். கண்ட கெட்டக் கெட்ட கனாக்களைச் சொல்லி அங்கலாய்த்தனர். ஒரே கசகசப்பு. வெட்கமற்று கொட்டித் தீரவேண்டிய கோழைத்தனம். உயிரின் முதுகில் உரசுகிற அன்றாட மிரட்டல் கத்திகள்.

கடைசியாக...

இப்படி முடிவாயிற்று.

பரீட்சை முடிஞ்சு போச்சு. சம்மர் லீவுதான். பிரச்னைக்குரிய மூன்று ராவுத்தமார்களிடமும் நைச்சியமாகப் பேசி... மனம் புண்படாமல் எடுத்துச் சொல்லி... 'சம்மர் லீவ் ரெண்டு மாசத்துக்கும் வேற எங்காச்சும் போய் இருக்கட்டும்... அதுக்குள்ளே பதட்டம் கொறைஞ்சிரும். அப்புறம் இங்கேயே வந்துறட்டும்'னு புரிய வைக்கணும். குடும்பத்தோட அவங்களைத் துரத்தணும். வெரட்டியடிக்கணும்.

சரி... அப்படி யாரு நைச்சியமாப் பேசுறது?

ராமசாமிதான்னு எல்லாரும் ஏகக் குரலில் சொல்லி, அதையே முடிவாக்கினர். கட்டளை மாதிரி சொல்லி விட்டனர்.

ராத்திரி முடிவாயிற்று. இதோ...

ராமசாமி ஏகப்பட்ட மனக்குழப்பங்களோடு, பின்னலாடுகிற கால்களின் தயக்கங்களோடு... பத்தாவது வீட்டைத் தாண்டி விட்டான். இன்னும் இரண்டு வீடுகள் தான்.

எப்படிச் சொல்ல? உயிருக்கு உயிராக இம்புட்டுக் காலம் பழகுன அன்பான அருமை மனுசங்ககிட்டே என்னன்னு சொல்ல? ஆதரவு கேட்டு, மழலை மாதிரி மடியைப் பிடிக்கிறபோது, எப்படி உதற? 'எங்க தொல்லை தீந்தாப் போதும். நீங்க போய்

தொலைங்க'ன்னு சுயநல வெறியோட சொல்லிட முடியுமா...?

சொல்லித்தான் ஆகணும். வேற வழியில்லை. ராமசாமி நடக்கவில்லை. ஊர்ந்தான். இளகிப் பாகாகும் மனசை இறுக்கிப் பிடித்துக்கொண்டான். தெருமக்கள் பயந்து சாகிற பயங்கரத்தை—போலீஸைக் கண்டாலே கதிகலங்குகிற பெண்களை, நினைத்துப் பார்த்து மனசைக் கல்லாக்கிக் கொண்டான். தூக்கமற்ற கிலி ராத்திரிகளை எண்ணி எண்ணி, உணர்வுகளை உறைய வைத்துக்கொண்டான். பாறையாக்கிக் கொண்டான்.

வாசலின் அழகுப்பொருளாகத் தொங்குகிற சங்குசர மாலைகள் தயங்கி, தயங்கி... வாசல்படியில் கால் வைத்தான். ரெட்டைக் கதவில் விரலை வைத்துத் தட்டினான்.

அப்துலின் அதிர்ந்த அச்சக்குரல் "யாரது?"

ராமசாமியின் தர்மசங்கடக் குரல். "நாந்தான் மாப்ளே."

கதவைத் திறக்கிற அப்துல், கைலியும் வெறும் கதர்ப்பனியனுமாக அப்துல். ராமசாமியின் கவனத்தை சடேரென்று அடித்து, ஒரு சுண்டு சுண்டியிழுக்கிற வீட்டின் உட்புறச் சூழல்.

பெரிய பெரிய பொட்டலங்கள், பெரிய சூட்கேஸ்கள்... காலி செய்து கொண்டு புறப்படுகிற யத்தனிப்பில் வீடு, அப்புறப்படுத்தப்பட தயார் நிலையில் மூட்டைகட்டி வைக்கப்பட சாமான்கள்.

பாத்திமா பீவி தெரியவில்லை. ஆனால், அவளின் விசும்பல் சத்தம் அரூபமாக வருகிறது.

ராமசாமி அதிர்ந்து போனான்.

"என்ன மாப்ளே... இது?"

அப்துல் சிரித்து மழுப்பினான். சகஜ பாவனை. பொய்யான சகஜ பாவனை. பொய்முகச் சிரிப்பு.

"ஒண்ணுமில்லே மாமு... ஸம்மர் லீவு. புள்ளைக படிப்பு இல்லே. அப்படியே நாகூர் பக்கம் போயட்டு... ரெண்டு மாசம் ஜாலியா ஒரு டிரிப் அடிச்சுட்டு... வரலாம்னு ஒரு யோசனை...'

"நெஜம்மாவா, மாப்ளே?"

"ஆமா... மாமு"

"இல்லேண்ணே... அவரு பொய் சொல்றாரு. உசுருக்கு உசுரானவங்க கிட்டேயும் உள்ளதை மறைச்சா... எப்படி?"

அருபமாக வருகிற சத்தியம். ஒலியாக வருகிற உறவு. சத்தமாக முகம் காட்டுகிற பாச அந்நியோன்யம்.

"என்ன மாப்ளே, தங்கச்சி என்னமோ சொல்லுது?"

தலை கவிழ்கிற அப்துல். அழுகை முட்டும் கண்களை மறைக்கிற யத்தனம். உலர்ந்த உதடுகளை நாவால் ஈரப்படுத்திக் கொள்வதன் மூலம், உணர்ச்சியைக் கட்டுப்படுத்துகிற முயற்சி.

"ஆமா... மாமு"

"என்ன ஆமா...?"

"யாரோ எங்கோ சிலரு... செய்ற பயங்கரவாதம். கொலை பாதகங்க. ஓடி ஒளியுற தீவிரவாதிகளை வேட்டையாடிப் பிடிக்கவேண்டிய கட்டாயத்துலே போலீஸ். ஏழெட்டு நாளாக போலீஸ் பண்ற கெடுபிடியிலே எங்களுக்கும் அநியாயமான தொல்லை. எங்களாலே நம்ம தெருஜனம் பூராத்துக்கும் வேண்டாத தொல்லைக. தாயா புள்ளையா பழகுன நம்ம தெரு ஜனத்துக்கு தொல்லையும் துக்கமும் வர்றதுக்கு நாங்க காரணமா இருக்கலாமா? அதைவிடப் பெரிய பாவம் என்ன இருக்கு. மாமு?" அதனாலேதா...''

"அதனாலே?"

ராமசாமியின் கடுப்பான கேள்வி. சோகமாக விசும்புகிற பாத்திமா பீவி, பிறருக்குத் தீங்கு நேரக் கூடாது என்று நினைக்கிற மானுட மேன்மைப் பண்பில் கனிந்து நிற்கிற அப்துல். அவரது துயரார்ந்த

வார்த்தைகள். சுயவதைக்குத் தன்னையே உட்படுத்திக் கொள்கிற மனத்தீவிரம். தன்னைத் தானே அகதியாக்கிக் கொள்ள முனைகிற பொது நல மனப்பான்மை.

ராமசாமியின் மனசுக்குள் எங்கோ ஒரு சிறிய உடைப்பு. மடைக்கசிவு. மடையையே உடைத்துக் கொண்டு வெள்ளமாகப் பாய்கிற மானுடப் பிரவாகம்.

''சொல்லு மாப்ளே, என்ன அதனாலே?'' அதட்டலாக ராமசாமி கம்மிய குரலில் அழுகைக் கசிவுகளோடு அப்துல்.

''நாங்க டேராவை காலி பண்ணிகிடுதோம். நாங்க குடியிருந்தாத்தானே போலீஸ் தொல்லை? நாங்க போயிடுறோம்.''

''எங்க?''

''எங்கேயோ?''

''எங்கேயோன்னா...? இந்தியாவைத் தாண்டியா? மனுச சாதிக இல்லாத எடத்துக்கா?''

அப்துலின் திடுக்கிடலான நிமிர்வு...

''மாமு''

''மாப்ளே, நீங்க எங்கயும் போக வேண்டாம். நாங்க எல்லாம் மனுசங்கதான்னு நம்புனா... போகவேண்டாம். 'இந்தத் தெருவே இந்துத் தெரு மட்டுமில்லே, நம்ம தெரு'ன்னு நெனைச்சா... எங்கயும் போகக் கூடாது. நீங்க போனா... எங்களைக் கேவலப்படுத்திட்டுப் போற மாதிரி...''

''மாமு...''

''என்ன சொல்தீற மாப்ளே?''

''உங்க சொல்லு, அல்லா சொல்லு மாதிரி. என்னிக்காச்சும் மீறியிருக்கேனா...?''

''இருங்க... வர்றது எதுவானாலும், எல்லோரும் சேர்ந்து சமாளிச்சுக்குவம்... பாத்திமா, அண்ணன்மாரை கோழைன்னு நெனைக்காதே. மாப்ளே கிட்டே சொல்லு. தைரியமா இருங்க...''

ராமசாமி திரும்பினான். தோளில் உரசி சங்கீதச் சலங்கையாக சலசலத்த சங்குச்சர மாலைகள்... இறங்கினான்... தெருவில் கால்பதித்தான்.

நத்தையாக ஊர்ந்து ஊர்ந்து போன ராமசாமி, இப்போது சிங்கம் போல கம்பீரமாக நடந்தான்.

பழனிச்சாமி எதிர்ப்பட்டான்.

"என்னண்ணே... சொல்லிட்டீங்களா?"

"சொல்லிட்டேன்..."

"என்னன்னு...?"

"எங்கேயும் யாரும் வெளியேறிப் போக வேண்டாம்னு!"

"ஐயையோ... போலீஸ் வந்தா...?"

"வேத்து முகத்தோட அந்நியன் எவன் வந்தாலும் நாங்களே கோழியமுக்குற மாதிரி அமுக்கி, கொண்ணாந்து ஒப்படைச்சிடுறோம். மூணு முஸ்லீம் குடும்பங்களும் அதைச் செய்யும். அதுக்கு நாங்க கேரண்டின்னு போலீஸ்கிட்டே நாம எல்லோரும் ஒண்ணாச்சேந்து சொல்லிருவம். வீணா இங்க போலீஸ் வரவேண்டாம்னும் கட்டண்ரைட்டாச் சொல்லிருவம்..."

"இதுக்கு நம்ம தெரு ஜனங்க ஒப்புக்குவாங்களா?"

"மனுசங்களா இருந்தா, ஒப்புக்குகிட வைப்போம்."

"அப்பச் சரி..."

பழனிச்சாமி முகத்திலும் ஒரு திருப்தியின் பிரகாசம். ஒரு மனச் சிக்கலிலிருந்து விடுபட்ட ஆசுவாசம்.

மளமளவென்று கம்பீரமாக நடந்த ராமசாமி, நெஞ்சுயர்த்திய பெருமிதத்தோடு வாசல்படியில் கால் வைத்து ஏறினான்.

மிருகத்தனமான முடிவுகளும், நினைவுகளுமான மனச்சுவையோடு குழப்பத்துடன் படியிறங்கிய ராமசாமி, தன்னியல்பான மனுசப்பண்பில் மனுசத்தனமான உன்னதக் காரியத்தைச் செய்துவிட்ட நிம்மதியோடு வீட்டு வாசல்படியேறினான்.

"நினைச்சதுக்கு மாறான ஒண்ணைச் செஞ்சாலும், செய்த காரியம் சரியானதுதான்" என்கிற தெளிவு ராமசாமிக்குள் ஒரு வெளிச்சமாகப் பரவியது.